

# மாபெரும் பொக்கிஷம்

J.C. சோட்

இயேசு பரலோக ராஜ்யம் அல்லது கட்டப்படும் திருச்சபை எவ்வாறாக இருக்கும் என்று பல விளக்க உவமைகள் மூலம் கூறினார். அவற்றில் இரண்டு உவமைகள் ஒன்று போல் இருக்கின்றன.

''அன்றியும் பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் வாங்கு -கிறான். மேலும், பரலோக ராஜ்யம் நல்லமுத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான். (மத்தேயு 13:44-46)

உவமைகள் என்று சொல்வதை தற்காலத்தில் எடுத்துக்காட்டு என்றும் சொல்லலாம். உலகப் பிரகாரமான கண்ணால் காணக்கூடிய ஒன்றை வைத்துக்கொண்டு அதன் மூலம் பரலோக சத்தியங்களை விளக்குவது. இந்த இரண்டு உவமைகளிலும் பரலோக ராஜ்யம் அல்லது கிறிஸ்துவினுடைய சபை என்பது நிலத்தில் புதைக்கப்பட்ட ஒரு பொக்கிஷம் என்று கூறுகிறார். உலகப் பிரகாரமான பொக்கிஷம் தங்கம், வெள்ளி விலையுயர்ந்த நகைகள் போன்றவை; முக்கியமானதும் விலையுயர்ந்ததுமானது. மேலும், இந்தப் பொக்கிஷம் மறைக்கப்பட்டதாகவும் கவனிக்கூடாதது

-மாய்க் கூறப்படுகிறது. மற்றவர்கள் இதைக் காணவில்லை அல்லது, கண்டும் அதன் மதிப்பை அறிந்து கொள்ளவில்லை. அதன் மதிப்பை உணராதபடியால் அப்படியே போய் விட்டனர். ஆனால் இந்த மனுஷன் தேடியதன் விளைவாகவோ அல்லது எதிர்பாராதவிதமாகவோ, கண்டுகொள்ளுகிறான். அதைக்கண்ட பின், அதன் மதிப்பை உணர்ந்து மறைத்து வைக்கிறான். பிறகு தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறான். அந்த நிலம் வாங்கப்பட்டபின் மறைந்து கிடக்கும் பொக்கிஷமும் அவனுக்குச் சொந்தம். அதுபற்றி அவன் விரும்பியபடி செய்து கொள்ளலாம். இரண்டாவது உவமையும் முதலாவது கூறப்பட்டது போன்றதே. ஆனால் இதில் இந்த மனுஷன் முத்துக்களைத் தேடிக் கொண்டிருக்கிறான். ஏதோ ஒரு முத்துக்காக அல்ல தனிச்சிறப்புள்ள விலையேறப்பட்ட முத்துக்களாகத் தேடிக் கொண்டிருக்கிறான். அதன் மதிப்போ மற்றெல்லாவற்றையும் விட அதிகமானது. அவன் ஒரு வியாபாரி. எதைத் தேடுகிறோம் என்பதை அறிந்திருந்தான். அவன் தேடினான், அதில் வெற்றியும் கண்டான். அந்தத் தனிச்சிறப்புப் பெற்ற முத்தைக் கண்டுபிடித்தபின், தனக்குண்டான யாவற்றையும் விற்று விலையேறப்பட்ட முத்தை வாங்குகிறான். அந்த முத்து அவனுடையதாகவும் அதைத்தன் விருப்பப்படி வைத்துக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. அவன் அதை வைத்துக் கொள்ளலாம். பிறருக்குக் காட்டலாம் அல்லது பெரிய லாபத்துக்கு விற்று விடலாம்.

நமது வாழ்க்கையிலும், சிலர் நிலங்களை வாங்கி உயர்ந்த விலைக்கு விற்று அதன் மூலம் நல்ல லாபம் சம்பாதிக்கிறதைக் காண்கிறோம். ஒருவேளை அது ஒரு எண்ணைக் கிணறாக இருக்கலாம், அல்லது மரங்களடர்ந்த காடாக இருக்கலாம். அவைகளை விற்று லாபத்தைக் கொண்டு வால் - மார்க்கட், சாம்ஸ் அல்லது மைக்ரோசாப்ஃட் ஆகியவற்றில் முதலீடு செய்து பெரும் பொருள் ஈட்டலாம். இந்த முயற்சிகளில் சிலர் வெற்றியும் பலர் தோல்வியும் காண்பது ஏன்? ஏனெனில் அந்த முயற்சியில் எதைப்

பெற விழைகிறோம், என்ன தரிசனம், அந்தத் தேடுதலுக்கு என்ன கிரயம் செலுத்துகிறோம், அதற்குத்தக்க பலன் தான் கிடைக்கும். பலருக்கு தமக்குக் கிடைப்பதோடு திருப்தியடைந்து எங்கே எந்த நிலையில் இருந்தாலும் போதும். அவர்கள் அதற்காக அதிக முயற்சி செய்வதில்லை, மேலே கீழே எதுவாயினும் அவர்களுக்குப் போதும். அதனால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அந்த சிறந்த ''பொக்கிஷத்தைக்'' கண்டுபிடிப்பதில்லை.

ஆவிக்குரிய பொருளில் ராஜ்யம் என்றால் சபை என்பது தேவ சத்தியம். அதுவே பொக்கிஷம். அது உலகில் இருக்கிறது; இருந்து கொண்டுதானிருக்கிறது; அது ஏதோ ஒரு சபையல்ல, பலவற்றில் ஒரு சபையுமல்ல. அவ்வளவுதான்.

திருச்சபையைப்பற்றிய குறிப்பை நாம் இப்பொழுது பார்ப்போம். ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபை - இதைப் பற்றித்தான் வேதம் கூறுகிறது. நமது ஆண்டவர் எருசலேமில் சபை கட்டிய பிறகு (அப்போஸ்தலர் - அதிகாரம் -2) எங்கோ ஒரு இடத்தில் அது இருந்து கொண்டிருக்கிறது. இதுநாள் வரையிலும், இனிமேலும் இருக்கும் ; நித்திய காலமாக இருக்கும் (லூக்கா 1:33, 1 கொரி 15:24).

கிறிஸ்துவினுடைய சபையானது தெளிவாக விளக்கமாக வேதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மக்கள் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஏனெனில், பெரும்பான்மை யானவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. அல்லது அதைத் தேடவில்லை; ஒருவேளை கண்டுபிடித்தாலும் அதன் மேன்மையை உணர்ந்து கொள்வதில்லை. மக்கள் பல்வேறு திசைகளில் செல்கின்றனர், பல இடங்களில் பார்க்கிறார்கள், உண்மையான பொக்கிஷத்தைக் காணாத குருடர்களாகி விடுகிறார்கள். மெய்யான பொக்கிஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், ஏமாற்றப்பட்டு, போலியான ஏதோ ஒன்றில் போய் முடிகிறார்கள். அந்தச் சபை மனிதர்களால் துவக்கப்பட்டது, மனிதர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்களின் நிறுவனர்கள் கூட நிறைவேற்ற முடியாத ஒன்றில் போய் இவர்களின்

தேடுதல் முடிந்து விடுகிறது. மனிதர்கள் ஏற்படுத்திய பாரம்பரியம் மனிதன் உண்டாக்கிய மதம் - இன்று இவைகள் தான் காணப் படுகின்றன. மெய்யான பொக்கிஷத்தைக் காண்பதேயில்லை. மனிதன் உண்டாக்கிய மதத்திற்காக முயற்சியோ, அர்ப்பணிப்போ தேவையில்லையே. அதனை பெரிய கிரயம் கொண்டு பெற வேண்டியதும் இல்லையே.

இயேசு இதைப்பற்றி இவ்வாறு கூறுகிறார் : ''பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலேயே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினால் அநேக அற்புதங் களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத் 7:21-23)

இயேசு கூறிய அந்த விலையேறப்பட்ட பொக்கிஷத்தை நாம் இந்தக் காலங்களில் காணக்கூடுமா? உண்மையில் அதனைத் தேடினால் காண முடியும். தேவனுடைய வார்த்தையை ஆழமாக வும், வாஞ்சையுடனும் கற்போமாகில் அதனைக் காண முடியும். அது எளிமையாகவும், விளக்கமாகவும் இருக்கிறது. பொக்கிஷத்தை உண்மையாக அதன் மதிப்பை உணர்ந்து தேடவேண்டும். அந்த பொக்கிஷத்துக்காக எல்லா தடையான காரியங்களை அகற்றிவிடத் தயாராகி, என்னவந்தாலும் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிவேன் என்றிருப்பானாகில் அதைக் கண்டு கொள்வான். தேவன் மேல் நம்பிக்கை வைத்து பாவத்துக்கு வருந்தி மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தரின் சபையின் அங்கத்தினரானால் அந்தப் பொக்கிஷத்தைக் கண்டு கொண்டவன் ஆவான். அவன் முறுமுறுத்துக்கொண்டும்

தேவனிடம் வாக்கு வாதம் செய்து கொண்டும் வேறு எவரிடமும் தர்க்கம் செய்து கொண்டும் இருக்க மாட்டான். ''கர்த்தாவே நீர் கட்டளை தாரும் நான் செய்கிறேன்'' என்று கூறும் மனோபாவம் இருக்கும். பொக்கிஷத்தைக் கண்டபின்னர் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட பின் தேவன் தனக்கு என்ன கட்டளையிடுகிறாரோ அதன்படி செய்து அந்தப் பொக்கிஷத்தைத் தனதாக்கிக் கொள்வான். இதற்கு ஏதாவது பலன் உண்டா? ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள். இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' என்று இயேசு கூறினார். (மத் 6:33)

அந்தப் பொக்கிஷத்தை நாம் பெற்றுக் கொண்டபின் நமக்கு எப்படி இருக்கும் என்று சற்று எண்ணிப் பார்ப்போம். பரலோக ராஜ்யம் அந்தச் சபை, இது சத்தியம்; அதனால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமா, நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை, ஆம் இத்தனையும் அதன் பலன்களல்லவா! தேவ சித்தத்தைச் செய்தோம் என்று தேவ வார்த்தைகளின் மேல் நிலைநிற்கிறவன் வித்தியாசமான ஓர் மனுஷனாக இருக்கக் கூடும். கிறிஸ்து ஸ்தாபிப்பேன் என்று சொன்ன அந்தச் சபையின் உறுப்பினராக இருக்கிறோம் என்ற எண்ணம் எவ்வளவு அருமையானது. (மத் 16:18) எந்த மணவாட்டிக்காக அவர் மரித்தாரோ (எபேசி 5:23) எந்தக்கூட்ட மக்களின் இரட்சகராக இருக்கிறாரோ, எதற்காக ஒருநாள் திரும்ப வருவாரோ, எவர்களை அழைத்துச் சென்று தேவனிடம் ஒப்படைப்பாரோ, எவருடன நித்திய காலமாக இருப்பாரோ அந்த நிலை எவ்வளவு பரவசமானது. (1 கொரி 15:23,24).

உங்கள் பொக்கிஷம் எது? இயேசு கூறிய அந்தப் பொக்கிஷத்தை நீங்கள் கண்டுகொண்டீர்களா? அதைச் சுதந்தரித்துக் கொண்டீர்களா? நித்திய ஜீவன் என்னும் பொக்கிஷத் தைப் பெற வேண்டுமானால், நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்! பெறவும் முடியும்.

★★★★★★



# கடந்த காலத்தில் இருந்து

**பைரன் நிகோலஸ்**

சமீப காலத்தில் முன்பு எப்போதும் பெற்றிராத ஒரு உணர்ச்சிபூர்வமான அனுபவத்தைப் பெற்றேன். பல மாதங்களுக்கு முன் ஒரு போதகருடன் நான் பல சபை வரலாற்றைக் கூறும் சில புத்தகங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு முற்றிலும் புதிதான ஒரு புத்தகத்தைக் குறித்து அவர் சொன்னார். அது 1805-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மிகவும் அரிதானது என்றார். எனது ஆர்வம் அதனால் தூண்டிவிடப்பட்டது. கொஞ்ச காலத்திற்குப் பின் நானும் எனது நண்பரும் பிரீட் ஹார்டுமென் பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆசிரியராகப் பணிபுரியும் சாம் ஹெர்ஸ்டரைச் சந்தித்தோம். அவரும் பல காலம் அச்சிடப்படாத சில வரலாற்றுப் புத்தகங்களை பதிப்பிக்கிறார். அந்தப் புத்தகத்தைப் பற்றிச் சொன்னபோது தானும் அப்புத்தகத்தைப் பார்க்க மிக்க ஆவலாக இருப்பதாகக் கூறினார். ஹெர்ஸ்டர் அப்புத்தகத்தை மீண்டும் அச்சிட்டிருக்கிறார், குறைவான புத்தகங்களே உள்ளன. அந்தப் புத்தகத்தின் மதிப்புரை கொடுத்த பின் இந்த அருமையான அணிகலன் போன்ற நூலைக் குறித்தும் அதன் முக்கியத்துவத்தைக் குறித்தும் ''சத்தியத்தின் குரல்'' என்ற நூலில் எழுதினேன். அந்தப் புத்தகம் எப்படி என் ஆர்வத்தைத் தூண்டி உணர்ச்சியைப் பெருக்கிற்று என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அப்புத்தகத்தின் சுருக்கமான வெளியீட்டின் பெயர் ''சமுதாய ஆராதனை''. முழுப்பெயர் ''சமுதாய ஆராதனையும் ஆதி கிறிஸ்தவர்களின் கொள்கைகளும்'' பரிசுத்த வேதாகமத்திலிருந்து மட்டும் எடுக்கப்பட்டது. அவர்களின் தெய்வீகக் கடமைகளை பின்பற்றுதலை குறித்தும், அவற்றைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளையும் விவரிப்பது நூலின் முக்கிய பகுதியாகும்.

அதன் ஆசிரியர் ஜேம்ஸ் அலெக்ஸாண்டர் ஹால்டேன் - ஸ்காட்லாந்து. ஹால்டேனும் அவரது சகோதரர் ராபர்ட் இருவரும் மதச் சுதந்திரத்தைப் பற்றிய இயக்கத்தில் மிக முக்கியமானவர் களும் ஆற்றல் படைத்தவர்களுமாவார்கள். அந்த இயக்கம் ஸ்காட்லாந்தில் அப்பொழுது நடந்து கொண்டிருந்தது. அவரும் இன்னும் பெருகி வரும் பலரும் சபைகள் சுயாட்சி பெற்றவை யாகவும் குருமார்கள் தவறான வழிகாட்டுதல், வற்புறுத்தலில் இருந்து விடுபட்டதாயும் இருக்க வேண்டும் என்றும், ஸ்காட்லாந்தில் உள்ள பழைய அமைப்பு முறையிலிருந்து விடுபட்டதாயும் இருக்க வேண்டும் என்று உணர்ந்தனர். அவர்கள் வேதாகமத்தை ஆழ்ந்து கற்றிடவேண்டும், ஆராதனை மற்றும் பொதுவாக மதம் பற்றிய காரியங்களிலும் வேதாகமமே வழி காட்ட வேண்டும் என்றனர். ஆதிக்கம் செலுத்தி, இறுதி செய்ய வேண்டும் என்ற கொள்கையில் அநேகர் நடத்தப்பட்டனர். தற்பொழுது நிலவி வரும் மதப் பிரிவுகளைப் பற்றி மிகவும் வருந்தியவராக இருந்தார். (இப்பொழுது அவர் இருந்தால் இன்னும் எவ்வளவு அதிகமாக வேதனையடைந்திருப்பார். மனிதரின் கொள்கைகளை தள்ளி விட்டு தேவ வார்த்தையின்படி நடப்பது பற்றி ஆழ்ந்த கருத்துள்ளவர். இதை வாசிக்கும் அனைவருக்கும் ஒரு காரியம் - இந்தப் புத்தகத்தின் ஆசிரியருக்கு அப்பொழுது ஸ்காட்லாந்து சபையை மட்டுமே தெரிந்திருந்தது. அவர் வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தமையால், பொதுவான சபையிலிருந்து விலக வேண்டியவரானார். வேதத்தில் காட்டியபடி அமைந்த தனித்தியங்கும் திருச்சபையை ஸ்தாபிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதன் முகவுரையில் இந்தப்புத்தகம் எந்த ஒரு

கிறிஸ்துவின் சபையும் பின்பற்ற வேண்டிய முறையைக் காட்டும் நூல் அல்ல என்று பக்கம் 5-ல் குறிப்பிடுகிறார். அவ்வாறு அது எடுத்துக்கொள்ளப் படுமானால் இந்த ஆசிரியர் உரைக்கும் முக்கியமான நோக்கத்திற்கு எதிரானதாகப் போய்விடும். அனைத்து சகோதரர்களும் வேதம் வாசிக்கத் தூண்டப்பட வேண்டும் என்பதே அவரின் நோக்கம். அது காட்டும் வழியில் எந்த ஒரு விஷயமும் முடிவு செய்யப்பட வேண்டும் என்பதே. இந்த நோக்கம் நிறைவேறுமானால் அவரது முயற்சி வெற்றி பெற்றதாகக் கருதப்படும். உண்மையை ஆராய்வதைக் குறித்து ஏற்பட்டுள்ள மனச்செறிவு அகற்றப்பட வேண்டும். அப்படி இருந்தால் தான் நமது முன்னோரிடமிருந்து பெற்ற கருத்துக்களை மிஞ்சிப் போகாமல் அப்படியே எடுத்துக்கொள்ளும் மனோபாவம் மாறும் (பக்கம்15) ஏதோ ஒரு சபையில் இணைந்திருந்தால் மட்டும் போதாது. அந்தச் சபை புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட அதே சட்டதிட்டம், நிர்வாக அமைப்புடன் அமைந்த சபையாக இருக்க வேண்டும். (பக்கம் 382). மேலும் மக்கள் அப்போஸ்தலத் திருச் சபையில் இருந்து விலகிய கருத்துக்கள் உள்ள திருச்சபைகளில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கருத்து இன்றைய நாளில் பகிர்ந்து கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமாகிறது.

ஹால்டேன் தனது நூலில் ஆராதனையானது எப்படியிருக்க வேண்டும் என்பது பற்றி எழுதியுள்ளார். நூலின் தலைப்பே அதைச் சுட்டிக் காட்டும். அவர் கூறும் பல நல்ல காரியங்களில் சில காணலாம். புதிய ஏற்பாட்டில் ஆராதனை பற்றிய எல்லாக் காரியங்களும் கூறப்பட்டுள்ளது என்று கூறுவது தவறு. அது தேவன் மனிதனுடன் ஒவ்வொரு காலத்தில் உறவாடுவதையே பொறுத்திருக்கிறது. தேவன் தம்மை ஆராதிப்பவர்கள் இப்படித் தான் ஆராதிக்க வேண்டும் என்று விவரம் தந்திருக்கிறார் என்று எண்ணுவதற்கு நமக்கு எழுதப்பட்ட சட்டம் ஒழுங்குமுறை ஏதுமில்லை. எல்லாக் காலத்திலும் அவர் கொடுத்த சட்டம் முறை என்ன வெனில், ''உன் தேவனாகிய கர்த்தரில் உன்'' முழு

இருதயத்தோடும் அன்பு கூற வேண்டும். அதற்குக் கீழ்ப்படியும் போதுதான் உண்மையில் அன்பு கூறுகிறாரா இல்லையா என்று தெரியும். இந்தப் பிரமாணங்கள் மனிதன் எப்படி சக மனிதனுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பதுடன் தேவன் எவ்வாறு ஆராதிக்கப்பட வேண்டும், எந்த சடங்காசாரங்களைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று கூறுகின்றன. (பக்கம் 26,27) இது இந்த நாளிலும் நாம் கருதவேண்டிய காரியங்களில் ஒன்றாகும்.

அவரது இந்த நூலின் கருத்துக்கள், தாமஸ் கேம்பல் மற்றும் அவரின் புகழ் பெற்ற மகன் அலெக்ஸாண்டர் ஆகிய இருவரின் கருத்துக்களையும் ஆழமாக பாதித்துள்ளது. இந்த இருவரும் அமெரிக்காவில் 1800-ல் வேதம் மட்டுமே எல்லாவற்றுக்கும் அடிப்படை என்ற ஒரு இயக்கம் இருந்தது. மனிதன் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி தேவ சித்தம் என்ன கூறுகிறது என்பதை வேதத்தின் அடிப்படையில் எடுக்கவேண்டும். அலெக்ஸாண்டர் ஹால்டேனின் கருத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

ராபர்ட் ரிச்சர்டுசன் எழுதிய ''அலெக்ஸாண்டரின் வாழ்க்கைக் குறிப்பு'' என்ற நூலில் ஹால்டேனின் இயக்கம் பற்றிக் குறிப்பிடு கிறார். அதில் இருந்து கேம்ப்பெல் தனது சீர்திருத்த இயக்கத்திற்கு உந்துதல் பெற்றார். அதன் பின்னர் அவர் அந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்திச் சரியான ஓர் முடிவுக்குச் சென்றார் (பக்கம் 149) ரிச்சர்சன் ஹால்டேனின் புத்தகம் பற்றி குறிப்பிடுகிறார். இந்த நூல் விரைவில் இரண்டாம் பதிப்புப் போட வேண்டியதானது. அவரது சிறு நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

ஜேம்ஸ் ஹால்டேனின் செய்திகளும் நூல்களும் அவர் கால அமெரிக்க சீர்திருத்தவாதிகளையும் அதிகமாகப் பாதித்தது ராபர்ட்.எச். ப்ரம்பேக் தந்த நூல் திருச்சபையில் கடந்த கால வரலாறு என்ற நூலில் வால்டர் ஸ்காட் 1818ல் ஸ்காட்லாந்தில் இருந்து அமெரிக்கா வந்தது (நியூயார்க்) பற்றிக் குறிப்பிடுகிறார். ப்ரம்பேக் எழுதும்போது ''ஒரு ஆண்டுக்குப் பின்னர் அவர் பிட்ஸ்பர்க் திரும்பி அங்கு ஜார்ஜ் பாரஸ்டர் நடத்திய பள்ளியில்

ஆசிரியராக இருந்தார். ஸ்காட்லாந்தை நாடிச் சேர்ந்த பாரஸ்டர் கூட ஹால்டேன்னும் அவரது சகோதரர்களின் கருத்துக்களால் மிகவும் பாதிக்கப்பட்டார். சுதந்திர சபைக்காரருக்கு அவர் குருவாக ஆனார். ஸ்காட் ப்ரிஸ்பிட்டீரியன் சபையில் வளர்ந்தவர், சுதந்திர சபைகளின் மத்தியில் கவரப்பட்ட மத உணர்வுகள் மிகவும் வேறுபட்டவை. ஹால்டேன் புதிய ஏற்பாட்டின் காரியங்களில் மீண்டும் புதுப்பிக்கப் பட வேண்டும் என்றும் கர்த்தரின் பந்தி வாரம் ஒருமுறை அனுசரிக்கப்பட வேண்டும் என்றும் முழுக்கி ஞானஸ்நானம் தருதல் மூப்பர்கள் பலர் இருத்தல் வேண்டும் என்றும் திருச்சபை தமது உறுப்பினர்களால் புத்துணர்ச்சியும் சீர்திருத்தமும் பெற வேண்டும் எனவும் கூறினார். இவை எல்லாம் பிட்ஸ்பர்க்கில் உள்ள சுயாதீன சபைகளின் நடைமுறையும் கோட்பாடுகளுமாகும். ஸ்காட் இந்த ஆராதனைகளில் பங்கு பெற்றார். அவைகள் புதிய ஏற்பாட்டுச் திருச்சபைகளைப் போல இயங்குவதால் மனம் ஒப்பி ஞானஸ் நானம் பெற்றார். அதன் பின்னர் சுயாதீன சபைகளில் அவ்வப் பொழுது பிரசங்கம் செய்தார். (பக்கம் 327).

ஜேம்ஸ் ஹால்டேனுக்கு அதிக உறுதியும தைரியமும் உண்டு. அவரில் தவறுகள் இருக்கலாம். ஆனால் அவரின் கருத்துக்களை நாம் காணும் பொழுது அவர் மீது நாம் மதிப்பும் முடிவில்லாத பாராட்டும், நன்றியறிதலும் உள்ளவர்களாகிறோம். 1800 ஆண்டில் இருந்து தொடங்கி பின்வரும் எல்லாத் தலைமுறையினருக்கும் அவர் வழங்கிய கருத்துக்களின் அளவு மிக அதிகம். ஹால்டேனின் ஆரம்ப செயல்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அதனால் அநேகர் புதிய ஏற்பாடு அடிப்படையில் சர்வ வல்லவரை ஆராதிக்க உதவி செய்தது.

இந்த அரிய நூல் குறைவான அளவில் தான் இருக்கிறது. ஆர்வமுள்ளவர்கள், இதனை எழுதும் என்னிடமோ, அல்லது டெர்டுனசியில் உள்ள, ப்ரீட் ஹாமேன் பல்கலைக் கழகத்திலுள்ள, சாம்ன்டுஹர்ஸ்டரிடமோ தொடர்பு கொள்ளலாம்.

✧✧✧✧✧✧

# சத்தியத்தின் குரல்

## பொருளடக்கம்


முதன்மை ஆசிரியர் உரை

துணை முதன்மை ஆசிரியர் உரை

**தேவன்**

சிலுவையின் வல்லமை

தேவனையும்....

தேவனுடன் நட்பு

***சான்றுகள்***

அவிசுவாசிகளுக்கான...

சீஷாக் யார்?

மனித வர்க்கத்தின் தோற்றம்.

தற்காலத்தில்...

***கர்த்தரின் வார்த்தை***

வேதாகமத்தின் நாட்குறிப்பு

ஒரேயொரு பிரமாணந்தானுண்டு

**வாழ்வின் கோட்பாடு**

பூலோகத்தில் கிறிஸ்துவின்....

ஞானஸ்நானம்.....

தேவன் ஒன்றாக.....

நீ ஒரு நாத்திகனா?

**இரட்சிப்பு**

மனோபாவங்கள் முக்கியமானவை

3 இரட்சிப்புகள்

***சபை***

அந்தச் சபையில்....

கர்த்தருடைய சபை

***சபை வளர்ச்சி***

இயேசு முழுவதும்........

சீஷர்களாவதற்கு........

***சபை சரித்திரம்***
இங்கிலாந்தில்.......
கிறிஸ்தவ ஜீவியம்.......

***கிறிஸ்தவ நடவடிக்கை***
விசுவாசமுள்ள கிறிஸ்தவன்......
எஞ்சினியர்களும்.......
தட்டுங்கள்.......
அனுதினமும்........
தாகமுள்ளவர்களே........
கிறிஸ்தவனின் ஆதி அன்பு
சமாதானத்தைத் தேடுதல்
இது நமக்கு ஓர்........
வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்து
தெருவை சுத்தம்........

***கிறிஸ்தவ குடும்பம்***
உங்கள் குடும்பத்தைப் பற்றி.......
தலைமுறை தலைமுறையாக.......
ஆறுதலும் உறுதிப்பாடும்......
ஒவ்வொருவர் வாழ்விலும்...
நான் கற்றுக்கொண்டது என்ன?

***பல்சுவை - கவிதை***
மௌன ஓலம்
உமது வசனம் ஒரு தீபம்
சிரிப்பு மொழிகள்
படிப்படியாக.......
வேசித்தனமும், விபசாரமும்
ஆகவே - மீண்டும்
ஒப்புக்கொடுத்தல்
மறந்து விட்டோமா
உலகத்தின் ஒளி
வேத வினாக்கள்
அழைக்கப்பட்ட மக்கள்
ஓர் பெண், பிரசங்கி.......
பெல்ஜியம்
நம்பிக்கை....?

# சிலுவையின் வல்லமை

**–பில் நிக்ஸ்**

கிறிஸ்துவின் சிலுவை எப்பொழுதும் இடறுதலுக்கேது வானதாகவும், விழுதற்கேதுவான கன்மலையுமாயிருக்கிறது. (1 பேதுரு 2:8, 1 கொரி 1:23).

சிலுவை மரத்தில் அறையப்பட்டு தொங்கிய ஒருவர் எப்படி மேசியாவாக இருக்க முடியும் என்று யூதர்கள் தர்க்கம் செய்கிறார்கள். (உபாகமம் 21:33; கலாத்தியர் 3:13) ரோமர்களால் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டு சிலுவையில் மரித்த ஒருவரை எப்படி மனித குலம் ஆராதிக்க முடியும்? என்று பிற மக்கள் வினாவுகிறார்கள். ஆனால் பரிசுத்த பவுல் ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை பாவமாக்கினார்'' என்று வலியுறுத்திச் சொல்கிறார். (2 கொரி. 5:21)

இயேசுவினாலே ''சிலுவை'' என்னும் சொல் மற்ற எல்லா வார்த்தைகளைவிட பரவலாக அறியப்பட்டுள்ளது. அது மனிதனின் அறியாமையையும் பாவத்தின் கொடுமையையும் காட்டுகிறது. அவர் யார் என்று அறிந்திருந்தால் அதிகாரிகளும் இந்தப் பிரபஞ்சத்து பிரபுக்களும் அவரை-மகிமையின் ஆண்டவரை, சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள். (அப்போஸ்தலர் 3:17, 1 கொரி 2:8). மக்கள் அறியாமையை அவரது சிலுவை மரணம் காண்பித்தாலும் அது தேவ அன்பும் இரக்கமும் எத்தகையது என்று படம் பிடித்துக் காட்டுகிறது. (ரோமர் 5:8).

சிலுவை என்பது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றுகிறது.

- வரலாற்றிலே அது மிகவும் சோகமான ஒன்று. ஆனால் அதியற்புதமானதுமாகும்.
- கண்ட காட்சிகளில் மிக வருத்தமூட்டும் காட்சி ஆனால், அது மிக அதிகமாக மகிழ்ச்சியை உண்டாக்கிற்று.
- சாத்தானின் மாபெரும் வெற்றியும், கிறிஸ்துவின் அதிர்ச்சிடையத்தக்க தோல்வியுமாகத் தெரிந்தாலும்.
- சாத்தானின் மிகப்பெரிய தோல்வியும், கிறிஸ்துவின் மிக மகிமை பொருந்திய வெற்றியுமாகும்.
- கிறிஸ்து தம் மரணத்தினாலே வெற்றியும், தம்மை ஒப்புக் கொடுத்ததினாலே ஜெயமும் பெற்றார்.
- தேவ நீதி பாவத்தை மாம்சத்தில் ஆக்கினைக்குட்படுத்தியது; ஆனால் அவரின் இரக்கத்தினால் பாவத்தை மன்னித்தார்.
- மனிதனின் பார்வையில் அது ஒரு முட்டாள்தனமானது. ஆனால் அது தேவ ஞானத்தின் உயர்ந்த வெளிப்பாடு (கலா 6:14, 2:20).

''இரத்தம் என்பது கண்ணியத்துக்குரியதொன்றல்ல'' என்று தற்கால பிரசங்கி ஒருவர் சொன்னார். எனவே அவர்களின் எல்லாப் பாடல்களிலும் ''இரத்தம்'' என்ற சொல்லை நீக்கிவிட்டனர். அவர்கள் இரத்தத்தில் தான் மீட்கும் வல்லமை இருகிறது. என்று நம்பாமல் போனார்கள். அதைக் கேட்ட ஒருவர் ''இரத்தத்தைக் குறித்து நான் வெட்கப்பட மாட்டேன். எனது தாய் என்னையும் என் சகோதரனையும் காப்பாற்ற இரயில் பாதையில் இருந்து எங்களைத் துரத்தி விட்டு தான் மரித்தார். அவளது ரத்தம் அந்த பகுதியிலும், இரயில் பாதையிலும் சிந்தப்பட்டது. அவர் தமது விலை யேறப்பட்ட இரத்தத்தை எங்களைக் காப்பாற்றச் சிந்தினாரே''.

''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே'' ( 1 பேதுரு 2:18).

கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமையுண்டு. வேதம் அவ்வாறு கூறுவதினால் நான் அதை அறிந்திருக்கிறேன் (மத். 26:28, 20:28, அப் 2:38, எபி 2:9) மிருகங்களின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே'' (எபிரெ 10:1-4, 9:26). மிக மோசமான ஒரு மனிதன் கூட கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினாலே மீட்கப்பட முடியும். (கொலோ 1:20-22, எபே 2:3-6).

நமது ஆண்டவரின் சிலுவை மரணம் எதிர்பாராமல் நடைபெற்ற ஒரு சம்பவமல்ல. அது முன்னறிந்து சொல்லப்பட்டதும், பஸ்கா ஆட்டுக்குட்டி மூலம் மாதிரியாகக் காண்பிக்கப்பட்டதுமாகும். (யாத் 12, யோவான் 1:29, ஏசாயா 53:7-12; மத்தேயு 8:17, அப்போஸ்தலர் 8:32)

***அவருடைய மரணத்தினாலே கீழ்க்கண்ட காரியங்கள் நிறைவு பெற்றன.***

1. அவர் தேவ ராஜ்யமாகிய திருச்சபையைக் கிரயத்துக்குக் கொண்டார். (அப். 28:28)

2. தமக்குள் யூதர்களையும், கிரேக்கர்களையும் ஒப்புரவாக்கிக் கொண்டார் (எபேசியர் 2:16)

3. பாவத்திலிருந்து மீட்பை செய்து முடித்தார் (1 யோவான் 2:1, 4-10)

4. பழைய உடன்படிக்கையை நீக்கிப்போட்டு புதியதை ஏற்படுத்தினார் (எபி 9:15,17, மத்தேயு 26:28, எபிரே 13:20).

5. சாத்தானின் வல்லமையை அழித்துப் போட்டார். (எபி. 2:14, 1 யோவா 3:5)

6. அடிமைத்தனத்தினால் மரணத்துக்கேதுவான மனுக்குலத்தை விடுதலை பண்ணினார். (எபி. 2:15)

எல்லோருக்கும் இரட்சிப்படைய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனாலும் சிலர் இரட்சிப்பை தள்ளிவிடுவதாலும், புறக்கணிப்ப தாலும் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை. (எபிரெயர் 2:3).

பழைய ஏற்பாட்டிலே கூறப்பட்ட நாகமான் போல சிலர் தாங்களாகவே சிலவற்றை எதிர்பார்த்து முன்னதாக தாங்களே முடிவு செய்து கொள்ளுகிறார்கள். (2 இராஜா 5:1-14) எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார் (2 பேது 3:9) ஆனாலும் அவர்கள் ''இடுக்கமான வாயிலில்'' வழி நுழைந்து ''குறுகலான பாதை'' வழியே சென்றாக வேண்டும் (மத் 7:13).

நாம் தேவனை பிரியப்படுத்தவேண்டும் என்றால் நாம் செய்வதெல்லாம் சிலுவையைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். அது மன்னிப்புக்கான நிபந்தனை, ஆராதனை, அன்றாட வாழ்க்கை முறை என எதுவாயினும் சரி, நமது பாதையை நாமே தெரிந்து கொள்ள முடியாது. நமது நடவடிக்கையை நாமே தெரிந்து கொள்ள முடியாது.

''நானே சத்தியமும் வழியும் ஜீவனுமாயிருக்கிறேன, என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்'' என்று இயேசு சொன்னார். (யோவான் 14:6). கிறிஸ்துவின் வழி யாதெனில் அது சிலுவையின் வழியே.

✣✣✣✣✣✣✣

*புனிதர் இயேசுவின் புண்ணிய நாமத்தில் என் அருமை வாசக நண்பர்களுக்கு வாழ்த்துக்கள். இந்த* **சத்தியத்தின் குரல்** *புத்தகத்தை அச்சிட்டு, சத்தியத்தின் குரலைக் கேட்க ஆவல் கொண்ட அன்பர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

***வெர்ணன் டக்ளஸ்,***

*நிர்வாக ஆசிரியர்.*

# தேவனையும், அவர் அதிகாரத்தையும் கனப்படுத்துதல்

மேக்ஸி பி. போரன்

வேதாகமத்தில் திரும்பத்திரும்ப நாம் தேவனுடைய அதிகாரத்தை மதிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அவரது வார்த்தைகளை ஏதோ விளையாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர் எதைச் ''செய்'' என்கிறாரோ அதைச் செய்ய வேண்டும். அவரது கட்டளைகளுக்கு மீறி நாம் செல்லக் கூடாது.

மக்கள் இதனை விளங்கிக் கொள்ளும்படி எத்தனை முறை இது ''சொல்லப்பட வேண்டும்'' சில உதாரணங்களைக் குறிப்பிடுவோம்.

### *நோவாவும் அவர் கட்டிய பேழையும் பற்றியது*

கடவுள் நோவாவைப்பார்த்து எதைக் கட்டவேண்டும் அதற்கு என்ன மரம் பயன்படுத்த வேண்டும் என்ற விவரங்களைக் கூறினார். நோவா விசுவாசத்தினால் அப்படியே செய்தார். (ஆதி 6:15-22 மற்றும் எபிரேயர் 11:6 கவனமாய் வாசிக்க) தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இந்த வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாமற்போக எவருக்கும் காரணமில்லை. தம்மால் படைக்கப்பட்டவனாகிய மனிதனுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அதிபதியாகிய தேவன் கட்டளைகள் கொடுக்கும் அதிகார முடையவராக இருக்கிறார். அவர் கூறியவற்றைக் கேட்டு தேவனை நம்பி விசுவாசித்து அவர் கட்டளையின்படி நடப்பதே மனிதனின் மறுமொழியாக இருக்க வேண்டும். நோவாவின் செயல் மூலமாக இது வெளியரங்கமாகிறது. தேவன் நோவா செய்ய வேண்டியதைச் சொன்னார். அவனும் விசுவாசித்து அப்படியே செய்தான்.

அதனால் நோவா அழிவின் அலைகளில் இருந்து காப்பாற்றப் பட்டான். தேவ கட்டளையை விசுவாசித்து அதன்படி வேலையைச் செய்யாமலிருந்தால் என்ன ஆகியிருக்கும்? மற்றவர்களைப் போலவே அவனும் மரித்திருக்க மாட்டானோ? (ஆதி 7:21-23) நிச்சயமாக மடிந்திருப்பான்.

## *நாதாவும் அபியூவும்*

ஆரோனின் இரு குமாரர்களாகிய நாதாவும், அபியூவும் தேவ கட்டளையை துணிகரமாக மீறி அந்நிய அக்கினியை (தூய்மையற்ற அக்கினி - புதிய மொழிபெயர்ப்பு) தேவ சந்நிதானத்தில் கொண்டு வந்தார்கள். இந்த 'அக்கினி' எதுவாயினும் தேவ கட்டளையை அவர்கள் மீறி இதைச் செய்தார்கள் என்பது தான் முக்கியமானது. அவர்கள் தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் தங்கள் தூப கலசத்தில் தூபவர்க்கத்தைப் போட்டு அன்னிய அக்கினியை அவர் சந்நிதானத்தில் கொண்டு வந்தார்கள். கர்த்தருடைய அக்கினி அவர்களைப் பட்சித்துப்போட்டது (லேவியர் 10:1-2). பரிசுத்தபவுல் இதைப்பற்றிக் கூறும் போது முன்பு எழுதியிருக் கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்று கூறுகிறார். (ரோமர் 15:4) இதிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

யோசுவாவுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் எரிகோ பட்டணம் ''கொடுக்கப்பட்டது''. ஆனால் அந்த ஈவு அவர்கள் கர்த்தரின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்ததினால் கிடைத்த ஈவு தான். (யோசுவா : அதிகாரம் 6 - 7) அந்தச் சூழ்நிலையில் தேவன் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகள் யோசுவாவுக்கோ அவன் சந்ததிகளுக்கோ நலமாகத் தோன்றியிருக்காது. எரிகோ பட்டணத்தையும் பிடிக்க அவர்களும் தேவ கட்டளையிட்ட முறைப்படி செய்ய திட்டமிட்டிருக்க மாட்டார்கள். யோசுவாவும் அவர் மக்களும் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படி

கிறார்களா என்று காணவே தேவன் இத்தகைய கட்டளைகளைக் கொடுத்தார். அவர்கள் கீழ்ப்படிந்த போது தமது வாக்கின்படியே எரிகோவின் மேல் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். அவரது வார்த்தைகளை உதறித்தள்ளி கீழ்ப்படியாமல் இருந்தால் என்ன நடந்திருக்கும்? தேவன் எப்படியும் எரிகோவை அவர்களுக்குக் கொடுத்திருப்பாரா? ''விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது'' (எபிரேயர் 11:30) என்று வாசிக்கிறோம்.

### *குஷ்டரோகியான நாகமான்*

நாகமான் தேவ வல்லமையினால் குஷ்டரோகம் நீங்கிச் சுகமடைந்தான். எப்போது? அவர் தீர்க்கதரிசியான எலிசாவின் வார்த்தைகளைக் கேட்டு அவன் சொல்லுகிறபடியே செய்தபொழுது தான் சுகமானான் (2 ராஜாக்கள் 5:1-15 கவனமாக வாசிக்கவும்)

நாகமான் தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு இணங்காமல் கீழ்ப்படியாமல் இருந்தால் என்ன நடந்திருக்கும்? அவனது குஷ்ட ரோகத்தைத் தேவன் சுகமாக்கியிருப்பாரா? பதில் என்ன என்று நாம் எல்லோரும் அறிவோம்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவத்திற்கு நாம் வரும்போது காண்பது என்ன? தேவன் சர்வ அதிகாரத்தையும் கிறிஸ்துவுக்கு வழங்கினார் என்று அறிகிறோம். (மத்தேயு 28:18, எபேசியர் 1:20-23 வாசிக்க) நமது ஆண்டவர் தமது சீடர்களைப் பார்த்து ''நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்''(மாற்கு 16:15-16). கிறிஸ்துவுக்கு சகல அதிகாரமும் உண்டு என்பதை நாம் மறக்கலாகாது. இரட்சிப்படைய ஒருவன் சுவிசேஷத்தில் நம்பிக்கையை வைக்க வேண்டும், கீழ்ப்படிய வேண்டும், பின்னர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறினார். இது விளங்கமுடியாதபடியிருக்கிறதா?

கிறிஸ்தவர்களும் இப்படியே தான் செய்ய வேண்டும். தேவன் மேல் நாம் வைக்கும் விசுவாசம் உறுதியாய் இருக்க வேண்டும். (எபிரெயர் 11:6). நமது வழியை அவர் நமக்குக் காட்ட வேண்டும் என்று நம்பிக்கை வைக்க வேண்டும். (எரேமியாவின் கருத்து 10:23, நீதிமொழிகள் 3:5-6, லூக்கா 5:4,5) அவரது வார்த்தையில் எப்படிக் கூறப்படுகிறதோ அப்படி நாம் கீழ்ப்படிய வேண்டும். தொடர்ச்சியான விசுவாசமும், தொடர்ச்சியான கீழ்ப்படிதலுமே அவசியம் என்று நாம் திரும்ப திரும்ப அறிவுறுத்தப்படுகிறோம். (அப்போஸ்தலர் 27:25) கூறப்பட்டது. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஒரு உதாரணம் 1 பேதுரு 1:14-ல் கூறப்பட்ட கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்கு உதாரணம்.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட சாமுவேல் தேவனிடம் பேசும்போது ''கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்று சொன்னது போல நாமும் சொல்ல வேண்டும் (1 சாமுவேல் 3:9) இவைகள் யாவற்றிலும் மேலான உதாரணம்... இயேசு கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்த ஜெபம். உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று கூறினாரே அதுவே மேலான உதாரணம்.

******



*அனுபவமிக்க பிரசங்கிமார்கள் எழுதிய இக்கட்டுரைகள், வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டது. மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியத்திற்கும் அப்பாற்பட்டது. தேவவசனமாம் சத்தியத்தில் உள்ளதை மாத்திரம் எழுதியிருக்கிறார்கள்.*

*இதை வாசிப்பவர்கள் தங்கள் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி, கர்த்தரின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.*

*பி.ஆர்.எஸ், துணை ஆசிரியர்.*

# அவிசுவாசிகளுக்கான 5 முக்கிய வினாக்கள்

– டால்டன் கீ

## *முதல் வினா*

கடவுள் இல்லை, கடவுள் மூலம் பெறப்படும் நீதி நெறிமுறையில்லை என்று நாம் சொல்வோமானால், கொலையை குற்றம் என்று எவ்விதத்தில் நியாயம் தீர்க்க முடியும்? தங்கள் குட்டியை உணவுக்காக உண்பதும், உணவுக்காக கொன்று போடுவதும், பாலுறவு கொள்வதும், எல்லைகட்கு உரிமை கொண்டாடுவதும் மிருகங்களிடையில் உண்டல்லவா? அது தவறு என்று அவை நினைப்பதில்லையே? நாம் மிருகங்களைவிட சற்று மேம்பட்டவர்கள் என்று சொல்வோமானால் மனிதனிடையே நிலவும் உயரிய நீதி நெறிமுறையை எப்படி விளக்க முடியும்? இதனை இல்லைவாதிகளுக்கு எதிர்வாதம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு என்று கருதி விடலாகாது. ''தேவன் இல்லையென்று சொல்லிக் கொள்ளுகிறான் மதிகேடன்''. (சங்கீதம் 14:1).

## *இரண்டாம் வினா*

இருவேறு உலகங்களில் ஒன்றான கடவுள் இருக்கிறார், தமது ஆளுகையைச் செய்கிறார் என்று கூறும் ஓர் உலகம். மற்றது அத்தகைய ஞானம் ஒன்றில்லை என்று திட்டமாக மறுக்கும் உலகம். இந்த இருவகை உலகங்களில் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் எது பாதுகாப்பானது?'

## மூன்றாம் வினா

உயிரானது எந்த உயரிய ஓர் ஞானத்தின் வாயிலாகவன்றி எப்படியோ உண்டானது, அதன் பின்னர், அது தற்பொழுது காணப்படும் பல்வேறுதரப்பட்ட உயிர் ஜீவன்களாயிற்று என்போமானால், படைப்பிற்கெல்லாம் சிகரமாகக் கருதப்படும் மனிதன் ஒட்டுமொத்த வளர்ச்சி பெற்றுத் தேரிய அறிவு ஜீவியான மனிதன் ஏன் வேறு ஒரு உயிரைப் படைக்க முடியவில்லை? எப்படியோ உயிர் தோன்றிவிட்டது என்னும் அவர்கள் ஏன் தமது பேரறிவால் வேறு ஜீவன்களைப் படைக்க முடியவில்லை?

## நான்காம் வினா

அறிவியலானது எத்தனை முறை, எந்தச் சூழ்நிலையில் ஒன்றுமில்லாமையில் இருந்து எல்லாம் தோன்றின என்று கூறி நிரூபிக்க முயன்றிருக்கிறது?

## ஐந்தாம் வினா

கிரகங்கள் மோதிச் சிதறி சிறு சிறு கிரகங்களாயிற்று. அவற்றில் பூமியும் ஒன்று என்பது ஒரு வானவியல் கொள்கை! தர்க்கத்துக்காக இதனை மெய்யென்றும் அந்த நிகழ்ச்சியானது இயற்கையாகவே எக்காரணமுமின்றி நடைபெற்றது என்றும் கூறும் கடவுள் மறுப்புக் கொள்கையினர், அந்த நிகழ்வுக்குக் காரணமான திடப்பொருளும் சக்தியும் எங்கிருந்து வந்தது? என்ற வினாவிற்கு தரும் விடை என்ன?

## சீஷாக் யார்?

கிமு 931-ல் சாலமோன் ராஜா மரித்த பின் அவனது மகன் ரெகோபெயாம் இஸ்ரவேலை ஆட்சி புரிந்தான். நாட்டின் வடக்கு பகுதியில் இருந்த 10 கோத்திரங்களும் ''இஸ்ரவேல்'' என்று பெயரிட்டுக்கொண்டு ரெகோபெயாமுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். மீதியிருந்த ''பெஞ்சமின்'' யூதாகோத்திரங்கள் தங்களை யூதா தேசம் என அழைத்துக்கொண்டனர். சாலமோன் யெரோபெயாம் என்று பெயருள்ள கலகக்காரனான வாலிபனை எகிப்துக்கு நாடு கடத்தினான் என்று பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். சாலமோன் மரித்த பின்னர் யெரோபெயாம் எகிப்தில் இருந்து மீண்டு வந்தான். அவனை நாட்டின் வட பகுதியான இஸ்ரவேலை ஆளும் மன்னனாக முடி சூட்டினார்கள். இஸ்ரவேலுக்கும் யூதாவுக்குமோ அல்லது யெரோபெயாமுக்கும் ரெகோபெயாமுக்கும் இடையில் நல்லுறவுகள் இல்லை. யெரோபெயாமுக்கும் எகிப்து மன்னனான சீஷாக்குக்கும் நல்லுறவு இருந்ததில் ஆச்சரியம் இல்லை. ஒருவேளை எகிப்து மன்னன் சீஷாக் யெரோபெயாமைத் தூண்டிவிட்டு எருசலேமைத் தாக்கி, ரெகோபெயாமைக் கொள்ளையிட்டு, தேவாலயத்தில் இருந்த தங்கக் கலசங்களைக் கொள்ளும்படி தூண்டினானோ, என்னவோ? அதை நாம் நிரூபிக்க முடியாவிட்டாலும், அந்தக் கணிப்பு தர்க்கரீதியாக ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். எனினும் நமது வேதாகமம் கீழ்க்கண்ட விபரத்தைத் தருகிறது.ரெகோபெயாம் ராஜ்யத்தைத் திடப்படுத்தித் தன்னைப் பலப்படுத்திக் கொண்டபின் அவனும் அவனோடே இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தை விட்டு விட்டார்கள்.

அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின படியினால், ராஜாவாகிய ரெகோபெயாம் ஐந்தாம் வருஷத்தில்

எகிப்தின் ராஜாவாகி சீஷாக் ஆயிரத்து இருநூறு இரதங்களோடும், அறுபதினாயிரம் குதிரை வீரர்களோடும் எருசலேமுக்கு விரோதமாய் வந்தான். அவனோடு எகிப்திலிருந்து வந்த லூபியர் சூக்கியர், எத்தியோப்பியரான ஜனங்கள் எண்ணிக்கைக் கடங்காதவர்களாயிருந்தார்கள். அவன் யூதாவுக்கு அடுத்த அரணான பட்டணங்களைப்பிடித்து எருசலேம் மட்டும் வந்தான். (2 நாளாகமம் 12:1-4) இதற்கு ஒத்த வாசகத்தை ராஜாக்களின் முதல் புஸ்தகத்தில் காண்கிறோம்.

"ரெகோபெயாம் ராஜ்யபாரம் பண்ணும் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாக வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், சாலமோன் செய்வித்த பொன்வரிசைகள் ஆகிய கலசத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

இந்தப் படையெடுப்பு சீஷாக் மன்னனுக்கு மாபெரும் வெற்றி. இது நடைபெற்ற காலம் சுமார் கிமு 925. சீஷாக் இது குறித்து மிகப்பெருமைகொண்டான். அதனால் இதைக் குறித்து எகிப்து ராஜ்யத்தின் தெற்குத் தலைநகரான தீபிஸ் நகரில் உள்ள பிரமாண்டமான தெற்குச் சுவரில் எழுதி வைத்தான் (தீபிஸ் தற்பொழுது கார்னாக் என்றழைக்கப்படுகிறது) அந்தக் கல்வெட்டு இந்தப் படையெடுப்பில் பிடிக்கப்பட்ட பல பட்டணங்களின் பெயர்களைப் பட்டியலிடுகிறது.

கல்வெட்டாராய்ச்சித்துறை தற்காலத்தில் பழைய, புதிய ஏற்பாடுகளில் கூறப்பட்டுள்ள ஆட்கள், சம்பவங்கள், இடங்கள் ஆகியவற்றை மெய்யென்று உறுதிப்படுத்துகின்றது. வேதாகமத்தில் கூறப்பட்ட சம்பவங்களுக்குச் சம காலச் சம்பவங்கள் பிற நாட்டில் வாழ்ந்த இஸ்ரவேலரின் எதிரிகளால் எழுதப்பட்டவைகள்.. எனவே அவர் தந்த விவரங்கள் தங்கள் வெற்றியைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்காக மிகைப்படக் குறிக்கப்பட்டிருக்கலாம். வேதாகமத்

தில் கூறப்பட்ட அதே சம்பவங்கள், எகிப்தியர், அசீரியர், பாபிலோனியர்களாலும், அதே சம்பவங்கள் ஆட்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருப்பதால், வேதத்தில் கூறப்பட்டவை மறுக்க முடியாத சரித்திரப்பூர்வமான உண்மைகள், நம்பத்தக்கவைகள் என்று உறுதிப்படுகிறது.

பலநூறு வருஷங்களாக இந்த சீஷாக் யார் என்று தெரியாமலே இருந்தது. அதுபுற்றிய குறிப்பு பெயர், படையெடுப்பு போன்ற விவரங்கள் கிறித்துவ திருமறையில் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. தற்கால அறிஞர்கள் எகிப்திய எழுத்துக்கள், மற்றும் பழங்கால எழுத்துக்களை ஆராய்ச்சி செய்ய முனைந்தபொழுது, வேதாகமத்தில் குறிக்கப்பட்ட மறை பொருளான பெயர்கள், இடங்கள் விளக்கமாக மெய்யென்று அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் வேதாகமம் ஆவிக்குரிய நூல். இந்த சரித்திர நூல்கள் நமக்குத் தரும் மெய்ப்பித்தல் வேதாகமத்தில் கூறப்பட்டவை மேலும் உண்மையானவை என்று உறுதிப்படுத்த உதவுகிறது.

- ஹார்வி போர்ட்டர்

******

## இளைப்பாறுதல்.....!

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

மத் 11:28

# மனித வர்க்கத்தின் தோற்றம்

**– ரெக்ஸ் பேங்ஸ்**

''முன்னொரு காலத்தில், வெகு தூரத்தில் உள்ள ஒரு நாட்டில் ஒரு தவளை ஒரு முத்தத்தினால் அழகான ஒரு இளவரசனாக மாறியது'' என்று சொல்வது ஒரு கற்பனைக் கதை. ஆனால் அதே சமயத்தில் ஒரே ஒரு ''செல்'' உயிர் ஒரு மனிதனாக மாறிவிட்டது என்று கூறுகிறார்கள்.

இதனை ''பரிணாமவளர்ச்சியின் பொது சித்தாந்தம் என்று கூறுகிறோம்''. மேற்கூறியபடி தவளை இளவரசனாகவோ, அமீபா ஒரு மனிதனாகவோ மாறியதை யாரும் கண்டதில்லை. சோதனைக் கூடத்திலும் இது உறுதி செய்யப்படவில்லை. இப்படியிருக்க, கற்றறிந்த ஆண் பெண்களிடம் இது எப்படி இவ்வளவு பிரபலமாக ஆகிவிட்டது (அந்த தவளை - இளவரசன் கதையைக் குழந்தைகள் நம்புவது போலத்தானோ?)

✧ பழங்காலப் படிமங்களின் விவரத்தில் அது அந்த நிலைக்கு வருமுன் எந்தெந்த இடைநிலைகளைச் சந்தித்தது என்ற விவரங்கள் தரப்படுவதில்லை.

✧ உயிரியலில் கூறப்படுகின்ற இந்த மாறுதல் இந்தக் கருத்துக்கு ஊக்கம் தருவதற்குப் பதில் அதனை பலவீனப்படுத்துகிறது.

✧ வெப்ப இயக்கத்தத்துவத்தில் பூரண ஒழுங்குக்கு பதில் குறைவுகளே காணப்படுகின்றதாகக் காண்கிறோம்.

புவியியல் தத்துவச் சான்றுகள் அமீபாவிலிருந்து உயர் நிலையில் காணப்படும் மனிதன் உண்டாயிருக்க முடியுமா என்பது பற்றி எதிர் மறையான கருத்துக்களையே கூறுகின்றன.

அப்படியானால் வெறும் கட்டுக்கதைகளை இந்த உலகம் ஏன் நம்புகிறது?

பரிணாம வளர்ச்சிக்கு ஒரு மாற்று என்ன ? சிறப்பான படைப்பு. அதனால் ஒரு படைப்பின் கர்த்தாவுண்டு அவரே சகலத்தையும் படைத்தவர். அவருக்கே ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. (வெளிப்பாடு 5:13,14).

''அந்த நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்து வந்தான்'' என்று (நியாயாதிபதிகள் 17:16, 18:1, 19:1, 21:25) வசனங்களில் காண்பது போல 'நெறிமுறை சுதந்திரங் கொடுக்கப்பட்டது போல மனிதர்கள் அவரவருக்கு சரியென்று தோன்றியபடிசெய்து வருகின்றார்கள். மற்றபடி படைப்பாளியான ராஜா ஒருவர் இருக்கிறார் என்று ஏற்றுக்கொள்ளும் போது நீதிநெறிகள் நிலைநாட்டப்பட்டு மனிதனின் சரீரம், ஆன்மா என்று முழுதும் இறைவனுக்கே சொந்தமானபடியால் தேவனுக்குக் கணக்குக்காட்ட வேண்டியவனாகிறான். இந்தக் காரணத்தினால் தானோ பெருமை கொண்ட மனிதன் கடவுள் மறுப்பை நம்புகிறான்?

ஆதாம் ஒரே ஒரு பழத்தைச் சாப்பிடும் காரியத்தில் தான் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்று நினைத்தான். டார்வினும் அவரைப் பின்பற்றுவோரும் தமது கருத்தில் சுதந்திரமாக இருக்க முனைந்து விட்டனர். அவ்வளவுதான்! ஜி.எல். வேன்ஸன் என்ற தத்துவ மேதை இதுபற்றி கூறுவது - ''மனிதன் ஏன் பரிணாமக் கொள்கையில் நம்பிக்கை வைக்கிறான் என்றால், எல்லாவற்றையும் கடந்து நிற்பவரான கடவுளைப் பற்றிய எண்ணங்களையே அகற்றி விட்டு அதற்குப்பதிலாக மனிதன் தன்னிச்சை போல நடந்திட சுதந்திரம காணுவதற்காகவே''.

இக்கருத்துப்படி மேலும் வலியுறுத்துவது போல (மனிதவள அறிக்கை - 2) கீழ்க்கண்ட கருத்து கூறுகிறது. "அற நெறிமுறைகள் என்பவை மனிதனின் அனுபவங்களில் இருந்து பெறப்பட்டவை களே. இந்த நெறிமுறைகள் தனக்குள் சுதந்திரமானதும், சமயத் திற்கு ஏற்றவாறும் இருக்கும். அது இறைக்கொள்கையோ வேறு எந்த இலட்சியத்தின்பாற்பட்டதோ அல்ல. அறநெறி என்பது மனிதனின் தேவையையும், ஆர்வத்தையும் பொறுத்தது.

''மனிதனே எல்லாவற்றிக்கும் தலையானவன். எந்த ஒரு தெய்வமும் நம்மைக் காப்பாற்றப்போவதில்லை. நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறும் அந்தக் கொள்கை, மனிதனின் ஆழ்ந்த பொருளையே வெளிப்படுத்துகிறதல்லவா? இந்தக் கருத்தைக் கூறுவதனால் உலகத் தத்துவத்தைக் கூறுவோர் மனிதனில் உயர்நிலையை தாழ்த்துவதுமான சில அருவருப்பான காரியங்களையும் நியாயப்படுத்துவது போல ஆகிவிடுகிறது. உதாரணமாக டார்வின், அகஸ்லி, ஹெக்கல் ஆகியவர்கள் வெள்ளையர் ஆதிக்கம் சரியே என்று நம்பினார்கள். பரிணாமக் கொள்கை கூறுவோரும் அப்படியே. இதை நாம் ஏற்றுக் கொள்வது சரியா? (ஹென்றி மாரிஸ் - தற்கால படைப்புக் கொள்கை) ''பலம் உள்ளவைகள் மட்டுமே பிழைக்கும்'' என்ற கருத்தை வலியுறுத்துவது போல முதலாளித்துவக் கொள்கையை ஆதரிப்பது போலவும், ஹிட்லர் மார்க்ஸ் ஏங்கல்ஸ் ஆகியோர் நடத்திய இரத்தம் சிந்தும் புரட்சிக்கு ஆதரவு அளிப்பது போலவும் இந்தப் பரிணாமக்கொள்கை மேல் வைக்கும் நம்பிக்கை நம்மைக் கொண்டு சேர்த்துவிடும்.

மனிதனை ஒரு மிருகம் என்று சொன்னால் உண்மையில் அவன் மிருகமாகவே ஆகிவிடுகிறான. 'நீயும் உனது நண்பர்களும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்று கூறும்பொழுது ஒவ்வொரு மனிதனும் ஒரு நல்ல சகோதரனாகிறான். ஒவ்வொரு உயிரும் அழியாத தெய்வத்தின் ஒரு சிறு நெருப்புப் பொறிதான். மனிதனின் தோற்றம் உண்டானது எப்படி என்று நாம் நம்புவதைப் பொறுத்து இது முடிவாகிறது ●

# வேதாகமம் எழுதும் தனது நாட்குறிப்பு

***ஜனவரி :*** எனக்கு நிறையப் பணிகள். குடும்ப உறுப்பினர்கள் என்னை வாசிப்பதாக முடிவு செய்தார்கள். முதல் இரண்டு வாரத்திற்கு எனக்கு நிறைய வேலை., (இறுதியில்) ஆனால் இப்பொழுது என்னை மறந்து விட்டார்கள்.

***பெப்ருவரி :*** இது துப்புரவு செய்யும் காலம், என்மீது படிந்த தூசியையும் துடைத்து உரிய இடத்தில் வைத்தார்கள். சென்ற வாரத்தில் எனது உரிமையாளர் என்னைச் சில நிமிடங்கள் பயன்படுத்தினார்கள். மார்க்க சம்பந்தமான ஒரு தர்க்கவாதத்திற்கு உரிய வசனங்களைக் கண்டுபிடித்து, தான் சொல்வதே சரி என்று நிரூபிக்க என்னைப் புரட்டிப்பார்த்தார்.

***மார்ச்சு :*** முதல் நாள் எனக்கு நிறைய கிராக்கி, எனது உரிமையாளர் பிடிஏ-வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்காக எனது பக்கங்களைப் புரட்டி ஒரு நிகழ்ச்சிக்காக ஒரு சொற்பொழிவு தயாரிக்க என்னைப் புரட்டிப் படித்தார்.

***ஏப்ரல் :*** தாத்தா இம்மாதம் வீட்டுக்கு வந்தார். என்னை ஒரு நேரம் தன் மடியின் மீது வைத்துக்கொண்டு 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை வாசித்தார். அவர் வீட்டிலுள்ள எல்லாரையும் விட என்னை அதிகமாக நினைத்துக்கொண்டார்.

***மே :*** என்மீது ஒரு சில பச்சை நிறக்கறைகள் படிந்திருந்தன எப்படியெனில் எனது பக்கத்திற்குள்ளான சில வசந்த காலத்தில் மலரும் பூக்களை பதப்படுத்தி வைத்திருந்தனர்.

***ஜூன் :*** இப்பொழுது நான் ஒரு பழைய புத்தகம் போலாகி விட்டேன். எனக்குள் நிறைய செய்தித்தாள்களில் வெட்டி எடுத்த

துண்டுப் பகுதிகளை திணித்து வைத்திருந்தனர். வீட்டில் ஒரு பெண்ணுக்குத் திருமணமாயிற்று.

***ஜூலை :*** இன்றைக்கு என்னை ஒரு கைப்பெட்டிக்குள் வைத்தார்கள். விடுமுறைக்காகச் செல்லப் போவதற்காக இருக்கலாம். வீட்டிலேயே இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். குறைந்தது இரண்டு வார காலமாவது இந்தப் பெட்டிக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டும்.

***ஆகஸ்டு :*** இப்போதும் அதே பெட்டிக்குள் இருந்தேன்.

***செப்டம்பர் :*** திரும்பவும் நான் வழக்கமான இடத்தில் வைக்கப்பட்டேன். என்னைச் சில நூல்களுக்கான இரு பத்திரிக்கை களும் 2 சிரிப்பூட்டும் நூல்களும் என் மீது வைக்கப்பட்டிருக் கின்றன. அந்தப் புத்தகங்கள் வாசிக்கும் அளவாவது என்னை வாசித்தால் நலமாக இருக்கும் என்பது என் ஆசை.

***அக்டோபர் :*** என்னை எடுத்துக் கொஞ்சம் வாசித்தார்கள். குடும்பத்திலுள்ள ஒருவர் மிகவும் சுகவீனமாயிருக்கிறார். தற்பொழுது என்னை எல்லோரும் காபி குடிக்கும் மேசையின் நடுவில் வைத்திருக்கிறார்கள். வீடு சந்திப்புக்காக போதகர் வருகிறார் (அதனால் தான்) என்று நினைக்கிறேன்.

***நவம்பர் :*** மீண்டும் முன்பு வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் நான் வைக்கப்பட்டேன். யாரோ ஒருவர் என்னைப் பார்த்து பழைய புத்தகமா என்று விசாரித்தார்.

***டிசம்பர் :*** குடும்பம் விடுமுறைக்காக சுறுசுறுப்புடன் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. என்னைப் பழைய புத்தகங்களோடு ஒன்றாகச் சேர்த்து கட்டி விடுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே ஒவ்வொரு ஆண்டும் செய்தார்கள்?

''உங்கள் வேதாகமம் பேசக் கூடுமானால் (நம்மைப் பற்றி) என்ன பேசும்''?

✳

# ஒரே ஒரு பிரமாணம் தான் உண்டு

கேரி.சி.ஹாம்ட்டன்

பிரமாணம் (Creed) என்ற வார்த்தை "credo" என்ற கிரேக்க சொல்லில் இருந்து வந்தது. ''நான் நம்புகிறேன்'' என்பது அதன் பொருளாகும். வெப்ஸ்டர் ஆங்கில அகராதியில் அதன் பொருள் ''மத நம்பிக்கையைப்பற்றிய வாசகம்'' என்றும் ''விசுவாச அறிக்கை'' என்றும் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

மத நம்பிக்கையுள்ள எல்லாருக்கும் ஒரு கொள்கைப் பிரமாணம் உண்டு. அந்தப் பிரமாணம் ஒரு தனிப்பட்ட மனிதன் அல்லது ஒரு குழுவினரின் விசுவாச அறிக்கையாக வரும். அதனை பிரமாணம் அல்லது விவரமடங்கிய நூல் அல்லது உபதேசத் தொகுப்பு, ஜெபபுத்தகம், அறநெறி என்றோ வேறு ஏதாவது பெயரிலோ அழைக்கப்படலாம். நமது கருத்துப்படி பிரமாணம் என்பது வேதாகம நூல்தான் என்று கருதுகிறோம். அதை இயற்றியவர் இறைவனே (2 தீமோதேயு 1:1,2).

நமது காலத்தில் இயேசுக் கிறிஸ்துவே இறைத்தூதராக இருக்கிறார். (எபிரெயர் 1:1,2) மறுரூபமலையில் மோசேயும் எலியாவும் காணப்பட்டனர். நியாயப் பிரமாணங்களுக்காக மோசேயும், தீர்க்க தரிசங்களுக்காக எலியாவும் இருந்தனர். இயேசு கிறிஸ்துவே அதை தமது உடன்படிக்கையினால் முத்திரை பதிக்கிறார். உணர்ச்சி பொங்கிவழியும் அந்தக் கணத்தில் பேதுரு அந்த மூவருக்கும் தனியாக கூடாரம் அமைக்க விரும்பினான். ஆனால் பிரகாசமான ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. ''இவர் என் நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று ஒரு சத்தம் கேட்டது.'' (மத்தேயு 1:1-5).

இயேசு தேவ சித்தப்படியே நடந்து கொண்டார். பிதா தந்த அதே வசனங்களைப் பேசினார். (யோவான் 12:44-50). தாம் பரலோகத்திற்கு ஏறிச் சென்றபின்னர் பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு அனுப்புவதாகவும் தமது வார்த்தைகளை எல்லாம் அவர் நினைவூட்டுவார் என்றும் கூறினார். சீடர்கள் எவற்றை எல்லாம் உபதேசிக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் அவர்களுக்கு விளக்குவார் என்றார் (யோவான் 16:1-14) அதனால் அப்போஸ்தலர்கள் தேவன் அருளியபடியே பேசினார்கள என்று கூறலாம். அவர்களுடைய வார்த்தைகளை அற்புதங்களினால் உறுதிப்படுததினார் என்பது, அவர்கள மூலமாக அவர் செயலாற்றினார். (எபிரெயர் 2:3-4)

யோவான் 16-ம் அதிகாரத்தில் கூறியதுடன் ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்துவார் என்று இயேசு கூறியதும் சேர்கின்றது (13-ம் வசனம்)

ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு யூதா (நிருபம்) எழுதும் போது 3-ம் வசனத்தில் நாம் வாசிப்பது ''பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும் என்று எழுதுகிறார். பேதுரு அப்போஸ்தலன் கூறும் போது ''பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப் பட்ட வார்த்தைகளையும் கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவு கூறும்படி'' என்று எழுதுகிறார். (2 பேதுரு 3:1,2).

பவுல் அப்போஸ்தலன் எழுதும் போது அவனது தாயும், பாட்டியும் எந்த உபதேசத்தில் வளர்த்தார்களோ அதிலே தொடரும்படி கூறுகிறார். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. மனிதன் அவைகளின் மூலமாக எல்லா நற்கிரியைகளிலும் பூரணப்படுவான் என்று எழுதுகிறார் (2 தீமோத்தேயு 3:14-17). அப்பிலிப்பியருக்கு எழுதும்போது ''நாம் எதுவரை தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும்'' (பிலிப்பியர் 3:16)

கலாத்தியருக்கு எழுதும்போது, ''இந்த ஒழுங்குகள், முறைகள் தான் அவர்களை புதிய சிருஷ்டிகளாயிற்று என்கிறார். (கலாத்தியர் 6:15-16) எனவே கிறிஸ்துவின் கட்டளைகளின்படியே நடக்க வேண்டும் என்பதுதான். அதனால் நாம் புது சிருஷ்டியாகிறோம். (எபேசியர் 2:13-15; 2 கொரிந்தியர் 5:17, ரோமர் 8:1,2).

பேதுரு கூறும்பொழுது ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கின்படி போதிக்கக் கடவன் (1 பேதுரு 4:11) அவர் கூறும் உபதேசத்தின்படி நாம் எல்லாரும் நடக்க வேண்டும். மேலும் பவுல் தமது கலாத்திய நிருபத்தில் ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் போதித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் (கலா 1:8)

மேற்கூறிய காரியங்களில் இருந்து நாம் அறிய வேண்டியது மனிதர்களின் பிரமாணம் தேவையற்றதும், ஆபத்து விளைவிக்கக் கூடியதுமாயிருக்கிறது என்பதே.

- தேவ வார்த்தைகளுடன் ஒன்றைச் சேர்த்தால் தேவ வார்த்தைகளை மிஞ்சியதாகவும்,
- ஒன்றைக்குறைத்தால் மெய்யான தேவனின் வார்த்தை யிலிருந்துஒன்றைக் குறைத்ததாகவும் ஆகிவிடும்.

எப்படிப்பார்த்தாலும் அவைகள் வேறொரு சுவிசேஷமாகவும் அவைகளைப் பின்பற்றி நடக்கிற ஆத்துமாவுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதாகவும் ஆகிறது. ஒருவர் தாங்கள் கூறும் மனிதர்களின் பிரமாணம் தேவன் கூறியவற்றைத்தான் கொண்டிருக்கிறது. அது மனித வார்த்தையல்ல, தேவ வார்த்தையே என்று ஆகிவிடுகிறது. அதுவே வேதமாகிவிடுகிறது. மனித வார்த்தைகளல்ல. வேதாகமத்தைத் தேடிப்பாருங்கள். தேவன் நமக்கு என்ன கூறுகிறாரோ அதையே விசுவாசிப்போம்.

❄❄❄❄❄❄❄

# எவ்வளவு குறுகிய மனோபாவமுடையவராயிருக்கலாம்?

**– கேரஸ் சைட்ஸ்**

திருச்சபையைச் சார்ந்த மக்கள் மிகவும் குறுகிய மனோபாவ முடையவர்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவற்காக எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும் என்று நான் உபதேசிப்பதால் என்னை குறுகிய மனோபாவம் உடையவன் என்று குறை கூறுகிறார்கள். வாழ்க்கையெல்லாமே குறுகலாக த்தானே இருக்கிறது? நேரான வழியிலும் குறுகலான வாசல் வழியாகவும் சென்றால் தானே இறுதி வெற்றி.

அடிப்படையான சில காரியங்களைப் பார்ப்போம் :-

வேதியல் சோதனைக் கூடத்தில் நீக்குப்போக்குடன் நினைக்க முடியுமா? தண்ணீர் இரண்டு ஹைட்ரஜன் அணுவும் ஒரு ஆக்ஸிஜன் அணுவும் சேர்ந்துதானே உண்டாகிறது? இந்த ஒழுங்கு முறையில் இம்மியும் பிரள முடியுமா?

இசையிலும், பரந்த மனப்போக்கு ஏற்புடையதல்ல ஆரோ கண அவரோகணம் என்று சொல்லும் போது எட்டுப்படிகள் மட்டும் தான். திறமையுள்ள எந்த இசை இயக்குநரும் முன் நடத்தும் வயலினில் முறைப்படியான ஸ்வரம், நாதம், இசையில் சுருதி கூட கூட்டி வாசிக்க ஒத்துக்கொள்ள மாட்டாரே!

உயிரியல் வகுப்பறையில் இந்தச் சட்டமே பின்பற்றப் படுகிறது. ஒரு பயிற்சிக்கான அளவுகள் ஆயிரம் முறை எடுத்தா லும் அதில் ஒரு பிழையானாலும் முழுவதையும் பாதிக்கும்.

கணிதத்தில் தாராள சிந்தை என்பதற்கு இடமில்லை. வடி வியல் கணிதத்திலோ கால்குலஸிலோ திரிகோணமிதியியிலோ

சரியான விடைக்கு சிறிது வேறுபட்டாலும் ஒவ்வாதல்லவா? ஒரு கணிதத் தீர்வு என்பது ஒன்று சரியாக இருக்கலாம் அல்லது தவறாக இருக்கலாம், இடைப்பட்டது ஏதுமிருக்காது.

விளையாட்டுத்துறையிலும் இதைக் காண்கிறோம். சட்ட திட்டங்களுக்குட்பட்டுத்தான் விளையாடுகிறோம். ஐயோ பாவம் என்று கூறி ஒரு பிழையை ஏற்றுக்கொள்ள முடியாது.

மோட்டார் வாகனங்களில் மட்டும் என்ன? இயந்திர ஆள் பிஸ்டனின் வளையம், சிலிண்டர் சுவருக்குள் பொருத்தப்படும் போது ஆயிரத்தில் ஒரு பங்கு பிழை கூட ஏற்றுக்கொள்ள மாட்டான். மோட்டார் சரியாக இயங்க வேண்டும் என்றால் வேறுபாடு சிறிதும் ஒத்துக்கொள்ள முடியாது.

எல்லாத்துறையிலும் இவ்வாறிருக்க நாம் ஒழுக்க நெறிகளிலும், மார்க்க விஷயங்களிலும் மட்டும் நீக்குப் போக்கு இருக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8-32). ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17) இடுக்கமான வாசல்வழியாய் பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர் சிலர். இதில் நமது நிலைப்பாடு என்ன? எதைத்தெரிந்து கொள்ளுகிறோம்?

☆☆☆☆☆☆

# பூலோகத்தில் கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சி இருக்குமா?

**– காலின் மேக்கீ**

கிறிஸ்து உலகிற்கு திரும்பி வந்து ஒரு ராஜ்யத்தை அமைத்து தாவீதின் சிங்காசனத்தில் எருசலேமில் ஆட்சி செய்ய வரமாட்டார் என்று நிரூபிக்கும் சில காரியங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. எரேமியாவின் தீர்க்கதரிசனப்படி கோனியா என்ற எகொனியாவின் சந்ததியில் வருகிற எவனும் யூதாவினால் அரசாளப் போகிறதில்லை என்று (எரேமியா : 22:24, 28-30) கிறிஸ்து எபொனியாவின் சந்ததியில் தோன்றினவர் (மத்தேயு 1:11,12). எனவே கிறிஸ்து யூதாவிலோ எருசலேமிலோ சிங்காசனத்தில் வீற்றிருந்து அரசாளப்போவதில்லை.

2. கிறிஸ்து மெல்கி செதேக்கின் முறைப்படி ஒரு ஆசாரியர் (எபிரெயர் 6:20) மெல்கி செதேக் ஆசாரியனாகவும் அரசனாகவும் இருந்தான் (எபிரெயர் 7:1) . எனவே கிறிஸ்துவும் ஆசாரியனும் அரசனுமாகிறார். (சகரியா 6:13). பூமியிலே அவர் இருப்பாரா னால் ஆசாரியராயிருக்க மாட்டார். (எபிரெயர் 8:4). அவர் ராஜாவாகவும், ஆசாரியனாகவும் இருக்கிறபடியால், பூமியிலே அவர் இருந்தால் அவர் அரசனாகவும் இருக்க முடியாது.

3. வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரம் 20-ன்படி சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகிற எல்லாரும் (கிறிஸ்துவும் சேர்த்து) பரலோகத்தில் ஆட்சி செய்கிறவர்களே. பூலோகத்தில் அல்ல.

(அ) சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகிறவர்கள் யாரென்றால் ''மிருகத்தையாவது, அதன் சொரூபத்தையாகிலும் வணங்காமலும்

தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரைத் தரித்துக் கொள்ளாமலும் இருக்கிறவர்களைக் கண்டேன்'' (வெளிப்பாடு 20:4).

(ஆ) ''மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதன் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் 'ஜெயங்கொண்டவர்கள்'' (வெளி 15:2). ''கண்ணாடிக் கடலருகே நின்றார்கள்'' வெளி 20:4-ல் கூறப்பட்ட அவர்களே இவர்கள். கண்ணாடிக் கடல் கடவுளின் சிங்காசனத்தின் முன் காணப்பட்டது. அது பூலோகத்திலல்ல பரலோகத்தில் அமைந்தது. எனவே உயிர்த் தெழுந்தவர்களாக சிங்காசனத்தில் வீற்றிருந்து கிறிஸ்துவுடனே ஆட்சி செய்கிறவகளாகக் கூறப்பட்டவர்கள் பரலோகத்தில் தான் ஆட்சி செய்கிறார்கள், பூலோகத்தில் அல்ல.

(இ) வெளி 2:13ல் கூறப்பட்ட சாத்தானின் சிங்காசனம் மற்றும் வெளி 16:10ல் கூறப்பட்ட எல்லா சிங்காசனங்களும் பரலோகத்தில் காணப்பட்டதேயன்றி பூலோகில் அல்ல. (ஒப்பிட்டுப்பார்க்க வசனங்கள் : வெளிப்படுத்தின விசேஷம் 1:4, 3:21, 4:2,5,6,9,10; 5:1,6,7,11,15,17; 8:3; 11:16; 14:3,5; 16:17; 19:4,5; 20:4, 11,21:5; 22:1,3).

ஈ) ''1000 வருஷங்கள் என்று கூறப்படுவது ஒரு கால அளவு மட்டும்; காரியங்களின் ஒரு நிலையே; அதனை குறிப்பிட்ட கால எல்லை என்று நாம் விளங்கிக் கொள்ளமுடியாது.

வெளி 20:4, கூறப்பட்ட முதலாம் உயிர்த்தெழுதல் 20:5 இல் கூறப்பட்ட இரண்டாம் உயிர்த்தெழுதலில் பங்கு கொண்டவர்கள் சேதப்படுத்தப்படுவதில்லை'' (வெளி 2:11). எவர் மேல் இரண் டாம் மரணத்திற்கு அதிகாரமில்லையோ அவர்களே இரண்டாம் மரணத்தினால் சேதப்படுத்தப்படாதவர்கள். அவர் மேற்கொள்ளு கிறவர்கள், ஜெயங்கொள்ளுகிறவர்கள், கர்த்தரை சேவிக்கிற வர்கள். 1000 வருஷம் என்பது கடவுளுடைய பிள்ளைகளை

துன்புறுத்துகிறவர்கள் பெறும் முற்றுப்பெற்ற வெற்றியைத்தான் குறிக்கும்.

(உ) யோவான் தரிசனத்தில் கண்டு எழுதிவைத்த கிறிஸ்துவுடனே அவரது பரிசுத்தவான்கள் 1000 வருஷம் ஆட்சி செய்கிறது என்பது எதிர்காலத்தில் வரப்போகும் ஒரு நிகழ்ச்சியல்ல. வெளி 1:1ல் கூறப்பட்டபடி சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்.

வெளி 1:3ல் ''காலம் சமீபமாயிருக்கிறது'' என்று கூறப்படுகிறது. வெளி 22:6ல் ''சீக்கிரமாய் சம்பவிக்க வேண்டியவை'' எனப்படுகிறது வெளி 22:10 ''அவர் என்னை நோக்கி இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போட வேணடாம். காலம் சமீபமாயிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்க்கும் போது ஒன்று யோவான் மூலமாகக் கடவுள் மெய்யானதைக் கூறவில்லை அல்லது அக்காரியங்கள் ஏற்கனவே நடந்து முடிந்து விட்டன என்று கூற வேண்டும். யோவான் ஆவியின் ஏவுதலால் இந்த வசனங்களை எழுதியிருக்கிறான். எனவே அவனது கூற்றே மெய் என்று கொள்ள வேண்டும்.

(ஊ) வெளி 1:5ல் கிறிஸ்து ''பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி'' என்று கூறுகிறது. வெளிப்படுத்தின காரியங்களுக்கு முன்னரே அவர் அரசன் என்பது கூறப்படுகிறது. கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறி பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து ''இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர், வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்'' (தானியேல் 7:13, 14).

(எ) மேலும் இதுபற்றிய விளக்கம் : 1 கொரிந்தியர் 15:24-28-ல் தரப்படுகிறது ''எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது... அதன் பின் முடிவு உண்டாகும் என்று வாசிக் கிறோம். இவைகள் எல்லாவற்றையும் உலகப்பிரகாரமான ஆளுகையோ ராஜ்யமோ கூறப்படவில்ல. உய்த்துணரப்படவும் முடியாது.

வெளிப்படுத்திய விசேஷத்திலோ வேதாகமத்தின் எந்தப் புஸ்தகத்திலோ நிதரிசனமான 1000 வருஷ அரசாட்சி பூமியில் நடைபெறும் என்று கூறப்படவில்லை. ஆனால் 'நீதி வாசமாயிருக் கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம். (2 பேதுரு 3 :13)

✡✡✡✡✡✡

# இயேசுவைக் குறித்து நாம் நிச்சயமாக அறிந்து இருக்கிறோமா?



# தற்காலத்தில் நடைபெறும் அற்புதங்களைப் பற்றி என்ன கூறுவது?

– ஆல்பர்ட் கார்ட்னர்

நான் சிறு பையனாக பிரசங்கிக்க ஆரம்பித்த நாட்களில், புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஓர் முதிர் வயது பெண் என்னிடம் வந்து ''பரிசுத்தாவியைப்பற்றி எப்படி? அதைப் பெறமுடியுமானால் எனக்குக் கொஞ்சம் வேண்டும்'' என்றார். அவருடைய உறவினர்கள் அவளிடம் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் அந்நிய பாஷைகளைப் பேசவும் அற்புதங் களைச் செய்யவும் வேண்டுவது அவசியம் என்று கூறியிருக் கிறார்கள். அதனால் அந்த வல்லமை கிடைக்குமானால் அது அவளுக்குத் தேவை என்பது அவள் எண்ணம்.

அவளுடைய உறவினர்கள் தவறாக அறிந்து கொண்டதுடன் அவளையும் தவறாக வழி நடத்தியிருக்கிறார்கள். முதல் நூற்றாண்டு கால சபையில் அற்புதங்கள் அப்போஸ்தலர்களாலும் மற்றவர்களாலும் நடைபெற்றிருக்கின்றன. மெய்யாகவே அவர்கள் மரித்தவர்களை உயிரோடு எழுப்பினர், நோயாளிகளைக் குணப்படுத்தினர், தொழுநோயாளிகளை சுகப்படுத்தினர். இதனை நாம் வேதாகமத்தில் காண்கிறோம். அவர்கள் நடப்பித்தவை மெய்யானவைகள். இன்று டெலிவிஷன் காட்சிகளில் காட்டப்படும் ஏமாற்று வேலைகள் அல்ல. தற்கால ''அற்புதங்களை நடப்பிப் பவர்கள்'' தங்கள் பணிக்கு (சுகபோக வாழ்க்கைக்கு) பொருள் உதவி வேண்டும் என்று உங்களிடம் கேட்பதில்லையா? எந்த ஒரு அப்போஸ்தலராவது சுகப்படுத்தப்பட்ட ஒருவரை அடித்துத் தள்ளுவது என்பது கற்பனை செய்ய முடியுமா? ''பரிசுத்த

நகைப்பு'' என்று பரவச நிலை காட்டியதுண்டா? இவைகள் எல்லாம் கடவுளையும் பரிசுத்தாவியானவரின் வல்லமையையும் பரியாசம் பண்ணுவதன்றி வேறென்ன?

கிறிஸ்துவினுடைய சபை வரலாற்றிலிருந்து நாம் காண்பது என்னவெனில் அற்புங்களை நடப்பிக்க இரண்டு வழிகள் மட்டுமே உண்டு. அப்போஸ்தலர்கள் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றார் கள். பின் (அப்போஸ்தலர் நடபடிகள் அதிகாரம் 2, 10) சில குறிப் பிட்டவர்களுக்கு மட்டுமே. அவர் மீது தம் கைகளை வைத்து அற்புதங்களை நடப்பிக்கும் வரங்களைத் தந்தனர். இந்த இரு வழிகளும் நமக்கு இப்பொழுதில்லாததால் புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் போல இன்று செய்ய முடிவதில்லை.

***பரிசுத்தாவியின் அபிஷேகம்***

இயேசு தமது சீஷர்களுக்கு பரிசுத்தாவியை வாக்குப் பண்ணினார். ''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், என்றென் றைக்கும் உங்களுடன் இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார்''. (யோவான் 14:16, 26)

பரிசுத்தாவியின் அபிஷேகம் என்பது கொடுக்கப்பட்ட வாக்குறுதி. தண்ணீரினால் தரப்படும் ஞானஸ்நானம் என்பது கட்டளை (அப்போஸ்தலர் 10:47,48). அப்போஸ்தலர்களை ''சகல சத்தியத்திற்குள்ளாக'' நடத்துவதற்காகவே பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றனர். காரணம் அப்பொழு புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருக்கவில்லை. (யோவான் 16:13) அப்போஸ்தலர் அநேக அற்புதங்களை நடப்பித்தனர். ஆனால் ஆவியாவனவரின் அபிஷேகம் (அவர்களுக்குத்தான்) நமக்கு வாக்குக் கொடுக்கப் படவில்லை.

இயேசு தமது அப்போஸ்தலர்களிடம் எருசலேமை விட்டுச் செல்ல வேண்டாம், ஆனால் ''நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தல் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்'' (அப்போஸ் தலர் 1:5). ''யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ் நானம் பெறுவீர்கள்'' (அப் 1:4). இயேசுவானவர் அப்போஸ்தலர் களிடமே பேசினார். பொதுவாக் மற்றவர்களிடம் அல்ல. வாக்குத் தத்தத்தின்படியே அவர்கள் ஆவியானவரின் அபிஷேகத்தை பெந்தேகோஸ்தே நாளில் பெற்றுக் கொண்டனர். இயேசு அதனைத்தான் ''ஆவியானவரின் அபிஷேகம்'' என்று கூறினார்.

***கைகளை வைத்தல் :***

அப்போஸ்தலர் கைகளை மற்றவர்கள் மேல் வைத்து சில அற்புதங்களை நடப்பிக்க வல்லமையைத் தர முடிந்தது. அந்த வரத்தைப் பெற்றவர்களே மற்றவர்களுக்கு அதை வழங்க முடியும்.

பிலிப்பு அவ்வாறு ஆவியின் அபிஷேகத்தை கைகளை வைத்தலின் மூலம் பெற்றுக்கொண்டான். (அப். 6:6) அதனால் அற்புதங்களைச் செய்ய வல்லமையைப் பெற்றான் (அப் 8:6,7). பேதுருவும், யோவானும் சமாரியாவுக்கு வந்து சிலர் மேல் தங்கள் கைகளை வைத்தனர் (அப் 8:17) எல்லா அப்போஸ்தலர்களும் மரித்துப் போனபடியால் பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ள கைகளை வைத்து ஜெபிக்க இப்பொழுது எவருமில்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் கைகளை வைத்ததினால் வல்லமை பெற்றுக்கொண்டவர்கள் எல்லாம் மரித்துவிட்ட படியால் வேறு எவரும் அவ்வாறு கைகளை வைத்தலின் மூலம் வல்லமையைப் பெற்றுக்கொள்ளுவது என்பது இல்லை என்பது தெளிவு. நமக்கு அது வாக்குப் பண்ணப்படவு மில்லை.

## *அற்புதங்களின் கால வரம்பு*

'' நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும்'' (1 கொரி 13:10). குறைவானது என்பது என்ன? ''அந்நிய பாஷை தீர்க்கதரிசனம் அறிவு'' இவைகளே. (வசனம் 8,9). நிறைவானது என்பது யாது? கிறிஸ்து நிறைவானவராக இருப்பினும் இங்கு நிறைவானது என்னும்போது கிறிஸ்துவைக் குறிப்பதில்லை. ''அவர்'' என்று குறிப்பிடாமல் ''அது'' என்று குறிப்பதால் அது ஒரு ''மனுஷரையல்ல'' ''ஒன்றினை'' குறிக்கிறது. அது புதிய ஏற்பாடு முழுமையையும் குறிப்பிடுகிறது (யாக்கோபு 1:25).

இதைக்குறித்து மக்கள் என்னிடம் விவாதம் செய்யும் போது நான் அவர்களைப் பார்த்துச் சொல்வது ''என்னிடம் அல்ல, வேதாகமத்திடம் நீங்கள் விவாதம் செய்யுங்கள்'' என்று கூறுவேன். ஒருவன் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றிருந்தால் வேதாகமத்தில் பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் என்ன வல்லமையான காரியங்களைச் செய்தார்களோ அவைகளைச் செய்ய வேண்டுமே'' பிறவி சப்பாணியானவனை நடக்கச் செய்ய வேண்டுமே. (அப் 3:1-8) செத்தவனை உயிருடன் எழுப்பிக்க வேண்டும். (அப் 9:37,41).

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

******

**''என்னைப் பலப்படுத்துகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவன் என்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தின படியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன்''**

**(1 தீமோ 1:12)**

# ஞானஸ்நானம்

**– ரோஜர் இ. டிக்ஸன்**

ஞானஸ்நானம் என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கும் அதிகமான முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதல் நூற்றாண்டில் ஆயிரக்கணக்கானோர் ஞானஸ்நானம் பெற்றனர். எனவே ஞானஸ்நானம் என்பது தேவனுடன் நாம் கொண்டுள்ள உடன்படிக்கையின் உறவைக் காட்டுவதால் மிக முக்கியமான ஒன்றாகும். இது கிரேக்க வார்த்தை இது ஆங்கிலத்தில் அப்படியே பயன்படுத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் இதனைக் குறிப்பிடும் போது கிரேக்க மொழியில் என்ன எழுத்துக்கள் இருக்கிறதோ எல்லா எழுத்துக்கள் உட்பட எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஞானஸ் நானம் என்ற வார்த்தைக்கு முதலில் கொடுக்கப்பட்ட பொருள், ''தோய்த்தல், மூழ்குதல், அமிழ்த்தல், நிரம்பி வழிதல் என்பது. ஞானஸ்நானம் என்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில், வரும்போது அதன் முதன்மைப் பொருள் ''மூழ்குதல்'' என்பதே என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஞானஸ்நானம் கொடுத்தலில் மூழ்கும் போது நிறையத் தண்ணீரில் மூழ்கினதாக புதிய ஏற்பாட்டின் முதல் மொழிபெயர்ப்புகளில் ஞானஸ் நானத்தைக் கிறிஸ்தவ மதத்தில் பல்வேறு குழுக்கள் தண்ணீரைத் தெளித்தும் அல்லது ஊற்றியும் அதுதான் ஞானஸ்நானம் என்று சொல்லும் பழக்கம் இன்று இருக்கிறது. இவ்வாறு தண்ணீரை ஊற்றியோ, தெளித்தோ, ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு வேதாகமத்தில் இதுதான் குறிப்பிடப்படுகிறது என்று கூறி விடுகிறார்கள். இவ்வாறு செய்த பின்னர் அவர்கள் சரியான வகையில்தான் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று கூறி விடு கிறார்கள். அப்படியல்ல. இந்தப்பழக்கம் துரதிஷ்டவசமாக கிறிஸ்தவ மதக் குழுக்கள் பலர் பின்பற்றுகிறார்கள்.

## ஒரே ஒரு ஞானஸ்நானம்

புதிய ஏற்பாடு முழுமையிலும் 6 ஞானஸ்நான சம்பவங்கள் குறிக்கப்படுகின்றன.

1. யோவான் மனந்திரும்புதலுக்கென்று கொடுத்த மூழ்கும் ஞானஸ்நானம் (மத்தேயு 3:11, மாற்கு 1:4)
2. தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு அடையாளமாக கூறப்பட்ட ஞானஸ்நானம் (மத்தேயு 20 ; 22,23)
3. பரிசுத்தாவியில் மூழ்கிப் பெற்ற ஞானஸ்நானம் (மத். 3:11, அப்போஸ்தலர் 1:5).
4. அக்கினி ஞானஸ்நானம் (மத். 3:11)
5. இஸ்ரவேலர் மேகத்துக்கு கீழ் இருந்து ஞானஸ்நானம் பெற்றனர். (1 கொரிந்தியர் 10:1-2)
6. பாவ நிவர்த்திக்காக நீரில் பெற்ற ஞானஸ்நானம் (அப் 2:38)

பவுல் கி.பி.62ல் எபேசியருக்கு நிருபம் எழுதும்பொழுது ''ஒரே ஞானஸ்நானம்'' தான் உண்டு என்று தெளிவு படுத்துகிறார். பாவ மன்னிப்பைப் பெற நீரில் மூழ்கும் ஞானஸ்நானம். அதையே நாம் கீழ்ப்படிதலுடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

☆☆☆☆☆☆

## பரலோகத்திற்குச் செல்வது எப்படி?

நான் எப்படி பரலோகத்திற்குச் செல்வது? என்று நீங்கள் வினவுகிறீர்கள். ஒளியாகவும், வழியாகவும் உள்ள இயேசுவின் மூலம். கடவுளின் வசனம் பிரசங்கிக்கப்படும்போது சத்தியத்தின் மேல் நம்பிக்கை வையுங்கள். அச்சமின்றி கிறிஸ்துவை அறிக்கை பண்ணுங்கள். மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுங்கள். நமக்கு விதிக்கப்பட்ட கட்டளை அதுவே. பாவ நிவாரணத்திற்கும், புதிதாக்கப்படுவதற்கும் வழி அதுவே அனுதினமும அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். ஒளியும் வழியுமான அவர் மூலமாக பரலோகம் சேரலாம். - ***நைனா மீ பெய்ன் கோப்பா.***

# தேவன் ஒன்றாக இணைத்தவைகள்

– சஞ்ஜீ டேவிட்

பிதா குமாரன் பரிசுத்தாவியானவர் எப்படி ஒரே தேவனாக இருக்கிறார்களோ, (யோவான் 1:1,4; 10:30 ; மத் 28:19, அப் 5:34) அவ்வாறே வேறு சிலவும் வேத வசனங்களின்படியே ஒன்றாயிருக்கின்றன. ஆகையால் தேவன் இணைத்தவைகளை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன் (மத்தேயு 9:6).

தேவன் இணைத்ததாகக் கூறப்பட்ட காரியங்கள் என்ன என்று பார்ப்போம்.

## இரட்சிப்பு - கிறிஸ்து - இரத்தம் - சபை

கிறிஸ்துவில் தான் இரட்சிப்பு இருக்கிறது. (2 தீமோத்தேயு 2:10) ஒருவன் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்படுகிறான் ''என் சபையைக் கட்டுவேன்'' (மத் 16:18) என்று கிறிஸ்து கூறினார். சபை என்பது கிறிஸ்துவின் சரீரம் (எபேசியர் 1:22, 23), கிறிஸ்துவே சபையின் தலையானவர் (கொலோ 1:18) என்றும் தன் சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்டார் (அப் 20:28) வாசிக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தம் பாவ நிவாரணதிற்காக சிந்தப்பட்டது (மத் 26:28), (1பேதுரு 1:18-20) ''அந்த ஜீவனுள்ள தேவனின் சபை (1தீமோத்தேயு 3:15) அவரது ரத்தத்தினால் கிரயமாகக் கொள்ளப்பட்டது. எனவே இந்த வசனங்களில் இருந்து கிறிஸ்து, அவ்ருடைய இரத்தம், அவரது சபை மற்றும் இரட்சிப்பு இவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது நாம் கிறிஸ்துவுடையவரானால் அவரது இரத்தத்தினால் மீட்கப் பட்டிருக்கிறோம்; அவரது இரத்தத்தினால் மீட்கப்பட்டோமானால் அவரது சபையில் இருக்கிறோம் என்பதாகும். எவருடைய பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மன்னிக்கப்பட்டதோ பாவத்திலிருந்து இரட்சிப்பு பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்து இரட்சிக்கப்பட்டவர்களைச் சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார் (அப்:2:38, 47). எந்தவொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் சபையிலிருந்து வெளியே இருப்பதில்லை.

## விசுவாசம் - மனந்திரும்புதல் - அறிக்கை செய்தல் - ஞானஸ்நானம் - இரட்சிப்பு

கிறிஸ்துவுக்குள் இரட்சிப்படைவதற்கு ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். இரட்சிப்பில் இந்த மேலே குறிப்பிட்டவைகளைத் தனிப்படுத்தி விட முடியாது. ஏனெனில் தேவனே இவைகளை ஒன்றாக இணைத்திருக்கிறார். ஒருவன் இரட்சிப்படைய மனந்திரும்பி ஞானஸ்நானம பெறறுக்கொள்ள வேண்டும் என்று கிறிஸ்து கூறியிருக்கிறார் (மாற்கு 16:16). பேதுரு கூறும்பொழுது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார் (அப் 2:38).

கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்ட எத்தியோப்பியன் இரட்சிப்படைய ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கேட்கிறான். ஆனால் பிலிப்பு உடனே ஞானஸ்நானம் கொடுத்துவிடவில்லை. எத்தியோப்பியனிடம் நீர் முழு மனதுடன் விசுவாசித்தால் தடையில்லை என்கிறார். அதற்கு எத்தியோப்பியன் ''இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்'' என்று சொன்னான். பின்னர் பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தார். (அப் 8:35-39)

கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டபின் ஒருவன் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். ஞானஸ்நானம் பெற வேண்டும். அல்லது பாவநிவர்த்திக்காக நீரில் மூழ்க வேண்டும்.

மரணம் - உயிர்த்தெழுதல் - நியாயத் தீர்ப்பு - நித்தியம்

மேற்கூறியவைகளைப் போலவே, மரணம் உயிர்த்தெழுதல்

நியாயத் தீர்ப்பு, நித்தியம் ஆகியவைகளும் இணைக்கப் பட்டிருக்கின்றன. எபிரெயர் நிருபத்தில் கூறப்பட்டபடி ''அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27). மனிதர்கள் மரித்து பின் நியாயத் தீர்ப்பை அடைய வேண்டும் ''ஒருநாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் நீதியாய் நியாயந்தீர்ப்பார் (அப் 17:30,31)

என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாத வனை, நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவான் 12:48). கடைசி நாள், நியாயந்தீர்ப்பின் நாள், அதுவே உயிர்த்தெழுதலின் நாள். தேவனின் வல்லமையினாலே மரித்தவர்கள் எல்லாம் உயிரோடு எழுந்திருப்பார்கள். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய் சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள், ஜீவனை அடையும்படி எழுந் திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (யோவான் 5:28,29) தீமை செய்து கெட்டவர்கள் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். (மத் 25:46). பாவிகளின் ஆக்கினையும், இரட்சிக்க நீதிமான்களின் இரட்சிப்பும், நித்திய மானவைகள். எல்லாருக்கும் மரணம் நிச்சயம், மரித்தோரில் இருந்து எழுந்திருப்பதும் தேவனுக்கு உயிர்த்தெழுந்தபின் அனைவரும் நியாயந்தீர்ப்பில் நிற்பதும், அதன்பின் ஆத்துமாக்கள் நரகத்திலே பரலோகத்தில் வாழ்வதும் உறுதியானவை.

இந்தக் காரியங்களையெல்லாம் தேவன் ஒன்றாக வைத்திருக்கிறார். எந்த ஒரு மனிதனும் இணைக்கப்பட்ட இந்தக் காரியங்களைப் பிரிக்க முயற்சிக்காது இருப்பானாக. நியாயத் தீர்ப்பில் கடைசியில் நிற்பது தேவ வார்த்தையே. அவரே அப்படி கூறியிருக்கிறார்.

✣✣✣✣✣✣✣

# நீ ஒரு நாத்திகனா?

கிறிஸ்தவ விசுவாசியாகிய ஒருவருக்கு இந்தக் கேள்வி விந்தையானதாகத் தெரியலாம். ஆனால் இதை வேதாகமத்தின் அடிப்படையில் ஆய்வது அவசியமாகிறது. ஏன்? நமது நிலை என்ன என்று சோதித்துப் பார்ப்பதற்கு இது அவசியம். காலங்கடந்து போகுமுன் இதைச் செய்ய வேண்டும். மகிமை பொருந்தியவராக கிறிஸ்து திரும்ப ஆக்கினைத்தீர்ப்புடன் வரும் போது, முதலாவதாக அவரது கோபத்திற்கு பலியாகக் கூடியவர்கள் ''கர்த்தருக்குப் பயப்படாதவர்களே'' (1 தெச 1:6,7)

நாத்திகன் என்பவன் யார்? கடவுள் மறுப்புக் கொள்கையைப் பின் பற்றுகிறவனே. புறமதத் தேவர்களை நம்பாத காரணத்தில் ஆதிக்கிறிஸ்தவர்களை நாத்திகர்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். தவிர அவர்கள் வணங்கும் அரூபியான தெய்வத்தை கண்களில் படும்படியாகக் காட்ட முடியாததாலும் அவர்கள் நாத்திகர்கள் என்று குற்றஞ்சாட்டினர்.

அந்த விதமான பொருளில் நமது ஆய்வை இங்கே செய்யப்போவதில்லை முடிவானது ஒன்றுண்டு என்று ஒத்துக்கொண்டாலும், தத்துவ ரீதியாக அதனை ஒத்துக்கொள்ளாத ''தத்துவார்த்தமான நாத்திகர்கள்'' முதலாவது அவர்கள் தனிமனிதருக்கும் கடவுள் உண்டு என்று கொள்கைகளை மறுப்பவர்கள். இவர்களைக் குறித்தும் இங்கே நாம் விவரிக்கப் போவதில்லை.

வேறொரு வகையான நாத்திகம் ஒன்றுண்டு அதனை நடைமுறை நாத்திகம் என்று அறியப்படுகிறது. இவ்வகைய்யான அவிசுவாச நிலையைத் தான் நாம் தொடர்ந்து கவனிக்கப் போகி றோம். கடவுளுடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள்

உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே. தெளிவாய்க் காணப் படும். (ரோமர் 1:19, 20). வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களில் சிலுவையை அறிவிக்கிறது''., (சங்கீதம் 19:1). இவைகளைக் கவனிப்போமானால் கடவுளைப்பற்றி அறிவு புலப்பட்டுவரும். ''இப்போதும் நீ மிருகங்களைக் கேட்டுப்பார். அவைகள் உனக்குப் போதிக்கும். ஆகாயத்துப் பறவைகளைக் கேள் அவைகள் உனக்கு அறிவிக்கும். அல்லது பூமியை விசாரித்துக் கேள், அது உனக்கு உபதேசிக்கும். சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள் அவைகள் உனக்கு விவரிக்கும். கர்த்தருடைய கை இதைக் செய்த தென்று இவைகளெல்லா வற்றினாலும் அறியாதவன் யார்? (யோபு. 12:7-10).

அவரை நம்புவது என்றால்,

முதலாவது அவர் அரூபியானவர் என்பதை', அவர் 'நித்தியம் வல்லமை தேவத்துவம்', ஆகியவைகளை நம்ப வேண்டும். (ரோமர் 1:20).

இரண்டாவதாக, அவர் ''உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவர்களை அதன் மேல் அதிகாரியாக்குகிறார்''. என்ற காரியங்களை விசு வாசிக்க வேண்டும் (தானி 5:23). அதனால் மனுஷன் கடவுளை மகிமைப்படுத்தவும், கனப்படுத்தவும் கடமைப்பட்டவன் (ரோமர் 1:21). சிருஷ்டிகரான அவர் இவையெல்லாவற்றிற்கும் பாத்திரமானவர் (வெளி 4:11). மெய்யாக நீ அவரை கனப்படுத்தி துதிக்காவிடில் - ஒரு வேளை - நீ நாத்திகனாக இருக்கலாம்.

மூன்றாவதாக, தேவன் மேல் வைத்த மெய்யன்பும் விசுவாசமும் நமது சகோதரர்களை நேசிக்க வழிகாட்ட வேண்டும். (1யோவான் 4:7, 8). கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. என்று அறிய வேண்டும். (யாக்கோபு 2:19,20) தேவனை விசுவாசிக்

கிறேன் என்று வார்த்தைகளில் சொல்வதில் பயனில்லை தேவனை நம்பாதவர்கள் தங்கள் வார்த்தைகளினால் கூறுகிறார்கள். கடவுளை நம்புகிறவர்களே தமது செய்கைகளினால் காட்டு கிறார்கள் இப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதவசனம் கூறுவதாவது ''அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள். கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள் (1 தீத்து 1:16).

நான்காவதாக ஒருவன் கிறிஸ்தவ சித்தாந்தத்தில் நிலைத் திராவிட்டால் தேவ மறுதலிப்பவனாகிறான். புதிய ஏற்பாடு முழுதும் கிறிஸ்துவின் போதனைகளின் தத்துவத்தையே கூறுகிறது. ஒருவேளை நன்முறையில் உருவாக்கி புதிய ஏற்பாடு கூறும் திருச்சபையாகிய ஒரே சபைக்குள்ளாகக் கொண்டு வருகிறது. அதுவே அவரது சரீரம், குடும்பம்; ஏன்! மணவாட்டியும் கூட! ஒருவன் எந்த விசுவாசத்தைக் கொண்டவனாயினும் சபை சார்ந்த விசுவாசத்தில் இருப்பானானால் கடவுளின் வார்த்தை கூறுகிறபடி அவனும் கடவுள் மறுப்பவனே. ஒருவன் கிறிஸ்து தரும் போத னைக்கு மிஞ்சி வாழ்கிற எவனும் கடவுளை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திருக்கிறவன் பிதாவையும் குமாரனையும் உடையவன் (2 யோவான் 9) ''உங்களிருதயம் கலங்காதிருப்பதாக. பிதா வினிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்தில் விசுவாசமாய் இருங்கள் என்று இயேசுவே கூறியிருக்கிறார் (யோவா 14:1)
. ''ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின வராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்'' (யோவான் 17:3).

தேவனை நம்புகிறோம் என்று கூறிக்கொண்டு அவருடைய குமாரனை யூதர்கள் தள்ளிவிட்டனர். குமாரனை மறுதலிப்பது என்பது அவரை அனுப்பின பிதாவையே மறுதலிப்பதற்குச்சமம் (யோவான் 8:16, 19).

இன்று அநேகர் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி விட்டு அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளா திருக்கும்போது கிறிஸ்துவை தள்ளிவிடுகிறவராகிறார்கள். நியாயத் தீர்ப்பு நாளைப் பற்றிக் குறிப்பிடும்போது அந்த நாளிலே அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? உமது நாமத்தினால் அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' (மத் 7:22,23).

விக்கிரக ஆராதனை வடிவில் இருந்தாலும் அது தேவனை மறுப்பது தான். விக்கிரக ஆராதனையான பொருளாசை (கொலோ 3:5). முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது என்று (1 சாமுவேல் 15:23) வேதத்தில் வாசிக்கிறோம். ஏதாவது வகையில் விக்கிரக ஆராதனை செய்தல் (ஏசாயா 44:8-20) வாசிக்கிறோம். ''தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் ஆமென். (ரோமர் 1:25).

இதுவரை நாத்திகத்தைப் பற்றி வேதக்கருத்துக்களின்படி விவரித்தோம், இப்பொழுது பொருத்தமான சில கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம்.

✧ தேவனை ஸ்தோத்தரிப்பதற்கும் மகிமைப்படுத்துவதற்கும் ஏதுவாக தேவனது நித்திய வல்லமையையும், அவரது சிருஷ்டிப்பில் விளங்கும் தெய்வீக மாட்சிமையையும் நாம் மெய்யாகவே விசுவாசிக்கிறோமா?

- நமது வாழ்வும் நமது வழிகளும் அவரது பலத்த கைக்குள்ளாகவே இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் அவரை கனப்படுத்துகிறோமா?
- நாம் நமது சகோதரர்களை நேசித்து நன்மை செய்து அதன் மூலம் கடவுள் இருக்கிறார் என்பதை நம்புகிறோமா?
- கிறிஸ்துவின் கற்பனைகளில் நிலைத்திருந்து கடவுளின் நித்திய திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோமா?

எவ்வகையாலும் விக்கிரக ஆராதனையை விலக்கிவிட்டு கடவுளின் இணையற்ற தன்மையை அறிந்து போற்றுகிறோமா?

மேற்குறித்த இந்த வினாக்களுக்கு இல்லையென மறுமொழி கூறுவோமானால் நாம் கடவுளை அறியவே இல்லை என்று வேதம் அறிதியிட்டுக் கூறுகிறது. இப்படிப் பார்க்கும் போது நீங்களே தேவனை மறுப்பவர்களாகிவிடுவீர்களோ?

- ஜி. தேவானந்தம்

---

**என்னைப்**

**பெலப்படுத்துகிற**

**கிறிஸ்துவினாலே**

**எல்லாவற்றையும்**

**செய்ய**

**எனக்குப்**

**பெலனுண்டு**

(பிலி 4:13)

# தேவனுடன் நட்பு

நட்பின் அழகு இறைவனில் இருந்து தொடங்குகிறது. நம்மைப் படைத்தவரும், போஷிக்கிறவரும் இந்த உலகத்தை மீட்பவருமான பயங்கரமும், மகத்துவமுமானவர் நமது நண்பனாக இருக்க விரும்புகிறார்! இது ஏதோ அரை குறையாகக் கூறப்படுவதொன்றல்ல. உண்மையை அடிப் படையாகக் கொண்டது. ஆபிரகாம் கடவுளின் நண்பன் என்று அழைக்கப் பட்டான் (யாக்கோபு 2:23).

ஒருவன் தன் சிநேகிதனோடு பேசுவது போல கர்த்தர் மோசேயோடு முகமுகமாய்ப் பேசினார். இயேசு தன் சீடர்களை நண்பர்கள் என்றே அழைத்தார். (யோவான் 15:15).

கிறிஸ்தவ மதம் என்பது மனிதன் தேவன் ஆகியோரின் உறவின் மொத்தத் தொகுப்புத்தான் கிறிஸ்தவ மதம். தேவன் நம் சொந்த நண்பராக இருக்கிறார் என்பதை தொடர்ந்து வேத நட்புக்கொள்வது என்பது என்ன என்பதை விளங்கிக் கொள்ளலாம். அவரது அன்பு நிலையானது மாறாதது, நாம் கேட்கும் முன்னதாகவே அவரது நட்பு நமக்கு வழங்கப் படுகிறது. நாம் தகுதியற்ற நிலையில் இருக்கும் போதுகூட அவரது பிரசன்னம் நம்மிடம் இருக்கிறது. ஒருவருடன் பெரிய நண்பராக இருக்க விரும்புகிறாயா? முதலாவது தேவனுக்கு நண்பனாக இரு!

- ஜிம் கால்டுவெல்.

# மனோபாவங்கள் முக்கியமானவை

**– கார்டன் ஹோகன்**

தமது மலைப்பிரசங்கத்தில் இயேசு ''இருதயத்தில் சுத்தமுள்ள வர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'' என்று கூறினார். மேலும் ''நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்'' என்றார். தேவனை தரிசிக்கும் பாக்கியவான்கள் தங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்கும் அழகிய மனோபாவம் பெற்றவர் களாயிருக்க வேண்டும். மேலும் தேவனுடைய வசனத்தின் மேல் நல்ல நாட்டமுடையவராக இருக்க வேண்டும். அதன் மேல் பசிதாக முடையவராக இருக்க வேண்டும். நமது மனோபாவங்கள் முக்கியமானது என்று இயேசு கூறுகிறார்.

லாசரு-ஐசுவரியவான் உவமையில் இயேசு நான்கு விதமான மனோபாவங்களை விவரிக்கிறார். எனவே ஒரு தேவபிள்ளை தனது சகோதரனிடத்தில் நல்ல மனோபாவத்துடன் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. உலகில் அவர்கள் வாழ்ந்த நாட்களில் ஐசுவரியவான், லாசருவைக் குறித்து கரிசனையற்றவனாய் இருந்தான். அவன் நரகத்துக்குச் சென்றபொழுதும் அவன் மன நிலை மாறவில்லை. சுயநலம் தன்னை மையமாக்குதல் என்ற நிலை தான் காணப்பட்டது. லாசரு தனது தாகத்தைத் தீர்க்க வேண்டும் என்று கேட்கிறான் (லூக் 16:24) கிறிஸ்து தனது சகோதரர்களுக்கு சேவை செய்தது போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்க வேண்டும். மனுஷ குமாரன் ஊழியம் கொள்ளவராமல் ஊழியம் செய்கிறவராக தன் ஜீவனையே கொடுக்கிறவராயும் வந்தார்''.

நமது சகோதரன் மேல் விரோதமும் கசப்பும் நமக்கிருந்தால் தேவனுடன் நமது உறவைச் சீராக்க முடியாது. ''சகலவிதமான கசப்பும் கோபமும் மூர்க்கமும், கூக்குரலும் தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன்

உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4:21, 22). அந்த ஐசுவரியவான் தனது பூலோக வாழ்க்கை தீய செல்வாக்குப் பெற்றுத்தான் இருந்தது; எனவே தனது சகோதரர்கள் எச்சரிக்கப்பட்டால் ஒழிய அவர்களும் இறுதியில் நரகத்துக்கே வருவார்கள் என்றுணர்ந்தார். எனவே லாசருவை பூலோகத்திற்கு அனுப்பி அவனது சகோதரருக்கு எச்சரிப்புக் கொடுத்தால் வேகும் அக்கினிக்கு தப்பலாம் என்று கேட்டுக்கொண்டார். நமது குடும்ப உறுப்பினர்கள் மேல் சரியான மனோபாவமுடையவர்களாயிருக்க வேண்டும். நாம் தேவ சித்தப்படி நடந்தால் நமது குடும்பமும், சார்ந்த மக்களும் அதினால் தொடப்படுவார்கள்.

திருவசனத்தின் மேல் சரியான மனோபாவம் கொண்டிருக்க வேண்டும்.

மோசே ஐசுவரியவானைப்பார்த்து பூலோகத்தில் நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களை விசுவாசிக்காவிட்டால் லாசரு உயிருடன் பூலோகத்துக்குச் சென்று அவன் சகோதரருக்குச் சொன்னாலும் பயனில்லை என்று ஆபிரகாம் கூறுகிறார். நகரத்திலும் வேதவாக்கியங்களின் சாட்சியை நம்பாதவனாகவே ஐசுவரியவான் இருந்தான் (லூக் 16:29)

தேவ வார்த்தை வல்லமையுள்ளது என்று நாம் விசுவாசிக்க வேண்டும். (ரோமர் 1:16)

தேவ அழைப்பைக் குறித்தும் சரியான மனோபாவம் கொண்டவர்களாயிருக்க வேண்டும். பிதாவின் வார்த்தைக்கும் நியாயப் பிரமாணங்கள் வழியாகவும் பிதாவின் அழைப்பைக் கேட்கும் வாய்ப்பு ஐசுவரியவானுக்கிருந்தது. அவனே அதை நிராகரித்தான். எனவே நித்தியகாலமாய் வேகும் அக்கினியுள்ள நரகத்தில் சேர்ந்தான்.

''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே எல்லாரும் என்னிடத்துக்கு வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு அழைக்கிறார். (மத் 11:28). *

# 3 இரட்சிப்புகள்

**– பேசில் ஓவர்டன்**

ஒருவன் இரட்சிப்படையும்பொழுது, அந்த நிலையில் இருந்து வீழ்ந்து போகாதபடியே இருந்து கொண்டிருப்பான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாடு நமக்கு மூன்று இரட்சிப்புகளைப் பற்றிப் போதிக்கிறது.

1. ஒருவன் பழையவைகளில் இருந்தும், அந்நியன் என்ற நிலையில் இருந்தும், பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுகிறான். பிதாவின் கட்டளைப்படி விசுவாசத்தினால் அதைப் பெற்றுக் கொள்கிறான். ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' (மாற்கு 16:16). பேதுரு கூறும் பொழுது ''நீங்கள் மனந்திருப்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். (அப் 2:38) ''நீ எழுந்து... ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்களைப் போக்கக் கழுவப்படு'' என்று பவுல் (அப்போஸ்தலர் 22:16) கூறியதும் இந்த ஞானஸ் நானம்தான். ஒருவன் ஞானஸ்நானம் பெற்று பாவ மன்னிப்புப் பெற்றாலும்கூட, பாவம் செய்ய ஏதுவுண்டு.

2. ஒரு தேவனுடைய பிள்ளை பாவம் செய்யும் போது பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடத்தில் மன்னிப்புக்கேட்க வேண்டும். இவ்வாறு தேவனுடைய பிள்ளை ஒருவன் பாவம் செய்யும்பொழுது, பேதுரு அப்போஸ்தலன் அவனைப் பார்த்து உன் பாவம் மன்னிக்கப்பட நீ மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள். (அப். 8:22) என்று கூறினார். கிறிஸ்தவர்களைப் பற்றி புதிய ஏற்பாடு கூறுவது ''நாம் நமது பாவங்களை அறிக்கை யிட்டால் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எவ்வித அநீதியும் நீங்க நம்மைச் சுதிகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் என்று (1 யோவான் 1:9) கூறுகிறது.

அந்நியரான பாவிகளுக்கும் இதே வசனத்தைக் கொடுத்து பாவ மன்னிப்புப்பெற வழி இதுவே என்று சில பிரசங்கிமார்கள் கூறுகிறார்கள். இந்த வசனம் விழுந்து போன தேவப்பிள்ளைகளின் நிலையைத் தொகுத்துக் கூறப் பயன்படுத்தப்படுகிறது. ஆவியினால் ஏவப்பட்ட பிரசங்கிமார்கள் அந்நியரான பாவிகளுக்குக் கூறும்பொழுது "நீங்கள் மனந்திரும்பி சுவிசேஷத்தில் நம்பிக்கை வைத்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று தான் கூறுகிறார்கள். தேவபிள்ளை சத்தியத்தில் இருந்து தவறும் பொழுது அவன் இரட்சிக்கப்படவேண்டுமானால் தான் பாவத்திலிருந்து திரும்பி பிதாவிடம் வரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சகோதரரே உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன். (யாக்கோபு 5:19, 20).

3. மூன்றாவதாக இயேசு கூறும்பொழுது முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று கூறுகிறார் (மத் 10:22). பரலோகத்தில் இரட்சிக்கப்படுவான் என்பது மூன்றாவது வகை இரட்சிப்பு என்று இனி நாம் காணப் போகிறோம். "சகோதரரே உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கபபடும்". (2 பேதுரு 1:10, 11).

# அந்தச் சபையில் மாய்மாலக்காரர்கள் இருக்கிறார்கள்

**– ஸ்டான் மிச்சல்**

பிரசங்கியாக 23 ஆண்டு அனுபவத்தில் நான் ஏதோ ஒரு சபையைப்பற்றி கூறுகையில் சிலர் ''அந்தச் சபையில் மாய்மாலக் காரர்கள் இருக்கிறார்கள் அதனால் அந்தச் சபையை விட்டு விலகிச் சென்றேன்'' என்று கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

உண்மையில் அந்தச் சபையில் மாய்மாலக்காரர் இருக்கவே இருக்கிறார்கள். தாம் வாழ்ந்த காலத்தில் கற்றறிந்து மதத் தலைவர்கள் மத்தியில் மாய்மாலக்காரர் இருப்பதைக் கண்டார். அவர்களை மிகவும் கண்டித்துப் போதித்தார். இந்த நாளில் சபையிலுள்ள மாய்மாலங்களை நிச்சயம் பொசுக்கிப்போடுவார் கிறிஸ்து மகிமைப்படவேண்டும் என்பதற்குப்பதில் தாங்கள் பேர் பெற வேண்டும் என்று கருதுவது நியாயமல்லவே. திருச்சபையின் உறுப்பினர் ஒருவரின் மாய்மாலச் செயல் ஆவியாகிய ஒரு மனுஷன் மனந்திரும்பாமல் இடறலடைய ஏதுவாவது சரியில்லை. வாழ்க்கை யில் சிறு சிறு காரியங்களைப் பின்பற்றுதல் வேண்டும் என்று கூறி மிகப்பெரியவையும் நீதி இரக்கம் காட்டுதல், விசுவாசத்தைக் காத்தல் என்பவைகளை முக்கியப்படுத்தாது இருப்பது உண்டே. கிறிஸ்தவர்கள் தங்கள் இருதய நிலையைக் குறித்துப்பாராமல் வெளித்தோற்றத்தைக் குறித்து அக்கரைப்படுவது சரியல்லவே. தமது பாவங்களுக்காக துக்கித்து உணராமல் முன்னால் வாழ்ந்தவர்களின் பாவங்களைக்குறித்து பிரலாபிப்பது சரியல்ல. (மத்தேயு 23:5;12)

நீங்கள் சபையில் காணப்படும் மாய்மாலத்தைக் குறித்து மனஉளைச்சலைக் கூறுகிறீர்கள். கிறிஸ்துவும் அவ்வாறே உணர்ந்

தார். ஆனால் இயேசு திருச்சபையை விட்டு விலகிப்போகவில்லை அதற்காகத் தன் ஜீவனை கொடுத்தார். திருச்சபையை இன்றும் நேசிக்கிறார், போஷிக்கிறார், வழிநடத்துகிறார்.

வேறொரு காரியத்தையும் இதைக்குறித்து பார்க்கலாம். ''அந்த குறைவுள்ள'' கிறிஸ்தவர்களினிமித்தம் நீங்கள் சபையை விட்டுச் செல்வதாகக் கொள்வோம், முதலாவது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று எண்ணிப்பாருங்கள். உங்கள் மனத்தில் தோன்றிய உணர்வுகளைக் கனப்படுத்துகிறீர்கள். கிறிஸ்துவின் விருப்பங்களையல்ல. உனது முன் மாதிரியினாலே உனது நண்பர்கள், குடும்பம் ஆகியவர்களையும் கிறிஸ்துவின் உறவில் இருந்து துடைத்து விடுகிறீர்களல்லவா? பிறர் வசனத்தின்படி நடக்க வேண்டும் என்று அக்கரை காட்டும் அதே நேரத்தில் நீங்கள் இரக்கமற்றவராயும், விசுவாசமற்றவராயும் ஆகிவிடுகிறீர்கள்! வெளித்தோற்றங்களை வைத்து நீங்கள் முடிவு செய்கிறீர்கள் (சபை அங்கத்தினர்களின் மனதை அறிவதற்கு வேறு எந்த வழியும் இல்லையே). பிறர் செய்யும் பாவச்செயல்களைக் கண்ணுற்று நீங்கள் புலம்புகிறீர்கள். உங்கள் காரியங்களைப்பற்றிக் கணக்கிடத் தவறுகிறீர்கள். அப்படியானால் நீங்களே ஒரு---------- (நான் விட்டதை புரிந்து கொண்டிருப்பீர்கள்)

உண்மையில் திருச்சபை குறைவுள்ளதுதான். தவறு செய்ய ஏதுவானது ஆனால் இரத்தத்தினால் கிரயமாகக் கொள்ளப்பட்டது. திருச்சபையை விட்டு இவர்கள் இனித்திருந்தமாட்டார்கள். பாவிகள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்; ஆனால் இயேசு இந்த நிலையில் செய்தது என்ன? அவர் அவர்களையும் மீட்டெடுத்தார்.

இப்பொழுது நமக்கு முன்னர் உள்ள வினா நீங்கள் ''பரிபூரணப்பட்ட'' திருச்சபையின் பாகமா? என்பதல்ல, ''மீட்கப் பட்ட' சபையின் அங்கமா என்பது தான் மெய் வினா?

++++++

# கர்த்தருடைய சபை

**– சார்லஸ் இ. பர்ச்.**

இந்த உலகில் ஆண்டவரின் சபை என்பது மிக்க மேன்மை பொருந்திய (நிறுவனம்) அமைப்பாகும். அந்த ஒரே அமைப்பில் தான் ஆண்டவர் இரட்சிக்கப்படுகிறவர்களைச் சேர்த்துக் கொள் கிறார். சபை கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தால் கிரய மாகக் கொள்ளப்பட்டது. அதனால் தான் பவுல் எபேசு சபையின் மூப்பர்களுக்கு இவ்வறு எழுதுகிறார். ''ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபையை மேய்ப்பதற்கும், பரிசுத்தாவி உங்களைக் கண்காணிகளாய் வைத்த மற்றபடி முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.'' (அப்போஸ்தலர் 20:28). நமது ஆண்டவர் கிரயத்தலையுச் செலுத்திக் கொள்ளப்பட்டதினால் திருச்சபை மிக முக்கியமானதாகும்.

தேவ அமைப்புப்படி திருச்சபை குறைவற்றது. மனிதன் ஆண்டவரால் தமக்குக் கொடுக்கப்டாதவைகளை திருச்சபைக்குள் கொண்டு வந்து அதைத் தீட்டுப்படுத்துகிறான் பவுல் தேவன் கட்டளையிட்டபடி திருச்சபை எப்படி கரை திரையற்றது என்று கூறுகிறார். எபேசியர் நிருபத்தில் வாசிக்கும் பொழுது புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார்''. (எபேசியர் 5:25-27).

மீண்டும் கொலோசியர் நிருபத்தில் அவர் இதைக் குறித்து எழுதும்போது ''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்.

எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோசெயர் 1:18). சபையும் சரீரமும் ஒன்றே என்று கூறுவதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். அவர் கொலோயேரில் குறிப்பிடுவது கிறிஸ்துவே. எனவே அவர் கிரயமாகக் கொண்டது அவரது ஆவிக்குரிய சரீரமாகும். சபை என்பது கிறிஸ்துவின் சரீரம். ஆகவே நாம் அதைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வது எவ்வளவு முக்கியமானது என அறிய வேண்டும்.

வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படும் கர்த்தரின் சபையை நாம் கூர்ந்து நோக்கும் போது நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

***அது ஓர் பூரணப்பட்ட அமைப்பு***

கிறிஸ்துவே அதன் தலை (எபேசியர் 1:22,23) மூப்பர்கள் உள்ளூர் திருச்சபையை மேற்பார்த்துக்கொள்கிறார்கள். கண்காணிகள் சபையில் சேவை செய்கிறார்கள். (எபேசியர் 1:22,23) (1 தீமோத்தேயு 3:8-13)

***சபை இரட்சிப்பின் பூரண திட்டத்தை வெளிப்படுத்துகிறது.***

ஒருவன் தேவ வசனத்தைக்கேட்க வேண்டும் (ரோமர் 10:7) விசுவாசமுள்ளவர்களாகி கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்து (எபிரெ 11:6) மனந்திரும்பி (அப்போஸ்தலர் 2:38) (லூக்கா 13:3-5) கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை பண்ண வேண்டும் (அப்போஸ்தலர் 8:37) கிறிஸ்துவுக்குள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் (அப்போஸ்தலர் 2:38, மாற்கு 16:15,16)

தேவன் நியமித்தவைகளில் இருந்து மாறுபடும் பொழுது தான் பிரச்சனை ஏற்பட்டு, சபை சலனப்பட்டு குறைவுள்ளது போலாகிறது. அதைக்குறித்து பவுலடியார் எபேசு சபையின்

மூப்பர்களுக்கு எழுதுகிறார். ''நான் போன பின்பு மந்தையைத்தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். பவுல் இங்கே தேவ வசனத்தின்படியேயல் லாமல், மனிதர்களின் கொள்கைகளைப் போதிக்கும் கள்ளப் போதகர்களைக் குறித்துப் பேசுகிறார்.

இயேசு கிறிஸ்து அதைப்பற்றிச் சொல்லும்போது ''கள்ளத் தீர்க்கதரிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலே பட்சிக்கிற ஓநாய்கள்''. (மத்தேயு 7:15). நம்மையும் அறியாமல் நுழைந்து விடும் பிழைகளைக் குறித்து நாம் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். சத்தியத்தால் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமானால் சத்தியத்தின்படி அறிந்து, நேசித்து அதற்குக் கீழ்ப்படிந்து அதன்படி நடந்து அதையே போதிக்க வேண்டும். ''சத்திதியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்''. (யோவான் 8:32). ☆

### *திருச்சபை பற்றிய சிந்தனைகள்*

**திருச்சபைக்காக நீ பாடுபட்டு உழைக்காவிட்டால். விரைவில் அதின் மேலுள்ள ஆர்வம் குன்றிப்போகும்.**

**ஒரு மருத்துவமனையில் நோயாளிகள் இருப்பது எப்படி குற்ற முள்ளதாகாதோ அப்படியே, கெட்ட மக்கள் சிலர் இருப்பதால் சபை முழுவதையும் குறை சொல்ல முடியாது.**

**பரியாசக் காரருடன் நீ சேர்ந்து அமர்ந்திராவிட்டால் திருச்சபையில் ஆராதனையை முழுதுமாக அனுபவிக் கலாம். தேவனுக்கு இரண்டாவது இடத்தைக் கொடுக் கிறவன் அவருக்கு இடமே கொடுத்தது ஆகாது.**

# இயேசு முழுவதும் செயல்பட அவரை கட்டுப்படுத்திவைக்காமல் விட்டுவிட வேண்டும்

(நாம் எப்படி தேவனையும் சுவிசேஷத்தையும் மட்டுப் படுத்துகிறோம் என்பதை விளக்கும் பிரசங்கியின் கதை)

முடிவில்லாத பெருந்திரளான மக்கள் ஓர் சிறிய தேவாலயத் தின் முன் கூட்டமாக நிற்கிறார்கள். அந்தப் பெருங்கூட்டத்தைப் பார்த்த ஓர் பிரசங்கி இது என்ன என்று விசாரிக்கிறார்கள். பலவாறாக அவர் விவரிக்கிறார். பின்னர் அப்பெரிய கூட்டத்தில் உள்ள எவருக்கும் ஏன் அந்த சிறிய ஆலயத்திற்குள் செல்ல இருக்கிறோம் என்று தெரியவில்லை. அவரும் அக்கூட்டத்துடன் சேர்ந்து வரிசையில் நின்று கொள்ளுகிறார். படியேறி நுழைந்து ஆலயத்தின் முன் பகுதிக்குச் சென்று விடுகிறார். ஓர் அதிசயமான கற்பனைக்கும் விஞ்சிய காட்சி அவர் கண்ணில் தெரிந்தது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரசங்க பீடத்தில் கட்டப்பட்ட வராகக் காணப்பட்டார். வியப்புற்றவராக அந்தப் போதகர் கிறிஸ்து வைப் பார்த்து, ''ஆண்டவரே, இதன் பொருள் என்ன? நீர் ஏன் பிரசங்க பீடத்தில் கட்டப்பட்டிருக்கிறீர்? என்று கேட்டார்.

அதற்கு ஆண்டவர் வருத்தத்துடன் என் மக்கள் என்னை இவ்வாறு செய்து விட்டார்கள். உலகமெங்கும் போய் நற்செய்தி யாக சொல்லும்படி நான் கொடுத்த கட்டளையைப் பின்பற்றாமல் என்னை இப்படி பிணித்து விட்டனர். உள்ளே வர ஆர்வமுள்ளவர்கள் மட்டும் என்னைக் குறித்துக்கேள்விப்படு கிறார்கள். என்னைக் கட்டிப்போட்டு விட்டார்கள் என்று கூறினார்.

# சீஷர்களாக்குவதற்கு நமது ஆண்டவரின் திட்டம்

**-கிளேடன் பெப்பர்**

நற்செய்தி பற்றிய ஒரு கணக்கெடுப்பில் 14000 பேரிடம் நீங்கள் கிறிஸ்துவிடம் வர யார் காரணம்? என்று கேட்கப் பட்டது. 75 முதல் 90 சதவீதம் ஒரு உறவினர் அல்லது நண்பர் தான் என்று கூறினார்கள். நண்பர்களும், உறவினர்களும் ஒருவர் மேல் செலுத்தும் செல்வாக்கு அதிகமானது என்று அந்தக் கணக்கெடுப்பு காட்டுகிறது. இந்த முறை புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்று அறிய வேண்டியது அவசியமாகிறது.

பிசாசு பிடித்த ஒரு மனுஷனை விடுவித்தபின் இயேசு அவனைப்பார்த்து ''நீ உன் இனத்தாரிடத்தில், உன் வீட்டுக் குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி உனக்குச் செய்தவைளை யெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்'' (மாற்கு 5:19)

பிலிப்பு நாத்தான் வேலை அறிந்திருந்தாரா என்பது தெளிவில்லை. ''பிலிப்பு நாத்தான் வேலைக் கண்டு நியாயப் பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக் கிறவரைக் கண்டோம் அவர் யோசேப்பின் குமாரனும் அவர் நாசரேத் தூரானுமாகிய இயேசுவே என்றான்'' (யோவான் 1:45).

பேதுரு அவன் வீட்டுக்கு வந்த போது கொர்நேலியு அவனு டைய நண்பர்களை அழைத்து வைத்திருந்.தான். ''கொர்நெலியு தன் உறவின்முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரை யும் கூட வரவழைத்து அவர்களுக் காகக் காத்திருந்தான். (அப்போஸ்தலர் 10:24)

# இங்கிலாந்தில் கி.பி.1500 முதல் கி.பி1700 வரையுள்ள காலத்தில் கிறிஸ்துவின் சபையைப் பற்றிய கண்ணோட்டம்

**–கெய்த் சிஸ்மேன்**

1500 முதல் 1600 வரை இங்கிலாந்தில் திருச்சபை பொதுவாக நாம் எண்ணுவதை விடப் பெரிதாக இருந்தது. குறைவான மதிப்பீட்டின்படி பார்த்தால் கூட திருச்சபைகளின் எண்ணிக்கை 50க்கும் கூடுதலாக இருந்தது. திருச்சபையின் உறுப்பினர்கள் பெரும்பாலும் பலதரப்பட்ட பணி செய்கிறவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு இங்கிலாந்து பார்லிமெண்ட்டில் பிரதிநிதித்துவம் இல்லை.

பியூரிடன்ஸ் என்ற வகையினர் வலுப்பெற்றபோது இங்கிலாந்தில் உள்நாட்டுப்போர் (1642-1648) காலத்தில் நடந்தது மன்னருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையேயும், திருச்சபைக்கும் ஏங்லிகன்ஸ் பியூரிடன்ஸ் என்ற பகுதியினருக்குமிடையே தர்க்கவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கிறிஸ்தவம் அங்கு அரசு மதமாகையால் இந்த வாதங்கள் அரசியலும் ஆவிக் குரியதுமாக இருந்தது. ஆதிக்கப் போட்டியின் விளைவாக, வில்லியம் லார்டு என்ற கான்டர்பரி பிஷப் (உயர்நிலை ஆங்லிகன் சபையைச் சார்ந்தவர்) லண்டனில் டவர் ஹில் என்ற இடத்தில் ஜனவரி 10, 1645 அன்று கொல்லப்பட்டார். 1649இல் முதலாம் சார்லஸ் மன்னர் நீதி விசாரனைக்குட்படுத்தப்பட்டு கொல்லப் பட்டார். இது தவிர வேறு எந்தக் காலத்திலும் இங்கிலாந்து மன்னர் இவ்வாறு கூட்டப் பிரகாரமாக சொல்லப்பட்டது இல்லை. திடீரென்று அரசியல் எதிரிகளால் கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் சட்டப்படி விசாரணை செய்து சொல்லப்பட்டதில்லை.

ஆலிவர் கிராம் வெல்லின் தலைமையில் பியூரிடன்கள் திருச்சபையிலும் பார்லிமென்டிலும், ராணுவத்திலும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஆலிவர் கிராம்வெல் இங்கிலாந்து மற்றும் காவல் பிரவு டிசம்பர் 16, 1653ல் நியமிக்கப்பட்டார். அவர் செப்டம்பர் 3- 1658ல் இறந்து அவர் மகன் ரிச்சர்டு பொறுப்பேற்றார். அது சிலகாலமே நீடித்தது.

மீண்டும் மன்னராட்சி 1662ல் நிலைநாட்டப்பட்டு சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. அந்தச் சட்டப்படி அப்பொழுது வெற்றி பெற்றிருந்த ஆங்குலிகன் கட்சிக்கு எதிராக பேசியவர்கள் யாவரும் தம் பதவியில் இருந்து நீக்கப்பட்டனர். பலர் சிறை பிடிக்கவும், சிலர் கொல்லப்படவுமாயிற்று. இந்தச் சட்டம் சிற்சில மாறுதல் களுடன் இன்றும் அமலில் இருக்கிறது. இங்கிலாந்து திருச்சபையின் போதகர் ஒருவர் இந்த நாட்களில் ஓரினச் சேர்க்கையாளரை சபையில் சேர்த்துக்கொள்ளலாம் என்று பிரசங்கிக்ககூடும். ஆனால் அதே பிரசங்கியார் குழந்தைகள் ஞானஸ்நானத்திற்கு எதிராகப் பேச முடியாது. அதனால் இங்கிலாந்து திருச்சபை இதுவரை ஞானஸ் நானம் பெறாதவர்களுக்கு முழுகி ஞானஸ்நானம் கொடுக்கும்.

இவ்வாறு உண்மையான திருச்சபை பலவாறு பாதிக்கப் பட்டது. ''பரதீசியின் இழப்பு'' என்ற புகழ்பெற்ற காவியத்தின் ஆசிரியர் இக்கால கட்டத்தில் பிரிஸ்பிட்டேரியன் சபையில் இருந்து பிரபுக்கள் சபைக்கு மாறி இதனிமித்தம் மிகவும் வேதனைப் பட்டார்.

1643-ம் ஆண்டு இங்கிலாந்து சபையின் பேராயரின் மகனும் கிறிஸ்துவின் சபையின் போதகராகவும் இருந்த பெஞ்சமின் காக்ஸ், குழுநடபடிகள் ஞானஸ்நானத்தை கண்டித்து கவென்டிரியில் பேசிய குற்றத்திற்காக பிரிஸ்பிட்டீரியன் சபை குருமார்களுடன் வாதிட்டபின் சிறைக்கு அனுப்பப்பட்டார். விவாதத்தில் வென்றவர் யார் என்று தெரியாது. ஆனால் பிரிஸ்பிட்டேரியன் சபையினர்

முதல் வாதத்துக்கு தூபமிட்டுவிட்டு பின் காவலரை அழைத்து சிறை பிடிக்க வைத்தனர். கவென்டிரியை விட்டே கடத்தி விட்டனர். போக மறுக்கவே சிறையில் தள்ளினர். விரைவில் விடுதலை செய்யப்பட்டார். 1657-ம் ஆண்டு, பெர்ஃபோர்டு சபை ஜான் பனியனை போதகராக நியமித்தது. அவருக்கும் ஹென்றிஜுன் என்பவருக்கும் அடிக்கடி கருத்து மோதல்கள் ஏற்பட்டது. பனிரண் டாண்டு சிறைவாசத்திற்குப் பின்னர் (1660 - 72) இங்கிலாந்து ஆங்லிக்கன் திருச்சபைக்கு வெளியே சபை அனுமதி பெற்ற போதகராக நியமிக்கப்பட்டார். 1688 மரித்தார் அந்த நாட்களில் ஜான் பனியன்தான் பிரபுக்களின் சபையில் தயாராகி கொள்கை போதித்த தலைவர். விசுவாசத்தினால் ஒருவன் இரட்சிக்கப்படு வான் என்று போதித்த கருத்து இன்றும் பாப்டிஸ்ட் திருச்சபையில் நின்று நிலவுகிறது.

கிராம்வெல் பிரபுக்களின் சபையைப்பற்றி நன்கறிந்திருந்தார். சிலகாலம் அவர் ஒரு கிறிஸ்துவின் சபையுடன் லண்டனில் சந்தித்தார். அதே திருச்சபையுடன் சேர்ந்து அமெரிக்காவில் பயணமான ''யாத்திரை பிதாக்களும்'' **(Pilgirim Fathers)** தங்கள் பயணத்துக்கு முன் ஆராதனை செய்தனர். ராணுவத்தில் இருந்த அநேகர் கர்த்தரின் சபையில் உறுப்பினராயிருந்தனர். அப்பொழுது ராணுவத்தின் தலைவர் கிராம்வெல். அப்பொழுது தான் கர்த்தரின் சபை முதன்முதலாக எவ்வித அச்சமுமின்றி கடவுளை ஆராதிக்கும் வாய்ப்புப் பெற்றனர். அவர்களுக்கு அரசியல் செல்வாக்கும் இருந்தது. கிராம் வெல்லின் மருமகன் ஃப்ளீட்வுட் **(Fleedwood)** துணைப்பிரபு பிரிஜட்டைத் திருமணம் செய்தார். தனது முதல் கணவர் இறந்த பின்னர் பிரஜட்டின் திருமணம் நடந்தது. கணவன் மனைவி இருவரும் கிறிஸ்துவின் சபை உறுப்பினர்கள், எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்கள். மேஜர் ஜெரல ஹாரிஸன், மேஜர் ஜெனரல் லட்லோவ், தளபதி ஹட்சின்ஸன் ஆகிய புகழ்பெற்றவர்களும் கர்த்தரின் சபை உறுப்பினர்களாக இருந்தனர்.

அதனால் மதத்தைக் கட்டாயமாகக் கொண்டுவந்தனர். கிராம்வெட் கூட ஒரு சுயேட்சை சபையின் உறுப்பினராகவே இருந்தார். அந்தச் சபை கிறிஸ்துவின் சபையா அல்லது மக்கள் (Congregation) முடிவெடுக்கும் சபை இயக்கத்தைச் சேர்ந்த சபையா என்று தீர்மானிப்பது கடினம். மக்கள் சபை என்பது அக்காலத்தில், சுயேட்சை சபை, பிரிந்து சென்ற சபை, திருச்சபைகளுக்கு எதிரான சபை என்று தான் அழைக்கப்பட்டது. கிறிஸ்துவின் சபையும் இந்த இயக்கத்தில் சேர்ந்ததாகவே முத்திரையிடப்பட்டிருந்தது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த சபைகள் எல்லாம் பிற்காலத்தில் ஐக்கிய சீர்திருத்த சபை (United Reformed Church) என்று அழைக்கப் பட்டன.

1660-ம் ஆண்டு மீண்டும், அரசு அங்கீகாரம் பெற்ற சபைக்கு எதிராக எல்லா சபைகளும், நசுக்கப்படலாயின. 1689-ம் ஆண்டு திருச்சபைகளிடையே சகிப்பு என்ற சட்டம் நிறைவேற்றப்படும் வரை இது நீடித்தது. இந்தச் சட்டம், மக்கள் சார்ந்த சபைக்கு எதிராகச் செயல்படவில்லை. குழந்தைகள் ஞானஸ்நானத்தை எதிர்த்துப் பேசவும் அனுமதித்தது.

1700-ம் ஆண்டுகளில் இவ்வாறு அரசு சார்ந்த சபைக்கு எதிராகவிருந்த சபைகள் நான்கு. ஞானஸ்நானம் முழுகித்தர வேண்டும் என்று இங்கிலாந்து திருச்சபை செய்து வந்தது. ஐரோப்பாக் கண்ட அளவில் பார்க்கும் போது (anabaptists) இது சிறிய அளவில் தணிந்தது. கிறிஸ்துவின் சபை ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும் இரு அமெரிக்காவிலும் இருந்தது. கால்வில் திருமுழுக்கு சபையினர் குறிப்பாக அமெரிக்காவில் இருந்தனர். பொதுவாக பாப்டிஸ்ட் சபை இங்கிலாந்தில் இருந்தது. இங்கிலாந் தில் இருந்த 'கிறிஸ்துவின் சபை' 1790-ம் ஆண்டு வரை பல்வேறு பாப்டிஸ்ட் சபைகளுடன் தொடர்பு வைத்திருந்தது. 1790க்குப் பிறகு பல கொள்கைகள் சமநிலைப் படுத்தப்பட்டு வேறுபட்டு விட்டது எனவே பிரிந்து காணப்பட்டது. 1800 ஆண்டுகளில் அமெரிக்காவின் மீட்புக் கொள்கைச் சபை (Restoration Church)யுடன் ஐக்கியம் வைத்துக்கொண்டு இருந்தது. ☆

# கிறிஸ்துவ ஜீவியம்

## – உதாசீனம் (புறக்கணிப்பு) –

**திருச்சபையில் கள்ளன்**

திருச்சபையில் விசுவாசத்திற்குப் பெரிய சவால் என்னவெனில் அறிவுப்பூர்வமானவையல்ல; எதிலும் ஆழமற்றதான உதாசீனம் தான் என்று ஒருவர் கூறினார். நான் அறிந்த அளவுக்கு திருச்சபைக்கு உள்ளிருந்து புறப்படும் பயமுறுத்தல் தவறான கொள்கையல்ல, வெறுக்கத்தக்க பாவமல்ல, விசுவாசக் குறைவுமல்ல ஆனால் உதாசீனம் செய்யும் மனோபாவமே!

எதையும் உதாசீனம் செய்யும் மனோபாவமே திருச்சபையில் புகுந்திருக்கும் திருடன். திருச்சபையின் நேரத்தையும், திறமைகளையும், ஆதரவையும் பறித்துக்கொள்ளும் கள்ளன். இதனால் கிறிஸ்தவர்கள் ஆராதனையிலிருந்தும், ஞாயிறு பள்ளிகளில் இருந்தும் விலக்கப்படுகிறார்கள். அங்கத்தினர்களின் ஆர்வம் குன்றிப் போய் எல்லா நல்ல திட்டங்களையும் பாழடிக்கிறது இயேசுவுக்குப் பணி செய்வதில் உள்ள இன்பத்தையும் பறித்து விடுகிறது.

எனவே திருச்சபையில் நாம் சமாளிக்க முடியாத பெரிய பிரச்சனை இப்படி எதையும் இலகுவான மனோபாவத்துடன் எடுத்துக் கொள்ளுவதே, நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பலர் எதிர்ப்பதில்லை. அதற்கு ஆதரவும் செய்வதில்லை. புறக்கணித்து விடுகிறார்கள்.

எல்லோரையும் முகஸ்துதி செய்கிறவர்களைக் கொஞ்சம் நம்பலாம், எல்லாரிடமும் குற்றம் காண்பவர்களைக்கூட கொஞ்சம் அதைவிடக் குறைவாக நம்பலாம், ஆனால் உதாசீனப் போக்குடையவர்களை நம்பவே முடியாது.

மனிதர்கள் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்ளலாம். ஒரு எண்ணத்தை ஒருவர் பெற்றிருப்பதினாலோ அது சரியென்றாகாது. அவரை கொஞ்சம் கொஞ்சமாக வேத அறிவைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டலாம். கிறிஸ்தவர்கள் கடவுளின் சேவைக்கென்று ஆயத்தப்படுத்தி கனிதரும் பணிக்கு வழிகாட்ட இயலும்.

நமது பிழைகளைத் திருத்தி பூரணப்பட்டு இயேசுவைப் போலாகலாம். ஆனால் ஒன்றே ஒன்று நம்மிடம் உதாசீன மனப்போக்கு மட்டும் இருக்கக் கூடாது.

******

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல, அனலுமல்ல, நீ குளிராயாவது, அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன். (வெளி 3: 15, 16)

# விசுவாசமுள்ள கிறிஸ்தவன் கனிகளைத் தருவான்

**–ஜேம்ஸ் W . ஃபோரிஸ்**

திருச்சபையின் வரலாற்றை நோக்கும்போது ஆதியில் இருந்து ''நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று நம் மக்களுக்குக் கூறி வருகிறார். தேவன் எப்போதும் தம்மைப் போலவே தம் பிள்ளைகளும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் எனக் காண்கிறோம். கர்த்தரின் பிள்ளைகளாக இருப்பது எவ்வளவு பாக்கியமனது என்று கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் (1 யோவான் 3:1). கடவுளின் பிள்ளைகள் கர்த்தரைப் போலவே இருக்க வேண்டும் என்பதால் கர்த்தர் என்றும் வாக்குத்தத்தைக் காக்கிறவராக இருக்கிறார் என்று பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் காண்கிறோம். மோசே இஸ்ரவேல் மக்களிடம் கூறும் போது ''ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன். (உபா. 7:9) ''அவர் தம்மைத் தாமே மறுதலிக்கமாட்டார்'' (2 தீமோ 2:13). எனவே நமது ஆண்டவர் வாக்குத்தத்தங்களைக் காக்கிறவர். எல்லாவிதத்திலும் நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவர். எனவே நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியே நமது ஆவிக்குரிய விசுவாசத்தில் இருக்க வேண்டும்.

சபையோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு கேள்விக்கு விடை தர வேண்டியவனாகிறான். ''தேவன் என்னிடம் எதிர்பார்க்கிறபடி நான் விசுவாசமும் உண்மையுள்ளவனுமாயிருக்கிறேனா? என்பது தான். வேதத்தின் அடிப்படையில் நாம் இருக்க வேண்டிய விசுவாசத்தில் பல நிலைகள் உள்ளன.

# எஞ்சினியர்களும் , கொல்லர்களும்

**–பாபி டாக்கரி**

அமெரிக்க நாட்டில் உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த காலம். ராணுவத்தளபதி ஸ்டோன்வால் ஜாக்ஸன். ஓர் இரவு அவர் தனது ராணுவம் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும் என்று கருதினான். தனது எஞ்சினியர்களை அழைத்து ஆற்றின் குறுக்கே ஓர் பாலம் அமைக்க வேண்டும் அதன் வழியாக தனது துப்பாக்கிப் படைகளும், ராணுவ வண்டிகளும் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டான். அதே போல கொல்லுத்தொழில் செய்யும் பணியாளர்களை அழைத்து ராணுவத்தின் தளவாட வண்டிகள் பாலம் கட்டப்பட்டவுடன் கடந்திட வேண்டும் என்று உத்திரவிட்டான். எஞ்சினியர்கள் தங்கள் அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தி பாலம் கட்டத் துவங்கினர். கொல்லுத் தொழில் செய்வோர் இதற்காக விரைவில் செயல்பட்டு நடைமுறையில் எப்படியாவது ஓர் பாலம் கட்டிவிட வேண்டும் என முனைந்தனர். முடிவில் கொல்லு வேலைக்காரர், மரக்கட்டைகள், இரும்புத் துண்டுகள் பாறைகள் இவற்றைப்பயன்படுத்தி ஓர் பாலம் அமைத்தனர். விடியுமுன் ராணுவம் அதன் தளவாட வண்டிகள் எல்லாம் அக்கரை போய் சேர்ந்துவிட்டன என்று அறிவிப்புக் கொடுத்தார்கள். கேட்டு ஆச்சரியப்பட்டு எஞ்சினியர்கள் எங்கே? என்று கேட்டான். கொல்லுவேலைக்காரர்கள் பொறியாளர் இன்னும் தங்கள் கூடாரங்களில் அமர்ந்து பாலம் போடவேண்டியதற்கான படம் வரைந்து கொண்டிருக்கிறார்கள் என்றனர்.

இந்த உதாரணம் நாம் எல்லோருக்கும் ஓர் பாடம் புகட்டுகிறது. தேவனுக்கு என்று பணி செய்யும் போது நிச்சயமாக அதில் ஆபத்துக்கள் உண்டு என்று நினைத்துக்கொண்டு அதற்காக

முன்னின்று செயல்படாமல், வெறும் திட்டங்களைத் தீட்டுகிறவர் களாக இருக்கிறோம், பலவகைகளிலும் இது மெய்யாக இருக்கலாம்.

### *சுவிசேஷப்பணி*

வேறெந்தப் பணியை விட சுவிசேஷப்பணிக்காக கிறிஸ்த வர்கள் பெரிய திட்டம் தீட்டுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். எவ்வாறு சுவிசேஷப்பணி செய்து ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவது என்பது பற்றி கருத்துப்பட்டறைகளும் கருத்தரங்கு களும் பெரிய அளவில் நடைபெறுகின்றன. சுவிசேஷப்பணியாற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அப்பணியின் செயல் முறை ஓட்டம், சொற்பொழிவு, என்னவெல்லாமோ செய்கிறோம் ஆனால் செயலில் சுவிசேஷப் பணியைச் செய்து காட்ட மாட்டோம்! நாம் கடல்களைக் கடக்கவில்லை. ஒரு தெருவைக் கடந்து கூட இப்பணி செய்யவில்லை (மத்தேயு 28:19, 20).

### *நீதிநெறிமுறை*

கிறிஸ்தவம் என்பது மேடைகளில் தோன்றி மறையும் ஒன்று என்ற அளவுக்கு நாம் செய்து கொண்டு இருக்கிறோம். பரிசுத்த வாழ்வை அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுவார்கள். ஆனால் அதன்படி நடக்கமாட்டார்கள். அவர் வசனத்தைக் கேட்டு அதன் படி நடக்கிறவர்களாக இல்லை (யாக்கோபு 1:22). அவர்கள் அறிவுப்பூர்வமாக அறிந்துள்ளனர். கிறிஸ்துவின் போதனைப்படி நடப்பதிலே வெறும் சூன்யம்!

### *குடும்ப வாழ்க்கை*

குடும்பங்களின் நிலை பற்றி தற்காலத்தில் அதிக அளவு கவலைகள் அடைவதைக் கேட்கிறோம். ''திருமணம் செழித்தல்'' என்ற பொருள்பற்றிய கருத்தரங்குகள், இதுபற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும் சாதனங்களாகவே இருக்கின்றன. கருத்துக்கள் அடிப்படையானவைகள் தான். இங்கேயே வெறும் கருத்து

வடிவமைப்புக்கள் தான். அன்றாட வாழ்க்கையின் நிலைகளில் செயலாக்கம் செய்யப்பயனில்லை.

### *ஆவிக்குரிய நடைமுறை*

தற்காலத்தில் மதசார்பான புத்தகம் எழுதிக் குவிக்கப்படு கின்றன. சில பாடங்கள் அவற்றைப் பின்பற்றினால் உலகில் பலவீனமுள்ளவர்களை, குறைபாடுள்ளவர்களை ஆவியின் தீரர்களாக்கி விடலாம் என்று கூறும் நூல்கள். இந்த நூலை வாங்குங்கள் எங்கள் வழிகாட்டுதலைப் பின்பற்றுங்கள், ஆவிக்குரிய உன்னத நிலையடைவீர்கள் என்று புத்தகங்கள் எழுதுகிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவன் சேவைகள் செய்துதான் மேன்மை யடைய முடியும் என்று வேதம் விளக்குகிறது. (மத். 30:26,27). புத்தக வாசிப்பில் மெய்க் கிறிஸ்தவம் அமைவதில்லை, ஆனால் சேவைகள் மூலம் தான்! கண்ணாடிக் கடலுக்குள் அமர்ந்து பெறும் வெற்றியல்ல. சந்துகளிலும், பக்க வழிகளிலும் சென்று அங்கே செய்யும் சேவையின் மூலம் ஆவிக்குரிய உயர்வு காணலாம்.

இதற்கென்று சரியான ஆயத்தங்களுடன் செல்ல வேண்டும். அடிப்படையான எண்ணங்களும், திட்டமிடுதலும் அவசியம். ஆனால் காலம் வரும்போது எண்ணங்கள் செயலில் மிளிர வேண்டும். வாழ்க்கையின் லட்சியம் அழகான திட்டம் தீட்டுவதல்ல. இணைப்புப் பாலங்கள் அமைப்பதே.

''உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாவது பெரியவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும், முதன்மையுள்ளவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே மனுஷ குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும். அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்'' (மத்தேயு 20:26, 27, 28). ✯

# தட்டுங்கள், கதவு திறக்கப்படும்

**–ஜார்ஜ் ஃபெங்க்**

இயேசுவானவர் கதவைத் தட்டுதல் தொடர்பான கதைகளைக் கூறும் போது முக்கியமாக அவைகளில் விடாமல் தட்ட வேண்டும் என்ற கருத்தினைக் கூறுவதைப் பார்க்கலாம். விடாமல், தொடர்ந்து மனந்தளராமல் இதைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

இன்று காலை எனது கடிகாரம் 5 மணிக்கு அலறியது. நான் எழுந்து காலை நடைப்பயிற்சிக்கு செல்ல அது அழைப்பு விடுத்தது. ஆனால் ஓராண்டுக்குமுன் நடைப்பயிற்சியில் இருந்த ஆர்வம் வேறு இன்று எனது கால்கள் தரைமீது பட்டுவிடக்கூடாது என்ற எண்ணம் இல்லை. மணி அடித்த போது எனக்குள்ளே ஓர் எண்ணம். "நீ நண்பர்களுடன் மாரத்தான் என்ற நீண்ட தூர ஓட்டம் ஓட வேண்டுமானால் நிச்சயம் எழுந்து பயிற்சிக்குப் போகத்தான் வேண்டும்" என்றது. எழுந்திரு! பயிற்சிக்குப் போ என்றது இதுவரை "மாரத்தான்" முறை ஓட்டம் ஓடியிருக்கிறேன் மனஞ் சோர்வுறாமல் இருப்பது என்பது சுலபமானது அல்ல! எத்தனை சாக்குப் போக்குகள் இடையில் வந்துவிடும். என்னுடைய அனுபவத்தைச் சொல்கின்றேன். பயிற்சிக்குச் செல்ல பல முறை எழுந்து உரிய காலணிகளை எல்லாம் அணிந்து விட்ட பிறகு கூட மீண்டும் படுத்துக் கொள்வேன். வைராக்கியமல்ல, விடாப்பிடி யாகவுமல்ல; எனது சுயம் வென்றது! உடற்பயிற்சி உடலுக்கும் மனதுக்கும் நல்லது என்று அறிவேன். எனவே அடுத்த நாள் அதிக முயற்சி எடுத்து விட்டுவிடாமல் அதிகாலை எழுதல் பயிற்சி செய்தல் என்று தொடர்கிறேன் விடாமுயற்சியுடன், ஒரு நாளுக்கு ஒருமுறை!

நமது ஆவிக்குரிய நடைப்பயிற்சியும் அப்படியே தான் இருத்தல் வேண்டும். ஒரு நாளை நமக்குத் தந்து அதில் வாழவும் ஊக்கப்படுத்துகிறார். அந்தந்த நாளுக்கு என்று நான் வாழ நினைத்தாலும் முடிவதில்லை. உங்கள் நிலை எப்படியோ! அடுத்த நாள் வரவிருக்கும் கஷ்டங்களைப்பற்றி இன்றே கவலைப்படத் தொடங்கி விடுகிறேன். ஆனால் தேவன் என்னைப் பார்த்து ''நீ அதைச் செய்ய முடியும், விடாமல் தொடர்ந்து செய்திடு'' என்கிறார். ''இன்றே, என்று கூறுகிறார்''. ''கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்'' என்று கூறுகிறார்.

இயேசு அங்கே என்ன கூறுகிறார்? கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்கிறார். தொடர்ந்து செய்யுங்கள். நான் உங்களுடனே இருக்கிறேன்.

ஆப்பிரிக்காவில் வாழும் நாம் ''செய்வோம் - பெறுவோம் என்று செயல்பட வேண்டும் என்று வேண்டுகிறேன். ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலிப்பியர் 4:13).

❋❋❋❋❋❋

**''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.''**

**ரோமர் 1 : 16**

# அனு தினமும் கிறிஸ்துவுக்குள் ஜீவித்தல் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருத்தல்

**–ஜேக் ஹாரிமேன்**

ஒரு மனிதன் பெரியவனாகும் போது, அவன் நன்முறைச் சிந்தனையா அல்லது எதிர்மறைச் சிந்தனையா என்ன மனோபாவத்துடன் இருப்பான் என்பது வாழ்க்கையில் முக்கிய மான ஒரு போராட்டம். எல்லாரும் நன்னம்பிக்கையுடன் இருக் கவே விரும்புகிறோம். ஆனால் பலருக்கு அது கடினமாக இருக் கிறது. ஆனால் தேவனை நம்பக்கமாக வைத்துக் கொள்ளும்போது நல்ல எதிர்பார்ப்பு இருக்கவே செய்யும்.'

சாலமோன் தேவனற்ற ஓர் வாழ்க்கையைப் பார்த்தான். ''மாயை மாயை எல்லாம் மாயை '' என்று கூறினான். பின்னர் வாழ்க்கையை தேவனுடன் இணைத்துப் பார்த்தான். பிரகாசமான ஓர் எதிர்காலம் தெரிந்தது. பத்துமு தீவில் சிறையிலிருந்த அப்போஸ்தலனாகிய யோவானுக்கு, தேவன் இல்லாமல் வாழ்க்கை இருண்டுதான் போயிருக்கும்.

ஒருவேளை அதனால் தான் அவன் பரலோக தரிசனங்களைக் கண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பிதாவை மற்றும் பல காட்சிகளையும் கண்டு பரவசமடைந்தான். (வெளி 4:5) அவர் கண்ட காட்சியில் தேவன் இருந்தார், எதிர்காலம் ஒளியுள்ளதாக இருந்தது.

மனுஷீகக் கோணத்தில் உலகக்காரியங்களைக் காண்போ மானால் எல்லாம் இருளும் அழிவும் உடையதாகக் காணப்படும். பொதுவாக எல்லாமும் அத்தகைய காட்சிகளையே காண் கிறார்கள். அவர்கள் உலகைக் கண்ணோக்கும்போது, அதில்

தேவனை இணைத்துக் கொள்ள வேண்டும்; அவரை நம் காரியங்களில் இருத்திக் கொள்ள வேண்டும்.

தேவன் இவ்வுலகை ஆளுகிறார். எதிர்காலத்தில் என்ன இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால் யார் அதனைக் கையில் வைத்திருக்கிறார் என்று தெரியும். எல்லாம் வாழ்வில் ஆகும். நன்மையான காரியங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். தேவன் நல்லவர்கள் வாழ்வில் செயல்படுகிறார். உங்களிலும் அப்படியே (ரோமர் 8:28).

இன்னும் சிறந்த காரியங்கள் நடைபெறும் என்று நான் நம்புகிறேன். கீழ்ப்படியும் தேவ பிள்ளைகள் பரலோகத்தை நோக்கிச் செல்லவிருக்கிறார்கள். இந்த இரு காரியங்களும் நமது எதிர்காலத்தை பிரகாசமும் மகிமையும் உள்ளதாக ஆக்கும்.

☆☆☆☆☆☆

## வீட்டிலிருக்க வேண்டியது.....!

ஒவ்வொருவர் வீடுகளிலும் இருக்க வேண்டிய மிக முக்கியமான புத்தகம், வேதாகமமே! (பைபிள்) ஒவ்வொரு நாளும் நாம் அதைப் படிக்க வேண்டும். அதில் உள்ள பொக்கிஷத்தை நாம் தேடிக் கண்டடைய வேண்டும். இரவும் பகலும் தியானிக்க வேண்டும். இப்படிச் செய்தால் ஆசீர்வதிக்கப் படுவோம்.

# தாகமுள்ளவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்

[ஏசாயா 55:1]

**ஜானி பெப்பர்**

அந்தப் பெயரே கவர்ச்சியாயிருக்கிறதல்லவா?

ஆனால் ஜானி பெப்பர் அயர்லாந்து - அமெரிக்கா கலந்த பெயர் வைத்திருப்பதோடு மட்டுமல்ல, புகழ் விரும்பியாகவும் இருந்தான்.

ஏதென்ஸ் நகரில் ஒரு கூடாரத்தில் நாங்கள் இருந்தபோது அக்கூட்டத்தில் பாடல்களை நடத்துகிறவரான கிளிண்டன் பிராக்கீன், (அலபாமா) என்பவர் ஆராதனையில் சரியான ஒருவேளையில் ''இப்பொழுது சகோ. ஜானி பெப்பர் நம்மை ஜெபத்தில் நடத்துவார்'' என்று அறிவிப்புக் கொடுத்தார்.

எல்லாரும் தலைவணங்கியிருந்தோம் - ஜானி பெப்பர் ஜெபிக்க ஆரம்பித்தான். ''பிரசங்கம் செய்கிறவரான மெக்லன் டீர் பிரசங்கம் செய்யத் தகுந்தபடி. பிரசங்கிக்கவும் நாங்கள் கேட்கிறவர்களுக்கேற்றபடி கேட்கவும் உதவி செய்தருளும்'' என்று ஜெபித்தான். எல்லாரையும் விழிப்படையச் செய்யும் ஓர் ஜெபமல்லவா?

ஜானி பெப்பர், புதிதாக பிரசங்கிக்க வந்தவருக்கு எவ்விதத்திலும் அறிமுகமில்லாதவர். ஆராதனை முடிவில் தான் டோயில் பான்ட்டா ஜானியை அறிமுகம் செய்து வைத்தார்.

வழக்கமான நலம் விசாரிப்புகளுக்குப் பின், உள்ளூர் சுவிசேஷகர் இவ்வாறு கூறினார். ''இந்த ஆண்டில் இவர் 87வது

நற்செய்திக்கூட்டங்களில் பங்கு பெற்றுள்ளார். 87 திருச்சபைகள் இவரின் வருகையால் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. ஐம்பது மைல் சுற்றளவில் உள்ள பல்வேறு சபைகள் இவரின் நன்றி அறிவிப்பால் பலப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, கிறிஸ்தவராகி 45 ஆண்டு காலத்தில் இவர் 5 முறைகள் மட்டுமே ஞாயிறு ஆராதனைக்குச் சென்றதில்லை. அந்த நாட்களில் அவர் உடல் நலமின்றி இருந்தார். மற்றபடி பிற நாட்களில் அவர் தவறியதேயில்லை.

டோயில் சொன்ன காரியங்களில் இருந்து சில வினாக்கள் எழுகின்றன. ''ஜானி பெப்பர் வீட்டுப்புறத்தில் மழையே பெய்யாதா? அவர் வழியில் செல்லும் போது மிகுந்த குளிர் தாக்கியிறாதா? ஜானி வீட்டுக்குச் செல்லும் வழி கடக்க முடியாதபடி சேதமுற்றிருக்காதா? உஷ்ணம் இடைமறித்திராதா? செய்யப்பட வேண்டிய வேலைகள் குறுக்கிட்டிராதா? வேறு இடங்களுக்கு அவர் செல்ல வேண்டியிருந்திராதா? ஜானி களைத்துப் போயிருக்க மாட்டாரா? அவருக்கு உறவினர்கள் உண்டா? அவரது 11 மக்களைப் பற்றியென்ன, வேதாகம வகுப்புகளுக்குச் செல்ல மறுத்து அவர்கள் தொல்லை கொடுத்திருக்க மாட்டார்களா? (அவரது 11 மக்களும் நல்ல விசுவாசிகள்).

பொதுவாக சகோரர்கள் ஆராதனைக்கு வரவியலாமல் போனதற்குக் கூறும் காரணங்கள் ஜானி பெப்பருக்கு வந்திராதா? ஆனாலும் அந்த ஆண்டில் 87 சுவிசேஷக் கூட்டங்களுக்குச் சென்று அவைகளுக்கு கண்ணியமூட்டியிருக்கிறார். மேலும் 48 ஆண்டுகள் ஆராதனைகளுக்குத் தவறாமல் வந்திருக்கிறார். ஜானி பெப்பர் எப்பேர்ப்பட்ட முன்மாதிரியான மனிதர்!

- ஜிம் பில் மெக்லெண்டீர்

# ஞாயிறு இரவில் மட்டும் வேண்டாமே!

இயேசு சம்பாதித்த சபையை நான்
எப்போதும் நேசிக்கிறேன்
அது சரியென்றும் யோசிக்கிறேன்

ஞாயிறு காலை ஆராதனை வேளைக்கு
அவசியம் செல்கின்றேன்
ஞாயிறு மாலை அங்கு செல்வது இல்லை தானே;

இறைவனின் பாடல்களைப் பாடிப்பாடி
இன்பம் காணுகின்றேன்.
பாடல் நிறைந்த ஆராதனைகள் பக்குவமானவைகளே.

இதை ஞாயிறு காலை
ஆராதனைக்குச் செல்லுகிறேன்
ஞாயிறு மாலை இப்படி செல்லுவதில்லையே.

திருச்சபை நடத்திகள் பிரசங்கிக்கு இறைவனின் ஆசீர்
அவர்க்கு கடவுளின் வல்லமை
அதிகாரம் கிடைக்கட்டுமே.

எனது இடத்தில் பாவியை வைத்து எண்ணியும் பார்க்கிறேன்.
எல்லா ஞாயிறு மாலை நடந்திடும் ஆராதனை வேளை யில் தான் சுவிசேஷம் அறிவிக்கும் போது கேட்டு மகிழ் கிறேன் சுத்தம் நிறைந்த இன்பம் அதனால் பெறுகிறேன்.

ஞாயிறு காலையில் தான் அந்த
சுவிசேஷம் கேட்கிறேன்
அது ஞாயிறு மாலை வேளைகளில் நடப்பதில்லையே.

மழையில் நனைந்தும் பனியில்
பெய்த பனிமழைகள் எதுவும்
பாராது என்றும் நன்மைகள் செய்திடுவேன்.

ஞாயிறு ஆராதனைக்கு
தவறவே மாட்டேன்
ஞாயிறு மாலை அப்படி ஏதும் நடப்பதில்லையே.

இறைவன் ஈயும் பெலன்
எனக்கு நிறையவே வேண்டும்.
ஒளியில் நடக்க அதுதான் எனக்கு உற்ற துணையாகும்.

உதவி தேடி ஞாயிறு காலையில்
ஆராதனைக்குச் செல்கிறேன்
ஞாயிறு மாலையில் எங்கும் எதற்கும் செல்வதில்லையே.

மரணம் என்பது எல்லா மனிதர்க்கும் விதித்தது தானே
அது நடக்கும்போது நானும்
அந்த வரிசையில் நிற்பேனே.

ஞாயிறு காலையில் நான்
மரித்திட விழைகிறேன் அது ஞாயிறு மாலை
நடந்திட வேண்டாம் என்றும் நினைக்கிறேன்..

☆☆☆☆☆☆

# கிறிஸ்தவனின் ஆதி அன்பு

-டான்.எஸ்.நார்வுட்

மக்கள் முதலில் கிறிஸ்தவராகும்போது, இரட்சிப்படைந்தது பற்றி மிகவும் உணர்ச்சிப் பெருக்கு மேலிட இருக்கிறார்கள். உலகம் முழுவதும் என்று இதனைப் போதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில் ஆர்வம் பற்றி எரிகிறது. ஆண்டவரை மிகவும் நேசிக்கிறார்கள். சந்திக்கும் எல்லாரிடமும் அவரைக் குறித்துக் கூற விரும்புகிறார்கள். இவ்விதமாக எப்போதும் இருந்திட வேண்டும் என்று தான் தேவன் விரும்புகிறார். (1 கொரி. 15:58, 2 கொரி 5:14,15).

உண்மையான ஒரு சீஷன் தேவனுக்குத் தன்னையே தந்து விடுகிறான். தான் கற்றுக்கொள்ளவும், பயன்படவும் தான். அப்பேர்ப்பட்டவர்கள் நன்மை செய்வதில் சோர்ந்து போக மாட்டார்கள் (கலா 6:9). கிறிஸ்துவுக்காகப் பணியாற்றுவதில் எப்போதும் ஆர்வமிகுந்து காணப்படுவார்கள். (ரோமர் 12:11).

முதல் நூற்றாண்டில் எபேசு சபையில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் எப்படியோ தங்கள் ஆதி அன்பை விட்டு விட்டனர். (ஆதி அன்பு என்பது - எல்லாவற்றிலும் கிறிஸ்துவை முன்வைத்து எந்தக் காரியத்திலும் அவருக்கு முதலிடம், எவ்விதக் காரியங்களிலும் அவருக்கு முக்கியத்துவம்). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் சத்தியத்தைப் போதித்தனர். (வெளி 2:2). கள்ளப்போதகர்களைச் சந்திக்க மாட்டார்கள். பொறுமையுடன் முன்னேறினர். சோர்ந்து போனதில்லை. (வெளி 2:3). அவருக்காக உழைத்தார்கள் இத்தனையிருந்தும் ஆதி அன்பை இழந்து போனார்கள்.

இதிலிருந்து நாம் காண்பது - ஒருவர் சத்தியத்தைப் போதிக்கலாம், ஆராதனைகளை வெளிப்பிரகாரமாக சரியாக நடத்தலாம். ஆனாலும் இவைகளையெல்லாம் செய்யும் போது சரியான மனோபாவமின்றியிருக்கலாம்.

எந்த ஒரு ஆராதனையும் அவர்பால் கொண்ட மெய்யன்பின் விளைவாகவே நடத்தப்படவேண்டும். (1 கொரி 13:1-3). இல்லை யானால் அது வீணானதாகிவிடும். கடமைக்காக நாம் போதித்தாலும் ஆராதனைகளை நடத்தினாலும் அவர்மேல் கொண்ட மெய்யன்பின் விளைவாக இராவிட்டால் அவருக்கு அது ஏற்புடையதாகாது. இது கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு பாடம்.

மற்றொன்று : அவரில் நிலைத்திருந்து அவருக்குச் சேவை செய்ய வேண்டும். ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராகியிருப்பீர்கள். (யோவான் 8:31). ''கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2 யோ 9 : 10)

---

## நல்ல விதை

**''அந்த**

**விதை**

**தேவனுடைய**

**வார்த்தை''**

லூக்கா 8:11

# சமாதானத்தைத் தேடுதல்

**–இ. கிளாட் கார்டனர்**

சபையிலும், வீட்டிலும் சமுதாயத்திலும் ஒற்றுமை இருப்பது ''நன்மையும், செம்மையுமானது'', இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும் இன்பமுமாயிருக்கிறது என்று தாவீது ராஜா கூறுகிறார். (சங்கீதம் 133:1). நாம் சமாதானத்தைத் தேடுகிறவர்களாக இருக்க வேண்டும். தீய எண்ணங்களை விளைவிப்பவர்களாக இருக்கலாகாது. ''நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய், சீர்பொருந்தியிருக்க வேண்டுமென்று....'') என்று பவுல் கூறுகிறார். (1 கொரி 1:10).

தேவனிடம் அன்பு, சகோதரர்களிடம் அன்பு வைத்திருப்பது சகோதரர் மத்தியில் மிகப்பெரிய நன்மைகளை விளைவிக்கும். ''நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருக்கும்படி ஆவியினாலே சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்து மாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாக இருக்கிறபடியால் ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்'' என்று பேதுரு கூறுகிறார். (1 பேதுரு 1:22).

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிய வேண்டும். தம் வசனத் தின் மூலம் என்ன காரியங்களைப் போதிக்கிறாரோ அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே உண்மை பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் ஆவிக்குரிய குடும்பத்திலுள்ளவர்களுக்கும்

மற்றவர்களுக்கும் பொருந்தும். வேதாகமம் தான் நம்மை பூலோகத்திலும் பரலோகத்திலும் கட்டுப்படுத்துகிறது. அதே வார்த்தையின் மூலமாகத்தான் எல்லாரும் ஓர் நாள் நியாயந் தீர்க்கப் படுவோம். (2 தீமோத் 31:16, 17, மத் : 16:19, யோவான் 12:48).

நம்மை அலைக்கழிக்கிறதான பிரச்சனைகள் எழும்பும் என்று நாம் அறிந்திருக்கிறோம். மேலும் மக்களின் ஆத்துமாக்களின் மேலும் நாம் கொண்ட வாஞ்சையினால், அந்தப் பிரச்சனைகளை சரியாகவும், நேர்மையாகவும் தீர்க்கப்படுவோம். எது சரியோ அதையே செய்வோம். அந்தப் பிரச்சனைகளை அணுகும் போது இதன் அடிப்படை உண்மை என்ன? எது இதில் திரித்துச் சொல்லப் படுகிறது என்று கேட்போம். அது இரண்டு குழுக்களினால் உண்டானதென்றால் இரு குழுக்களிடமும் நேரடியாகக் கேட்டறிந்து அவர்கள் சரியான தகவல்களைத்தருகிறார்களா என்று அறிந்து சொல்லிவிட வேண்டும்.

ஆவியானவரின் ஏவுதலால் இவ்வாறு வரும் கருத்து வேறுபாடுகளைக் குறித்து நல்ல ஆலோசனைகளைத் தந்துள்ளார். ''சகோதரரே, ஒருவருக்கு ஒருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்'' என்கிறார். (யாக்கோபு 4:11).

இதற்கு முன்வரும் வசனங்களில் தெய்வீக ஞானம் எவ்வாறு கிரியை செய்கிறது என்று கூறுகிறார். ''பரத்திலிருந்து ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்த தாயும் பட்சபாதமில்லாததையும் மாயமற்றதாயும் இருக்கிறது. (யாக்கோபு 3:17, 18).

நாம் பிரச்சனைகள் ஏற்படும்போது வேதம் வழங்கும் ஞானத்துடன் செயல்பட்டால் எந்தச் சூழ்நிலையாக இருப்பினும் சமாதானம் நிலைநாட்டப்படும். ★★★

# இது நமக்கு ஓர் சவாலாக இல்லாவிட்டால்....

**–டான் வீலர்**

மார்ட்டி ரெவலெட், எரியும் ஓர் வாகனத்திலிருந்து ஓர் பெண்ணைக் காப்பாற்றியதால் ஒரு வீரராகக் கருதப்பட்டார். கரங்களே இல்லாத மார்ட்டி இந்த தீரச் செயலைச் செய்தது மிகவும் பெரிய சாதனையாகும். அவரைக் கவனித்துப்பார்த்தால் அவர் தினமும் செய்யும் ஒவ்வொரு செயலும் தீரச்செயலே. வில்லியம் என்ற கரங்களில்லாத ஒரு வாலிபனுக்கு நல் ஆலோசனைகள் வழங்கி அவனால் செய்ய முடியாத, கற்க முடியாத காரியம் ஒன்றுமில்லை என்று காண்பித்தார். மார்ட்டி அந்தப் பையன் வில்லியத்தை அழைத்துக்கொண்டு போய் மீன் பிடிக்க எப்படி தூண்டில் போடுவது என்றும் தனது கால்கள், பற்கள், தோள்கள் ஆகிய இவைகளைப் பயன்படுத்தி எப்படி வலை வீசுவது மீன் பிடிப்பது என்று சொல்லிக் கொடுத்தார். இப்படி அசாத்தியமான காரியங்களைச் செய்கிறது பற்றி என்ன நினைக்கிறார்? நாம் செய்கிற காரியம் ஓர் சவாலாக இல்லாவிட்டால் நாம் எதையும் கற்றுக்கொள்ள முடியாது என்று கூறுகிறார்.

அப்படியானால் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறாத கனவுகளை நினைத்துப்பாருங்கள். அவைகளைச் சாதிக்க முடியாதபடி எது தடை செய்கிறது? பயந்தான் உன்னை தடை செய்கிறது என்றால் மார்ட்டினை நினை. அவர் கற்றதெல்லாம் பயத்தை வென்றதினால் தான். அவன் ஒரு சிறுவர் இல்லத்தில்

வாழ்ந்தான். ஆலோசகர் எவருமில்லை. ஏதாவது சாதிக்க வேண்டும் என்றால் செய்துதான் பார்க்க வேண்டும் என்று செய்வான். அதில் பல பகுதிகளில் தோல்வி ஆனால் அவற்றில் வெற்றியும் கண்டான்.

தற்கால உலகில் நடைபெறும் சம்பவங்கள் நமக்கு ஊக்கமளிக்கிறது என்றால், தேவனுடைய வார்த்தைகளில் இத்தகைய காரியங்கள் செய்து வெற்றி பெற பல வாய்ப்புக்கள் உண்டு என்று காட்டும் சம்பவங்கள் நிறைய உண்டு. ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, ரூத், தாவீது,எரேமியா, தானியேல், பேதுரு, பவுல்,பர்னபாஸ் இன்னும் எத்தனையோ பேர்!

நம்மை ஊக்கப்படுத்த தேவனுடைய வார்த்தைகள் இருக்கிறது. வேதத்தில் ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்கள் உண்டு. பேதுரு தன் நிருபத்தில் கூறும்பொழுது ''மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்'' என்று குறிப்பிடுகிறார். (2 பேதுரு 1:4). பவுல் இதனைத் தொடர்ந்து எபேசியர் நிருபத்தில் ''நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே நமக்குச் செய்ய வல்லவர்''. (எபேசியர் 3:20) என்றார். வாக்குத்தத் தங்களுடன் பல எதிர்பார்ப்புக்களையும் தேவன் தந்திருக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கையின் குண லட்சணங்கள் (எபேசியர் 2:10)-ல் கூறப்படுகிறது'' நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக் கிறோம். நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்'' (எபேசியர் 2:10). நமக்குக் கொடுக் கப்பட்ட வாக்குத்தத்தங்கள் எதிர்பார்ப்புக்கள் இவைகளை முன் வைத்துக்கொண்டு வாழ்க்கையில் வரும் சவால்களைத் தைரியமாக தேவன் மகிமைப்படும்படி சந்திப்போம்.

★★★★★★

# வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்து....

**-மைக் கிங்**

நம்மை நாமே பெரிதாக நினைத்துக்கொள்ளுகிறோம் என்று எண்ணியதுண்டா? நேற்றிரவு படுக்கைக்குச் செல்லும் போது நாளைக்கு காலையில் எழுந்திருப்பேன் என்று எண்ணினேன். கர்த்தர் நல்லவர். நானும் எதிர்பார்த்தபடியே எழுந்தேன். எனது இவ்வுலக வாழ்க்கைப் பயணம் முடிவுற்றிருக்கலாமே! மரணமே இல்லாத அடுத்த உலகத்தில் எழுந்திருக்கக் கூடுமே.

நான் இன்று காலை என் பணிக்குச் சென்ற போது எல்லாரும் தங்கள் தங்கள் பணிக்கும் பள்ளிக்கும் காலை உணவுக்கும் சென்று கொண்டிருந்தார்கள். தங்கள் காரியங்களில் மூழ்கிப் போயிருந் தார்கள். வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை உணராதவராக இருந்தனர். (அவர்கள் தங்கள் வாகனத்தை வேகமாக ஓட்டிச் செல்வதிலிருந்து நான் கண்டு கொண்டேன்.)

ஓர் ஆண்டுக்கு முன் இது போன்ற பிற்பகலில் உலகை விட்டுப் பிரிவைப் பெற்றுக் கொண்டிருந்த என் தாயாரின் படுக்கைக்கு அருகில் நின்று கொண்டிருந்தேன். அன்றில் இருந்து ஒவ்வொரு நாளின் அருமையை அறிந்து கொண்டேன். மனித உடல் வாழவேண்டும். கிடைக்கும் இன்பத்தைத் துய்க்க வேண்டும் என்று நினைக்கிறது. அதனால் ஓர் வாழ்க்கை முடியும் போது அத்தனை வேதனைப்படுகிறோம்; ஆனால் நாம் உயிரை விட வேண்டியவர் களாக இருக்கிறோம்.

உலகில் வாழும்போது நன்முறையில் வாழ்ந்து அன்பு செலுத்தி ஒவ்வொரு நாளையும் அனுபவிக்க வேண்டும் என்று

மரணம் தான் நமக்கு நினைவூட்டுகிறது. ஒருவர் எத்தனை காலம் இருப்பார் என்று தெரியாததினால் கிடைக்கும் காலத்தை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடவுளுடைய மனிதனாகிய தாவீது 'இது கர்த்தர் உண்டு பண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்' (சங் 118:24) என்று கூறுகிறார். நாம் உலகின் மேல் வைத்திருக்கும் சிந்தனையை எந்த வரிகள் விளக்க மாகச் சொல்ல முடியும்? சுயநலம், மகிழ்ச்சியின்மை, நோக்க மின்மை, இவைகளா? வாழ்க்கையானது நன்மையானது அது தரும் வாய்ப்புக்களும் இன்பங்களும் எண்ண முடியாதவை. இவை களைப் பயன்படுத்தி ஏன் நமது சுயமுன்னேற்றத்துக்கும் கடவுளின் சேவைக்கும் நமது சகோதரர்களின் நன்மைக்காகவும் பாடு படக்கூடாது?

வாழ்க்கையை இவ்வாறு பயன்படுத்தினால் அதன் மதிப்பு மிக அதிகமாகக் கூடுதலாகும்.

---

# காலம்

**காத்திருப்போருக்கு மெதுவாகச் செல்லும்.**

**வருத்தப்படுவோருக்கு மிக நீளமாக இருக்கும்.**

**சந்தோஷப்படுகிறவர்களுக்கு குறுகியதாக இருக்கும்.**

**கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ காலம் ஒரு நித்தியம்.**

# தெருவைச்சுத்தம் செய்பவளிடமிருந்து நான் கற்றுக்கொண்ட சில காரியங்கள்

**- மைக் இன்டன்**

அது ஓர் அசுத்தமான பணி தான். ஆனால் யாராவது அதைச் செய்துதானே ஆக வேண்டும் என்ற பழமொழி சமீபத்தில் எனக்குப் புதிய அர்த்தங்களோடு தோன்றுகிறது. செய்வதற்கு முடியாத காரியங்களைப் பற்றியல்ல ஆனால், அருவறுப்பானதும் தொல்லை கொடுக்கக் கூடியதுமான பணிகளைக் குறிப்பிடும்போது இந்தப் பழமொழியை நாம் பயன்படுத்துவோம். நாம் படிக்கப் போகும் கதையில் நாம் ''அழுக்கு'' என்பதைப் பற்றியே காணப் போகிறோம். வெகு சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த போது தெருவைச் சுத்தம் செய்பவரின் பணியை நான் கவனித்தேன். வசதிபடைத்த நாடுகளில் நள்ளிரவு நேரங்களில் குப்பைகளை அகற்ற பெரும் இரைச்சலுடன் செல்லும் இயந்திரப் பணி போன்றது போல அல்ல இப்பணி. தொங்கிப் போன தோள்களுடனும் ஓர் தள்ளுவண்டியுடனும் வைத்துக்கொண்டுள்ள 40 வயதுப் பெண் கையினால் கட்டப்பட்ட துடைப்பத்துடன் பணியாற்றும் காட்சிதான்.

ஹைதராபாத்தில் அடுக்குமாடியொன்றில் நான் நின்று கொண்டிருந்தேன். பொழுது புலரும் நேரம் நகரம் விழித்தெழும்பிக் கொண்டிருந்தது. சாலையில் துடைப்பம் குட்டையாக இருந்ததால், குனிந்து கொண்டு தன் பணியைச் செய்ய வேண்டியதாக இருந்தது. முதுகு நிரந்தரமாகக் கூனிப்போயிருந்தது. ஒரே சீராக வேலை செய்தாள். முதலில் குப்பைகளை கூட்டிச் சேர்ந்தாள். பின்னர்

அவற்றை அட்டைக் கூடையில் அள்ளித் தள்ளுவண்டியில் போட்டாள். எவ்வளவு சோர்வு தரும் பணி இது என்று நினைத்தேன். இரண்டொரு நாள் கூட அது சுத்தமாக இருக்கிறது. மனித நடமாட்டம், மிருகங்களின் நடமாட்டம் அதிகம், ஆனாலும் அவள் தன் பணி பயனற்றது என்று நினைக்காமல் தான் அதைச் செய்து கொண்டிருக்கிறாள்.

அவள் செய்து கொண்டிருக்கும் பணியை மறைந்திருந்து கவனித்தேன். அப்பொழுது அதிலிருந்து ஒரு கிறிஸ்தவன் பெற்றுக் கொள்ள வேண்டிய உண்மை எனக்குத் தோன்றியது. அந்தப் பெண்ணின் பணி தற்காலிகமானது. ஆனாலும் அது தற்காலிகமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவே செய்தது. கொஞ்சம் தூரத்தில் குப்பை கூளங்களும், தூசியும் படிந்த வேறொரு வீதி காணப் பட்டது. ஆனால் இங்கே இந்த வீதி தற்காலிகமாக இருப்பினும் பெருக்கிச் சுத்தமாக இருந்தது.

உலகை நாம் சிலவேளைகளில் வெறுக்கிறபோது அதுவும் பயனற்றதாகவே தோன்றுகிறது. தேவன் படைத்த உலகத்தை மனிதன் எவ்வளவு குப்பை கூழங்கள் நிறைந்ததாக்கிவிட்டான். நாம் எவ்வளவு தான் முயன்றாலும் மீண்டும் அது அழுக்கு நிறைந்ததாக ஆகிவிடுகிறது. இதன் பொருளை இயேசு அறிவார். மனிதன் பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக தம் உயிரையே கொடுத்தார். ஆனால் பாவத்திலிருந்து கழுவப்பட்ட பின்னரும் திரும்பவும் பாவச் சேற்றில் புரளும் நிலையை நாம் காண்கிறோம். (2 பேதுரு 2:22). பவுலும் கூட இந்த இழி நிலையை அறிந்து எழுதுகிறார் (கலாத்தியர் 1:6, 3:1). ஆவியில் ஆரம்பித்து மாமிசத்தில் முடித்த விசுவாசிகளைப் பற்றி அவர் இப்படி எழுதுகிறார். தான் செய்த திருப்பணி கள்ளப் போதகர்களால் களங்கமாகிப் போனதோ என்று வருந்தி எழுதுகிறார். ஆனால் இந்தக் காரியங்களால் இலக்கற்றுப் போய்

விடாது பவுலைப்போல நாமும் இலக்கை நோக்கித் தொடர வேண்டும். (பிலிப்பியர் 3:12-15).

நமது பணி வைக்கோலில் செய்யப்பட்டது போல எரிந்து போய் விடலாம் என்றாலும் தொடர்ந்து பணி செய்ய வேண்டும். (1 கொரிந்தியர் 3:15). நமது கையில் ஒப்படைக்கப்பட்ட பணியை நாம் செய்ய வேண்டும். இருளில் வீசும் ஒளி போல என்று நாம் எடுத்துக்கொண்டு பணி செய்ய வேண்டும். நாம் உன்னதமான தேவ பிள்ளைகள். சூழ இருக்கும் உலகத்தாரைப் போல அல்ல. நாம் நடந்து செல்லும் பாதை தேவன் நமக்குக் கொடுத்த பணிகளைச் செய்து முடித்து அந்தப்பணிகளால் பரவசப்பட்டதாக இருக்க வேண்டும். நாம் முயன்றதினால், ஒருவேளை உலகில் சில நல்லவை நடந்திருக்கலாம்.

❋❋❋❋❋❋

---

கிறிஸ்தவ குடும்பம்

---

# உங்கள் குடும்பத்தைப்பற்றி உங்கள் பிள்ளைகள் என்ன நினைவு கூறுவார்கள்?

**-டக்ளஸ்**

எல்லாக் கிறிஸ்தவப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தங்கள் குடும்பத்தைப் பற்றி என்ன நினைவு கூறுவார்கள் என்பதைக் குறித்து அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். தன் தகப்பன் வீட்டைப்பற்றி நினைவு கூர்ந்ததால் தான் கெட்ட குமாரன் மீளத் திரும்பி வந்தான். (லூக்கா 15:16-20). தனக்குக்கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் நழுவ விட்டதினால் ஐசுவரியவான் கடைசியில் நரகத்திற்குப் போய்ச் சேர்ந்தான். (லூக் 16:25). ஞாபகம் என்பது மிகவல்லமையான சக்தி அதில் நல்லவைகளும் கெட்டவைகளும் பதிவாகும். ஆரம்ப காலத்தில் நமது மனதின்

ஆழத்தில் ஏற்பட்ட சிந்தனைகள் நம்பிள்ளைகளின் எதிர்காலத்தை உருவாக்கவல்லமையுள்ளது.

''ஞாபக சக்தி செழிப்பை சேர்க்கிறது; பொல்லாத காலங்களைக் மட்டுப்படுத்துகிறது, இளமையாக இருக்க உதவுகிறது. முதிர்வயதிலும் மகிழ்ச்சி தருகிறது. (லேக்டேன்ஷயர்)

உங்கள் பிள்ளைகள் உங்கள் குடும்பத்தைப்பற்றி என்ன காரியங்களை நினைவுகூறுவார்கள்?

அவர்கள் எங்களுக்கு வேதாகமத்தின் மேல் ஆழமான விசுவாசம் இருந்தது என்று கூறக்கூடுமா?

முதலாவது எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பெற்றோரிட மிருந்து தான் விசுவாசத்தைப் பற்றிப் பிடிக்கிறார்கள். அதன் பின்னர் பெரியவர்களாகும் போது தேவன் தந்திருக்கும் அடிப்படையான காரியங்களில் இருந்து விசுவாசம் உறுதிப்பட்டு பலப்படுகிறது. (ரோமர் 10:17). பெற்றோர் தேவன் மேல் நம்பிக்கை வைத்து அதனை வெளிக்காட்டினால் அவர்களின் பிள்ளைகளும் அதைப்பற்றிக் கொள்வார்கள். இல்லாவிடில் அவர்களின் பிள்ளைகளுக்கும் விசுவாசமிராது. (நீதிமொழிகள் 22:6). தன் தாய் தனக்கு என்னென்ன கற்றுக்கொடுத்தாள் என்று பட்டியலையே சாலமோன் தருகிறார் (நீதி 31:1-9). எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்ட விசுவாசவீரர்களோடு நாம் நடக்கிறோம் என்று நம் பிள்ளைகள் நினைவு கூறுவார்களா?

நாம் தவறாது ஆலய ஆராதனைகளுக்குச் சென்றோம் என்று நம் பிள்ளைகள் சாட்சி சொல்ல முடியுமா?

ஒழுங்காக ஆராதனைக்குச் செல்வதானது நமது பிள்ளைகளின் மனதில் ஆழமான முத்திரையை பதித்து விடும். நியாயமான காரணங்கள் இன்றி பெற்றோர் ஆராதனைக்குச் செல்லவில்லையானால் அது பிள்ளைகளுக்குத் தெரியவரும். ஆலய ஆராதனைக்குச் செல்லாமல் பள்ளிப்பாடங்களைச் செய்யும்படி விட்டு விட்டால், பெற்றோர் எதற்கு முக்கியத்துவம் தருகிறார்கள் என்று பெற்றோர் இருந்தால் பிள்ளைகளும்

அப்படித்தான் இருப்பார்கள். அதில் சற்று பலவீனமானவர் விழுந்தே போய் விடுவார்கள். அவர்களுக்கு முன்பாக வைக்கும் முன் உதாரணம் எந்த சிறந்த ஆசிரியரைவிட சிறப்பாகப் போதித்து விடும். வாலிப பிராயத்தை அடையும் போது பெற்றோர்களாகிய நாம் பிள்ளை வேதாகம வகுப்புகளுக்கும், ஆராதனைகளுக்கும் அனுப்பும் காரியங்களில் எப்படி நடந்து கொண்டோம் என்று நினைவு கூறுவார்கள்?

நாம் ஆவிக்குரியதான பெற்றோர்கள் என்று நினைவு கூறக்கூடுமா?

நாம் செய்யும் பல காரியங்களில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதுதான் ஆவிக்குரிய நிலை. நாம் வாழ்க்கையில் முடிவுகள் எடுக்கும் போதும் செயல்கள் செய்யும் போதும் ஆவிக்குரியதான வகையில் முடிவுகள் எடுத்தோம் என்று கூற முடியுமா? சிறு காரியங்களிலும் கூட உதாரணமாக உணவு உண்பதற்கு முன் நன்றி சொல்லுதல், தினமும் வேத வாசிப்பு ஆவிக்குரியவைகளைத் தெரிந்து கொள்ளுதல். தெரிவு செய்யும் போது உலகப்பிரகாரமான, பொருள் தேடும் போக்கில் நாம் காரியங்களைத் தெரிந்து கொள்கிறோமா. (எபேசி 6:4). நாம் வாழ்க்கையில் எவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தோம் என்று நம் பிள்ளைகள் நினைவு கூறுவார்களா? (மத் 6:33).

முடிவாக : நீதிமொழிகளில் கூறப்பட்டது போல அவர்கள் பிள்ளைகள் எழும் என் பெற்றோர்கள் பாக்கியவான்கள் என்று கூறுவார்களா? (நீதி 31:28). இதைக்குறித்துக் கவலைப்படாமல் காலந்தாழ்த்துவது என்ன மதியீனம்? விரைவில் அவர்கள் நமது வீட்டை விட்டுச் சென்று விடுவார்கள். நமது நினைவுகள் மட்டும் மிஞ்சியிருக்கும். நினைவுகூறும் போது நல்லவைகளைக் கற்றோம் என்று நன்றி கூறுவார்களா? அதனால் வாழ்க்கையில் ஆறுதல் பெற்று சரியான வழியும் தெரிந்து கொள்வார்களா?

இங்கே நான் எழுதியது நெடுங்காலம் நினைவு கூறப்பட்டது. ஆனால் உங்கள் பிள்ளைகளின் நினைவில் அது முகாரியாகுமா? இன்னிசை பரப்புமா?

# தலைமுறை தலைமுறையாக......

**– ஜெரில் [பாலி] கிளைன்**

முதியோர் இதைக் கேளுங்கள். தேசத்தின் சகல குடிகளே செவி கொடுங்கள். உங்கள் நாட்களிலாவது, உங்கள் பிதாவின் நாட்களிலாவது இப்படிப்பட்டது சம்பவித்ததுண்டா? இதின் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவியுங்கள், இதை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் சந்ததிக்கும் தெரிவிக்கக் கடவர்கள். (யோவேல் 1:2,3).

எனது பாட்டி 1900-ம் ஆண்டில் பிறந்தார். என் தாயார் தான் எனக்கு முன் மாதிரி. அவர் டெனசி மாநிலத்தில், சீகுவேட்சியில் பிறந்து வளர்ந்தவர். அவரது தந்தை ஒரு போதகராகவும், விவசாயியாகவும் ஆசிரியராகவும் இருந்தார். பள்ளி நேரத்திற்கு முன்பாகவும், அறுவடை காலத்திற்கு பின்வரும் காலங்களிலும் குடும்பமாக மூடிய ஒரு வண்டியில் நாட்டின் குறுக்கும், நெடுக்குமாகப் பயணம் செய்வார்கள். அவரது தகப்பனார் பல இடங்களில் பிரசங்கம் செய்வார். (அவர்கள் குடும்பத்தில் 14 பிள்ளைகள் - என் தாயார் குடும்பத்தில் 2-வது பிள்ளை). என் தாயார் அந்த நாட்களில் பெற்ற அனுபவங்களை எனக்கும் எனது சிறிய தங்கைக்கும் நடுவே படுத்துக்கொண்டு கதைகதையாக நாங்கள் தூங்கிப்போகும் வரை கூறுவார்.

நான் இதையேன் கூறுகிறேன் தெரியுமா? அவர் கூறிய கதைகள் அனைத்தும் அவர்களுடைய விசுவாசத்தையும், அவரது பெற்றோர்கள் அவர்களது தாத்தா பாட்டி காலத்தில் இருந்த அனுபவங்களைக் கூறுவார்கள். இந்தக்கதைகளின் மூலமாக அவர்கள் எல்லாம் எப்படி கர்த்தரையும், அவரது சத்தியத்தையும்

அறிந்து கொண்டார்கள் என்று தெரிந்து கொள்ளுவேன். அதன் மூலமாக பிரிஸ் பிட்டீரியன் திருச்சபை போதகராக இருந்தவர் மிகவும் சாதாரண விசுவாசியாக இருந்தும், பெரிய கல்வியாளராக இருந்த அவர் தந்தையிடம் அதைப்பற்றிக் கூறியது போன்ற காரியங்களைக் கேட்டு, முன்பு தான் கொண்டிருந்த வேத அறிவு சரியானதல்ல என்று உணர்ந்து அதற்காக வருந்தி மனந்திரும்பி அருகில் ஓடிக்கொண்டிருந்த ஓர் சிற்றோடையில் ஞானஸ்நானம் பெற்றார் என்பதெல்லாம் கூறினார்கள். அந்த ஓடை இன்னும் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

எனது தாயார் 5 அடி உயரத்துக்கும் சற்று குறைவானவர். இருந்தாலும் வைராக்கியமும், ஆற்றலுமுள்ள ஓர் ஆசிரியர். தூரத்திலுள்ள மலைமீது அமைந்துள்ள கல்லூரிப்படிப்பிற்குப் பின் ஒரு வகுப்பு அறையிலுள்ள ஓர் சின்னப பள்ளியில் குழந்தை களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பெரிய குழந்தைகள் சிறிய குழந்தைகளுக்கு எழுத்து முதல் எண்கள் வரை கற்பித்தனர். வாசித்தல், எழுதுதல், கணிதம் இந்த மூன்று காரியங்களை மட்டுமே கற்பித்தனர். பல் துலக்கும் பிரஷ் அந்தக் குழந்தை களுக்குக் கொடுக்கப்பட்டபோது, அவர்களுக்கு ஒரே சந்தோஷம். அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து குடிப்பதற்கு கோப்பைகளைக் கொண்டு வரச் சொல்வார்கள் (அதனால் அவர்களுக்கு சளி பிடிக்கிறது என்பது) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பெற்றோரும் வந்து குழந்தைகளுடன் வார்த்தைகளை எழுத்துக்கூட்டிச் சொல்லும் விளையாட்டு விளையாடுவார்கள். இப்படி பெரியவர்களுக்கும் வாசிக்கக் கற்றுக்கொடுப்பார். அந்த முறை நன்றாகவே நடந்தது. அந்தப பள்ளத்தாக்குப் பகுதிக்கு மின்சார வசதி வரவில்லை யாயினும், செல்வி. எல்வீராவின் (அப்பொழுது என் தாயார் பெயர்) கற்பித்தல் அங்கே வெளிச்சம் கொடுத்தது.

அதன்பின் அவள் 6 அடி உயரமான அழகான ஓர் வாலி பனைச் சந்தித்தாள். (எனது தந்தை) தனது குதிரையோட்டும்

திறமையினால் அவளை ஈர்த்துக் கொண்டார். எளிய முறையில் திருமணம் நடந்தது. சின்ன அழகா ஓர் வாகனத்தில் தான் மணமக்களின் முதற்பிரயாணம் நடைபெற்றது. அவரது தந்தையும் மார்க்கப் பிரிவுகளில் இருந்து பின்னர் அறிந்து வெளிவந்து, அவர் விவசாயம் செய்து கொண்டு பிரசங்கம் செய்து வந்தார். அப்படி ஒரு சமயம் புகை பிடித்தல் மது பானப் பழக்கத்திற்கு எதிராகப் பிரசங்கம் செய்து பிறகு தன் பண்ணையில் இருந்தபொழுது துப்பாக்கியால் சுடப்பட்டர். எனவே எனது தந்தை தன் படிப்பை 3-வதுடன் முடித்துவிட்டு குடும்பத்துக்கு உதவியாக வேலை செய்ய வேண்டி வந்தது. (திருமணமானபிறகு தாயர் அப்பாவுக்கு படிக்கவும், எழுதவும் சிறுகணக்குகள் செய்து கொள்ளவும் சொல்லிக் கொடுத்தாள். அவர்கள் பயன்படுத்திய புத்தகங்களை நான் ஒரு பொக்கிஷம் போலக் காத்து வருகிறேன்.

ஒவ்வொரு கோடைக்காலத்திலும், இந்த அருமையான தேவனுடைய, உன்னத பிள்ளைகளோடு நான் செலவிடத் தவறுவதில்லை. அவர்கள் அங்கே என்னையும் அழைத்துக் கொண்டு போய் ஏழைகளுக்கு உணவு கொடுப்பது, நோயாளிகளை விசாரிப்பது, வருத்தத்தில் இருப்பவர்களுக்கு ஆண்டவர் எவ் வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார் என்று என்னிடம் கூறு வார்கள். குழந்தைகளின் மரணம், வேலை இழப்பு, பெற்றோர் களின் சுகவீனம் வீடுகளில் குழந்தைப்பேறு போன்ற பலதரப்பட்ட அனுபவங்களினூடே அவர்களோடு இருந்து இத்தனைக்கும் மத்தியில் தேவன் நல்லவர் என்று போதித்திருக்கிறார்கள். பாடும் ஒவ்வொரு பாடலும், உணர்ச்சி பொங்கும் ஒவ்வொரு சந்திப்பும் ஒரு ஆசீர்வாதம் கொண்டுவரும், கிறிஸ்தவ முகாம்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தனர். முகாமுக்குச் செல்லும் போது தங்கள் காரில் படுக்கைகள் எடுத்துச்செல்வார்கள். எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே கும்மாளம். கடைசியில் மலைப்பகுதியில் அமைந்துள்ள ஒரு அருவியருகே அமைந்துள்ள முகாமிடத்திற்குப்

போய்ச் சேருவோம். அங்கு தான் 40 ஆண்டுகளுக்கு முன் நான் என் வாழ்க்கையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அருகில் பனி போன்று நீர் ஓடிய ஓடையில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டேன். அங்கே வேத வசனங்கள் எனக்கு ஊக்கமளித்தது.

''என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வ காலத்து மறை பொருள்களை வெளிப்படுத்துவேன். அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம், எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள். பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல் கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும் அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம். அவர் யாக்கோப்பிலே சாட்சியை ஏற்படுத்தி இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்கு கட்டளையிட்டார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின் சந்ததியார் அதை அறிந்து கொண்டு அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும் படிக்கும் இருதயத்தையும் செம்மைப்படுத்தாமலும் தேவனை உறுதியாய்ப் பற்றிக் கெள்ளாமலும் இருந்து முரட்டாட்ட மும், கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும் இவைகளைக் கட்டளையிட்டார்'' (சங்கீதம் 78:2-8).

ஒரு பிள்ளை, ஒரு வேளை அதன் பெற்றோர்களின் திறமைகளைப் பெறாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் எவற்றைப் போற்றி மதித்தார்களோ அதை அறிவார்கள்.

- ஜெரில்

# மௌன ஓலங்கள்

**- பெய்ட்டி பர்ட்டன் சோட்**

என்னைச் சூழ்ந்து சுழலும் நான் வாழும் உலகம்
எல்லாமே நன்றாகவே உள்ளதாகத் தோன்றுகிறது.
நண்பர்களும் அந்நியரும் வருகிறார்கள் போகிறார்கள்
முகங்கள் மலர்கின்றன, வாழ்த்துக்கள் கூறுகின்றன.

வாங்கள், நலமா, போய் வருகிறோம் இவைகள்
பல நாள்தோறும்
வாழ்க்கை என்னும் பணியிப்படி சொல்லுகிறது.
ஆனால் கொடிய பாவமோ
மோசம் போக்கும் கொடுமைகளை விளைத்து

வாழ்வை மேல் கீழாகப் புரட்டி விடுகிறதே.
குருதிக்கறை போன்று வடிந்து விடுகிறது.
நிலத்தில் காணும் ஒவ்வொரு பள்ளம்,
வெடிப்பு இவைகளில் தான்
எல்லா வாழ்க்கையிலும் தன் சிவப்புக் கறைகளின்
முத்திரையைப் பதித்து விடுகிறது.
பேரழிவு பிறப்பது எதனால் பாவத்தினாலன்றோ,
வாழ்க்கையில் இது நடக்கிறது சாதாரணமாக,
கொடூரப்புயலும், கொட்டும் மழையும்
எழுந்து தாக்கி எங்கிலும் சேதந்தான்

எங்கும் மரணம் ஆளுகை செய்வதைக் காணீர்.

மரங்கள் மலர்கள் மனிதனும் மாக்களும் கூட

ஏன் இந்த மாநிலங்கூட பழையதாகிப்பட்டே விடுகிறது.

மரணத்தின் ஓலம் நம் செவிகளுக்குச் சேர
இசையாகவரவில்லையே ஏன்?

எங்கும் எதிலும் அமைதி தான்!

இடையே எழுந்திடும் மேலோட்டமான பேச்சும்
நகைப்பும்

வேதனைகளின் குரல் காதில் ஒலிக்கவில்லையே

சிற்சில நேரம் உலகச் சிந்தனைகளை சேர்த்துக்கொண்டு

அயலார் வேதனை என்கைம் எட்டும்

சாவுகேட்ட காவுக்கு பலியானோர் அன்று!

மாலை ஒளிதான் மங்கிடும் வேளையில்

- திங்கள் தோறும் -

வேதனையால முனகி விடுதலை கேட்கும் ஓலம்

யுத்தம் என் சிந்தத்தில் வரும்

உயிை நீத்த இளம் பயிர்போல் மக்கள்

கொல்லப்பட்ட குழந்தைகள் மற்றும் கொடூரம்
மாய்த்தோர்

மிருகமாக மாற்றப்பட்டேன்.

இளமை துவங்கி முதுமைவரை பரிதாப வாழ்க்கை

வேதனை தான் அவர்களின் வாழ்வும் வளமும்

அந்தோ ஆன்மாவைக்கூட பருகியது துன்பம்.

யுத்த களத்தில் தவறிப்போனோர் யாரென்றறிய

காத்திடும் பெற்றவர் மரித்தவரின் மனைவிமார்

நீண்ட காத்திருத்தல், என்ன கொடுமை!

அது என்ன வாழ்வா? சாவா?

என்

சிந்தனை சுழல்கிறது! எண்ணங்களின்
அலைமோதலால்

எல்லா இதயங்களிலும், உயிர்களிலும்

சூழவிருந்து அத்துணை ஆத்மாக்களிலும்கூட

புண்பட்டோர் பொறுமையிழந்தோர், போயிற்றோர் எல்லாம் என்றோர்

முனகினர் சிலர், மற்றும் ஓலமிட்டேனர்

வழியில்லையோ என விம்மினோர் பலர்.

கேட்பார் யாரே! எவருமிலரே!!

இந்த ஓலமும், குரலும், விம்மலும் ஓயா ஓசையும்

இறைவனின் இயத்தைக் கிழித்திடாதோ!

அவர் கேட்கிறார் ஆம் கவனிக்கிறார்.

காத்திருக்கிறார் காலம் தரும் அந்த நாள் வராதோ என்று.

அன்று தான் விடிவு. பாவம், பாவம்! அதற்கு கடைசிப் பக்கம் அன்று!!.

# ஆறுதலும் உறுதிப்பாடும்

–ராணி . இ. கார்ட்டர்

மிட்ச் என்ற சூறாவளிக் காற்று, மற்ற அழிவுகளைப் போலவே அநேகருடைய வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றியிருக்கிறது. ஹோண்டுராஸ் என்ற பகுதியை மிட்ச் சூறாவளி தாக்கியபோது அங்கு ஊழியம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஊழியத்தின் நோக்கம், கிறிஸ்துவின்சபை இளைஞர்களை 'ஜோனடா' என்ற ஊழியத்தின் பெயரால் ஊழியப் பகுதிக்குக் கூட்டிச் சென்று அங்கு மற்றவர்களுக்கு உதவிடும் பல்வேறு முறைகளைக் கற்றுக் கொடுத்தல். சமுதாயம், பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு பணி செய்தல் அதன் நோக்கம்.

மிட்ச் என்ற சூறாவளி நாங்கள் தங்கியிருந்த பகுதியையே தாக்கிற்று. எங்களுக்கு பெரிய சேதங்கள் ஏற்படாவிடினும் சேவைச் சிந்தனை முடுக்கிவிடப்பட்டது. உடனடியாக நிவாரணப் பணிகளைத் துவக்கினோம். முதலாவது எங்கள் முகாமிலேயே அகதிகளைத் தங்க வைத்தோம். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஊழியர்கள் நிவாரண நன்கொடைகளை திரட்ட ஆரம்பித்து விட்டார்கள். உதவிப் பொருள்களை கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தனர். அடுத்து சில வாரங்களில் எங்கள் முகாம் நிவாரணப் பொருட்களைச் சேகரித்து 20 பெரிய வண்டிகளில் அடைத்து கப்பல்களில் அனுப்பி வைத்தனர். அடுத்த வந்த ஆண்டில் 200 புதிய வீடுகள் கட்டவும் 800 சேதமடைந்த வீடுகளைப் பழுது பார்க்கவும் செய்தனர். பள்ளிகளைப் பழுது பார்த்து சுமார் 1000 மாணவர்கள் தங்கள் வகுப்புகளுக்குத் திரும்ப வசதி ஏற்படுத்தினர். இன்னும் சில இடங்களில் வகுப்பறைகளை யாரும் பழுது பார்க்கக் கூட இல்லை. ''மிட்ச்'' சூறாவளி தாக்கிய சில மணி நேரங்களில், எங்கள் குழு நிவாரணப் பணியாற்றுவதற்கான அடிப்படைகளை கற்றுக்கொண்டனர்.

முதலில் கற்றுக்கொண்ட பாடம், பொருள், நன்கொடைகளை விட பண நன்கொடைகள் மிகவும் உதவிகரமாயிருக்கும் என்ற விவரம். நிவாரணப் பொருட்களைப் பெறும் போது, அவைகளை வகைப்படுத்தி, வடிவப்பகுதி கட்டுகளாகக் கட்டி, மீண்டும் கப்பல்களில் அனுப்பி வைப்பது என்பது பெரிய வேலையாகப் போய்விடுகிறது. இந்த வேலைகளை ஒருங்கிணைத்தல் அதற்கு உழைத்தல், திட்டமிடுதல் இதற்குத் தேவை. ஆனால் பணமான உதவி கிடைக்கும் போது பாதிக்கப்பட்ட மக்கள் தேவை அறிந்து பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளைக் கவனிக்க முடியும். காலம் கழித்துச் செய்ய வேண்டியவைகளை தாமதப்படுத்திக் கொள்ளலாம்.

இரண்டாவது கற்றுக்கொண்ட காரியம் பொருட்களை முறையாக விநியோகம் செய்வதும் அப்படிச் செய்யும் போது உதவி பெறுவோர் பெற்றுக் கொள்ளும் பாங்கும் மறுக்க முடியா எண்ணங்களை ஏற்படுத்துகிறது. இந்தச் சூறாவளி தாக்குவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் குழுவின் சக நிறுவனம் திருச்சபை ஊழியர்களை இத்தகைய நிவாரணப் பணிக்குப் பயிற்சியின் மூலமாகத்தான் எங்கள் நிறுவனம், நிவாரணப் பொருட்களை வாங்கவும் கப்பல்களில் அனுப்பவும் உள்ளூர்த் திருச்சபைகள் மூலமாக விநியோகம் செய்வது எளிதாகவும், இயல்பாகவும் இருந்தது. இதன் மூலம் சமுதாயம் திருச்சபை களையும், அதன் பணிகளையும். நன்கறிய வாய்ப்பும் கிட்டியது.

ஓராண்டுக்குப்பின் நடந்த காரியங்களை எண்ணிப் பார்க்கும்போது, நடைபெற்ற அனைத்து பணிகளும் நடைபெறவும் உதவிகள் கெடுக்கப்படவுமான இந்தப் பணிகளை எல்லாம் தேவன் அந்த 'மிட்ச்' என்ற பேரழவுச் சூறாவளி வழியாக நடப்பித்தர். பல்வகையான அனுவங்களை நடைபெறச்செய்து உயர் பதவிகளிலுள்ள பெரிய மனிதர்களையும் பணியில் ஈடுபடுத்தி

காரியங்களை நடப்பித்தார் கர்த்தர். நாம் செய்து வெகு சொற்பம் என்று அடக்கத்துடன் கூறலாம்.

இந்த நிவாரணப் பணிகள் எல்லாம் ஏதோ நமது சுய பலத்தினால் செய்யப்படவில்லை பிதாவின் இரக்கத்தினாலும், ஆசிர்வாதத்தினாலுமே செய்யப்பட்டன என்று 'மிட்ச்' நிவாரணக்குழுவினர் கற்றுக்கொண்டனர். கர்த்தர் அதை நடப்பித்தார். இந்த 'மிட்ச்' என்ற சூறாவளியின் காரணமாக நடைபெற்ற நிவாரணப் பணிகள் மூலம், மத்திய அமெரிக்காவில் உள்ள ஹோண்டூராஸ் பகுதியில் அமைந்திருந்த திருச்சபைகளும் வலுவடைந்தன. நாங்கள் பணியாற்றின அந்தச் சிறிய கிழக்கு ே ஹான்டுராஸ் பகுதியில் மட்டும் 19 புதிய திருச்சபைகள் துவக்கப்பட்டன. அந்தப் பகுதியில் மருத்துவப் பணி முகாம் பயிற்சி பெற்ற மருத்துவரின் துணையுடன் நடைபெற்று வருகிறது. ஹோண்டுராஸ் பள்ளிகளின் சிறுவர், சிறுமியர் மத்தியில் பணிபுரிய ஏராளமான வாய்ப்புக்கள் கிடைத்தன. உடனடியான இந்தக் காரியங்களை் தவிர எதிர்காலத்தில் இதனால் விளையப்போகும் வாய்ப்புக்களையும் காணவிருக்கிறோம். நிச்சயமாகவே சூறாவளி மனித வாழ்க்கைகளை மாற்றிவிட்டது. இங்கு மேலும் எத்தனை திருச்சபைகள் நாட்டப்படும் எத்தனை ஆத்துமாக்கள், இரட்சிப்புக்குள் வரும் , சூறாவளி நன்மைகளைக் கொணர்ந்தது.

☆☆☆☆☆☆

***"தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."***

(2 தீமோ 1:7)

# ஒவ்வொருவர் வாழ்விலும் வானம் பொழிய வேண்டும்

**– டேல் கிரிசம்**

ஒழுங்கான உலகில் வாழ்க்கை எளிதாகச் செல்ல வேண்டும். எல்லாம் இன்பமயமாக இருக்கும், துன்பத்தை துடைக்கவே நேரிடா. இவ்வுலக வாழ்வு வழுவற்றதாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்படவில்லை. 'இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்வு' என்று ஓர் பழமொழியுண்டு. வாழ்க்கையில் பேரிடிகள் உண்டாகும். அவற்றை நாம் சமாளிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பல நன்மைகளைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பொருளாதார நிலையில் இல்லாவிட்டாலும், ஆவிக்குரிய நன்மைகள் உண்டு. கர்த்தரில் நமக்கு சமாதானம் உண்டு. (யோவான் 16:33). நித்திய வாழ்வு பறறிய நம்பிக்கை உண்டு. இது மனிதர்களுக்கு கிடைக்கப்பெறும் அற்புதமான ஆசீர்வாதம். (வெளிப்பாடு 1:10). பரலோகத்துக்கு அழைத்துச் செல்லும் வழித்தடமாகிய தேவ வசனம் நமக்குண்டு. அது நம்மை நீதியின் பாதைகளில் நடத்துகிறது.

உலகில் மிக்க வேதனைகள் உண்டு. நமக்கு உடல் ரீதியான நோய்களும் நோவுகளும் மட்டுமல்ல. வேலைப்பளு போன்ற பிரச்சனைகள் உண்டு. இவைகளைச் சரிவரத் தீர்க்காவிட்டால் மன இறுக்கம் ஏற்படும். கிறிஸ்தவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

வேதனைப்பட்டவர்களுக்கு விமோசனம் அளிக்க விடுவிக்க எத்தனையோ மார்க்கங்கள் உண்டு. பாதிக்கப்பட்டவர் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவரின்

மருந்துச் சீட்டுக்கள் உடல் நோவையும், மன நோவையும் கூட நிவர்த்தி செய்யும். கிறிஸ்தவ ஆலோசனை மையங்களுக்குச் செல்ல வேண்டிய அளவுக்குப் பிரச்சனைகள் இருக்கலாம். உதவிகரமாக இருக்கும். ஆலோசனைகள் மூலம் எண்ணற்ற நபர்கள் குடும்பங்கள் உதவி பெற்றுள்ளன. பிரச்சனைகள் எதுவாயினும் உண்மையில் நன்மையான வாழ்வு பெறுவது கிறிஸ்து இயேசுவில் தான் என்பதை நாம் யாரும் மறக்கக் கூடாது. வானத்தின் தூறல்கள் ஒவ்வொரு வாழ்விலும் விழ வேண்டுவது அவசியமெனினும், எதிர் வரும் பிரச்சனைகளை எப்படிச் சந்திக்கிறோம் என்பதில் தான் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி பெற்றவரா இல்லையா என்று காட்டும். நாம் எல்லோரும் கீழ்ப்படிதலுடன் வேதாகமத்தின் மாணாக்கர்களாவோம். அப்பொழுது நம்மை எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சனைகளையும் சந்திக்க ஆயத்தப்பட்டு விடுகிறோம்.

◇◇◇◇◇◇

பல்சுவை

# நான் கற்றுக் கொண்டது என்ன?

**–தெல்மா மில்ஸ்**

எனது நண்பர் ஒருவர் ஒரு கவிதையை அனுப்பியிருந்தார். ''நான் கற்றுக்கொண்டேன்.............'' என்பது அதன் தலைப்பு. அது உணர்வூட்டக்கூடியதும் சிந்தனையைத் தூண்டும் வண்ணமும் இருந்தது. தேவன் எனக்குக் கற்றுக்கொடுத்த வகையில் நான் என் வாழ்வில் என்ன கற்றுக்கொண்டேன் என்று சிந்திக்க ஆரம்பித்தேன். பரிசுத்த பவுல் தன் வாழ்க்கை அனுபவங்களை எழுதும்போது ''எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூர்ணமடையவும் குறைவுபடவும் போதிக்கபட்டேன்'' (பிலிப்பியர் 4:12) என்று எழுதுகிறார். 70

ஆண்டுகளுக்கு மேலாக அதையே பற்றிக் கொண்டேன். அதுவே சாலச்சிறந்தது என்றும் வாழ்க்கையில் அமைதியை விளைவிப்பதும் என்றும் கண்டு கொண்டேன். மற்றவர் எனக்கு என்ன செய்தார் என்பதல்ல என் மனோபாவமும் விசுவாசமும் தான் எனக்கு வாழ்வில் திருப்தியைத்தரக் கூடியது என்று கண்டு கொண்டேன். எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பாளி என்பதையும் கண்டு கொண்டேன்.

எனக்குத் திருமணமாகி சில மாதங்களேயாயின. ஒருநாள் நான் நீளமான ஒரு கண்ணாடிக் குச்சியை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அது என் கையைக் கிழித்த ஒரு சுத்தரத்தக் குழாயை அறுத்துவிட்டது. இரத்தம் பீறிட்டு கொப்பளித்தது. பயம் என்னைப் பிடித்துக்கொண்டது. செவிலியர் ஒருவர் சிகிச்சை கொடுத்து காயத்திற்குத் தையல் போட்டார். நான் அழுது கொண்டும் முனகிக் கொண்டும் இருந்தபோது அந்த செவிலி கூறியதை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை. மிகவும் அன்பு வழியக்கூறினார். அமைதியாயிரு, ஆழமாக மூச்சு வாங்கு என்றார். நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் என்று தேவன் கூறுகிறார். நான் கஷ்டத்திலும் வேதனையிலும் இருக்கும்போது, எண்ணங்களைச் சிதறடிக்காமல் ஒருமுகப்படுத்தி தேவ வல்லமையையும் அன்பையும் மனதில் இருத்துவேன். அப்போது ஒரு அமைதியும் சக்தியும் எனக்குக் கிடைக்கும். இதை வேறு எங்கும் எப்படியும் பெற முடியாது.

இன்பமும் துன்பமும் கலந்த பல ஆண்டுகள் கழிந்த பின்னர் நான் மிக்க சுகவீனப்பட்டேன். 15 மருத்துவர்கள் அடங்கிய குழு எனது உள் உறுப்பு சோதனையைக் கண்டு திகைத்தனர். அதன்பின் மேலும் சில சோதனைகள், கலந்தாலோசனைகள் செய்த பின்னர் எனக்கு கொடிய நோய் (Midline Lethal Gramuloma) தாக்கியிருக்கிறது என்றனர். "Lethal" என்ற வார்த்தை இந்த நோய் தாக்கியிருப்பவரை இரண்டொரு ஆண்டுகளுக்குள் கொன்று விடும் என்று பொருள்படும். அந்த நோய் மூச்சுக் குழாயில் தொடங்கி,

நுரையீரல் வரை பரவி, சிறு நீரகத்தையும் பாதிக்கும் என்றனர். இந்த நோய் தாக்கியவர்கள் ஏறக்குறைய 2 ஆண்டுகள் மட்டுமே பிழைத்திருக்கிறார்கள் என்று தங்கள் அனுபவத்திலிருந்து கூறினார்கள். சில நாட்களில் எங்கள் பிள்ளைகள் கோடை விடு முறைக்கு வருகிறார்கள். இதை அவர்களிடமும் கூறிவிட்டால் நல்லது திடீரென்று கூறாமல், அதை மெதுவாக ஏற்றுக் கொள்ளட்டும் என்றனர். மருத்துவர்கள் இருப்பதை அப்படியே கூறிவிட்டனர் என்று நாங்கள் எடுத்துக்கொண்டோம்.

மரணம் என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் நம்மை ஒரு நோய் தாக்கியிருக்கிறது விரைவில் இறந்து போய் விடுவோம் என்று மருத்துவர்கள் கூறும் போது நாம் எப்படி நடந்து கொள் வோம் என்பது வேறு. எனது உணர்வுகள் என்ன என்று என்னால் விவரித்துச் சொல்ல முடியாது. முதலில் ஓர் அதிர்ச்சி அப்படி ஒன்றும் இராது என்ற எண்ணம். குடும்பத்தை விட்டுப் பிரியப் போகிறோம் என்ற ஆழ்ந்த வருத்தம். ஆனால் தேவன் எத்த னையோ ஆயுசுகாலத்தைக் கொடுத்திருக்கிறார். பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்கள். மரணம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி என்று மனதில் எண்ணினேன். மேலும் அதிகமாக ஜெபத்தில் தரித்திருந்தேன். என் கணவரின் அன்பான வார்த்தைகளும், ஆதர வும் கிடைத்தது. என் உள்ளத்தில் ஓர் அமைதி. வருவதை தைரிய மாக ஏற்றுக்கொள்வோம் என்ற மனநிலை உண்டாயிற்று. பர லோகம் தேவனுடன் பெறப்போகும் நித்தியம் ஆகியவற்றைப் பற்றிய பாடல்கள் எனக்கு பரவச பொக்கிஷங்களாயிற்று. தேவன் தம் பிள்ளைகளுக்கு வழங்கியுள்ள வாக்குத்தத்தங்களை எண்ணத் தில் பதித்துக்கொண்டேன். (யோவான் 14:1-3).

இந்த வேதனையின் ஊடே தான் வாழ்ந்து வந்தேன் என்று சொல்ல வேண்டும். மருத்துவர்கள் நோய்பற்றிக் கண்டறிந்தது தவறு என்று வெகுநாட்களுக்குபின் பிறிதொரு சோதனையில் கண்டறியப் பட்டது. அந்த நோய், கொல்லும் கொடிதான நோயாக இருந்த போதிலும், அதற்குச் சிகிச்சைக்கு வாய்ப்பிருந்தது.

என்னைப் பொருத்தவரை அது நீங்கிப்போயிற்று. போராட்டங்கள், உணர்ச்சிகளின் உளைச்சல்கள் மத்தியில் நான் அனுபவித்த அமைதியின் காலம் எப்பொழுது கிடைத்தது என்றால் நான் கர்த்தரிடம் ''கர்த்தாவே, என் சித்தமல்ல உம் சித்தப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொடுத்து ஜெபித்தபோது தான் கிடைத்தது''.

எனது கண் அறுவை சிகிச்சை சமீபத்தில் நடைபெற்ற போதும் மிகக் கஷ்டம்; பல வாரங்கள் தாங்க முடியாதவலி இருந்தது. தொடர்ந்து மேலும் 3 அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டி இருந்தது. பாதிக்கப்படட விழியில் ஒளியிழந்து, மிக்க வேதனைப் பட்டேன். நோயினால் மரணம் ஏற்பட்டிருந்தாலும் தேவலாம். ஆனால் கண் பார்வை இழந்த பின் வாழ்க்கையில் காரியங்களைச் செய்யப் பழகிக்கொள்வது என்பது மிகக் கடினமாக இருந்தது. இப்படியெல்லாம் நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடிய வில்லை. நிறைய புத்தகங்கள் வாசிப்பேன் சிறு கைவேலைகள் செய்வேன் தையல், வண்ணந்தீட்டுதல் இப்படிப் பல காரியங்கள். என் வாழ்க்கையின் பழக்க வழக்கங்களே மாறிப்போயிற்று.

இந்த அனுபவங்களின் மூலமாக சகிப்புத்தன்மையையும் நிகழ்ந்து விட்ட காலங்களை ஏற்றுக்கொள்ளவும் பழகிக் கொண்டேன். தேவனிடம் இந்த உலகத்தின் ஆளுகையெல்லாம் இருக்கிறது. எனக்கு நித்தியத்தில் வேறு நல்ல மேன்மையான காரியங்களை வைத்திருப்பார் என்றறிவேன். வேறு நன்மைகள் எத்தனையோ எனக்குச் செய்திருக்கிறாரே! எனவே ''எல்லா நிலைகளிலும் மனம் ரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன்'' என்று என்னால் கூற முடியாது.

போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு இருந்தால் அதுவே போதும் என்றிருக்கக் கடவோம். (1 தீமோத்தேயு 6:6-8). ☆

# உமது வசனம் ஒரு தீபம்

– விக்டர் ஸ்காட்

''உமது வசனம் என் கால்களுக்கு தீபமாயிருக்கிறது''
என்முன் பாதை இருண்டு காணப்பட்டாலும்
வசனத்தை எனக்கு தீபமாகக் கொண்டு விட்டால்
இலக்கை ஓர் நாள் அடைவேன் நிச்சயம்!
உம் சித்தத்தையும் செய்து வாழ்க்கையில்
எட்ட வேண்டியது அந்த இலக்குத்தானே!
புயல் வீசும் அந்தகார இரவாயினும்
பாதை மலை மீது சென்றாலும்
''உமது வசனம் என்கால்களுக்கு தீபமாகும்''.
கிறிஸ்து என் முன் சென்ற பாதை அது தான்
நான் சுமக்கும் பாரங்கள்
அவர் சுமந்த பாரத்தை விட இலகுவானதுதான்!
தன் கரம் நீட்டி என்னைத்தம்
அருகில் வைத்துக்கொள்ளுகிறார்.
இருளாய்த் தோன்றிய பாதை எல்லாம்
இப்போது மருளாய்த் தோன்றவில்லையே
இரவில் தோன்றும் கொள்ளிவாய்த் தீபம்
அழைக்கிறது. மரணத்தின் பாதைக்கு
''செம்மையாகத் தோன்றுகிற வழியுண்டு
அதன் முடிவோ மரணம்''. இறைவா
நீ தந்த விளக்கை ஏந்திச் சென்றிட அருள் தாரும்.
தொடர்ந்து பாதையில் முன்னேறட்டும்.
இதில் முன் சென்ற என் நேசரின் நாமத்தில்
நான் நடப்பேன் அவர் துணையால்.

# சிரிப்பு மொழிகள்

ஒருதாய்க் கங்காரு மற்றொரு தாய்க்கங்காருவைப் பார்த்துச் சொன்னது, ''மழை பெய்யும் அந்த நாட்களைக் குறித்து கவலைப்படுகிறேன். ஏன் என்றால் என் குட்டிகள் அன்று வெளியே வந்து விளையாட முடியாதே.

***சில அலுவலக வெளிப்பாடுகள் :***

☆ தவறுவது இயற்கை.

☆ குழப்பம் பண்ணுவதற்குத் தேவை ஒரு கணினி.

☆ என்னை வேகமாக விரட்டாதே.
என் தவறுகளும் வெகுவிரைவாகவே உண்டாகும்.

☆ இங்கு பணியாற்ற எவ்வளவு விரும்புகிறேன் என்று கூறு.
அது மறந்து கொண்டே இருக்கிறது.

☆ தோல்வி கண்ட கோல்ப் விளையாட்டு நாள்
அலுவலகத்தில் சிறப்பாக வேலை செய்த நாளை விடச் சிறந்தது.

☆ ஒரு வங்கி உரிமையாளர் இறந்தபின், அவரது குடும்பம், சட்ட ஆலோசகரைச் சந்தித்து, உயிலை வாசித்து விவரமறியச் சென்றது. வங்கி உரிமையாளர் 500 டாலர் மனைவிக்கும் தன் சகோதரனுக்கும், சகோதரிக்கும் தலா 500 டாலர் என்று உயில் இருந்தது. எனது சகோதரனின் மகன் ரால்ப் தன்னையும் உயில் எழுதும் போது குறிப்பிட வேண்டும் என்று கேட்டிருந்தார். அந்த உயிலில் ஹலோ ராஜா என்று மட்டும் அவன் கேட்டபடியே குறிக்கப்பட்டிருந்தது.

☆ ஒரு இன்சூரன்ஸ் கம்பெனி ஓட்டுனர்களுக்கான விபத்து பற்றிய குறிப்பு எழுத படிவம் கொடுக்கப்பட்டது அதன் விவரம்:

☆ 40 ஆண்டுகளாக வாகனம் ஓட்டி வருகின்றேன். அன்றைக்கு திடீரென்று தூங்கிவிட்டேன். விபத்து நடந்து விட்டது.

☆ நான் சாலையின் ஓரமாகத் தான் ஓட்டினேன். அங்கு எனது மாமியாரைக் கண்டேன். வாகனத்தை நேராகவே விட்டு விட்டேன். நடைபாதையைத் தாண்டிச் சென்றது. விபத்து நடந்து விட்டது.

☆ நான் 15 நிமிடங்கள் மட்டும் பேசுவேன் எனது தொண்டை சரியில்லை. நீட்டிப் பேசினால் உங்களில் யாராவது எனது கழுத்தையே நெருக்கி விடுவீர்கள்.

☆ ஒரு தாய் தன் மகன் கால்பந்து விளையாட்டுக்குழுவில் இடம் பெற்றது குறித்து பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். அவனது குழுவில் அவன் ஒரு டிராவ் பேக் நிலையில் விளையாடுவான் என்றார்.

☆ ஒரு பெரிய கரடி ஒரு பிரசங்கியாரை காட்டுப்பகுதியில் சந்திக்க நேரிட்டது பற்றி உங்களுக்குத் தெரியாது. அவர் ஓர் பிரசங்கம் செய்தார். அதைக்கேட்டு கரடி ஒரு தூக்கம் போட்டு விட்டது.

☆ இரு பெண்கள் ஒரு போட்டி பற்றிப் பேசிக் கொண்டிருந் தார்கள். ஒருவர் கடைசியாச் சொன்னார். எனக்கு மிக நெருக்கமாகத் தெரிகிறது. அது ஒரு அது ஒரு..

☆ ஒரு சிறுவன், தந்தையுடன் அலுவலகத்திற்குச் சென்றான். அங்கே ''தேடப்படுவோர்' பற்றி ஒட்டப்பட்டிருந்த ஒரு போஸ்டரைக் கண்டு ஆச்சர்யம் கொண்டான். இவர் பல குற்றங்களைச் செய்தவர்கள். இவர்களை காவல்துறையினர் தேடுகிறார்கள். இவர்களின் படங்களைப் போட்டிருக்

கிறார்களே, படம் எடுக்கும்போதே பிடித்திருக்கலாமே என்றான்.

☆ ''உங்கள் வீட்டில் யார் பெரியவர் என்று ஒருவரிடம் கேட்டார். அதற்கு அவர் ''எனது மனைவி குழந்தைகள் மேல் அதிகாரம் செய்கிறார். குழந்தைகள் நாயின் மேல் அதிகாரம் செய்கிறார்கள். நான் தோட்டத்திலுள்ள ஜெரேனியம் பூக்களிடம் அதிகாரம் காட்டுகிறேன்.

☆ எப்பெழுது விடுமுறை காலங்கள் வரும் என்று காத்திருப் பேன், எனது சாமான் கட்டுகள் எங்கெல்லாம் செல்லும் என்று நினைத்துக்கொள்வேன்.

☆ ஒரு தம்பதிகள் பல மைல்கள் ஒரு கிராமத்துச் சாலையில் காரில் சென்று கொண்டிருந்தனர். இருவரும் பேசிக்கொள்ள வில்லை. சற்று முன் வேறொரு காரியம் பற்றி வாதிட்டனர் யாரும் விட்டுக் கொடுக்கவில்லை. ஒரு பண்ணையருகில் சென்றபோது, குதிரைகள், பன்றிகள் வளர்க்குமிடம் பார்த்து, உடனே மனைவி கணவனை ''இவைகள் உங்கள் உறவினர்களா?'' என்று கேட்டாள்.

☆ ஆமாம், ஆமாம், இவைகள் எல்லாம் என் மாமியார், மாமனார்... போன்றவர்கள்.

☆ ஒருவன் அரசியலில் பதவி பெறுவதற்காக வாஷிங்டன் போனான். நீ என்ன காரியங்கள் செய்வாய்? என்று கேட்கப் பட்டது. எதுவும் செய்வதில்லை என்று பதில் கொடுத்தான். மிக்க சரி. நல்ல பதில். நீ தான் எங்களுக்கு வேண்டும் உனக்கு பயிற்சி ஏதும் தேவையில்லையே என்றார்கள்.

☆ அவர் ஒரு பெரிய பேச்சாளர், சாப்பிடுவதை விட்டு விட்டுக்கூட அவர் பேச்சைக் கேட்கலாம். நானும் அவர் பக்கத்தில் உட்கார்ந்தேன். சாப்பிடு என்று சொல்லக் கேட்டேன். ☆☆☆☆☆☆

# "படிப்படியாகப் பாவத்திற்குள்"

**– பெய்ட்டி டக்கர்.**

ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது ராஜா படுக்கையில் இருந்து எழுந்தான். அரண்மனை உப்பரிகையில் மேல் உலாவிக் கொண்டிருக்கும்போது ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரியைக் கண்டான். அந்த ஸ்திரீ வெகு சௌந்திரவதியாயிருந்தாள். (2 சாமு 11:2).

வேத மாணாக்கர்கள் இந்தக் கதையை அறிவார்கள். உப்பரிகையின் மீது உலாவிக் கொண்டிருக்கும் போது ஒரு அழகான பெண் குளித்துக்கொண்டிருக்கையில் பார்த்தான்.

இச்சைக்கு இடங்கொடுத்து அந்தப் பெண் பத்சோபாளுடன் விபச்சாரம் செய்தான். அவர்கள் தங்கள் பாவங்களில் பிடிபட்டார்கள். அப்பெண் கர்ப்பந்தரித்தாள். இந்தப் பேரரசன் பல பெரிய பிரச்சனைகளைச் சந்திக்க நேரிட்டது.

தனது பொல்லாத செயலினால் செய்வதறியாது தடுமாறினான். தாவீது ராஜா கொஞ்சம் கொஞ்சமாகப் பாவத்திற்குள் சென்று கொண்டிருந்தான். தங்கள் தவறை மூடிமறைக்க ஓர் திட்டந் தீட்டினான். அவன் சதியாலோசனை பற்றி 11ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். உரியா பத்சேபாளி கணவன் முறியடித்தான் என்று வாசிக்கிறோம்.

தாவீது ராஜாவாக இருந்தபடியால் அவன் எண்ணியதைத் தவறாமல் செய்ய முடிந்தது. போர்க் காலத்தில் யுத்தம் மும்முரமாக இருக்கும்போது திடீரென்று மற்றவர் விலகிவந்து விடவேண்டியது உரியா மட்டும். முன்னணியில் தனியாகப் போரிடும் போது

கொல்லப்படுவான் என்று திட்டம் தீட்டினான். தன் செயல் இந்தக் கொலையைச் செய்யாவிடினும் அக்கொலைச் செயலுக்கு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டியவனானான். (வசனம் 15-24)

பாரபட்சமின்றி இச்செயலை நாம் அலசிப்பார்த்தால் தாவீது எப்படிப் படிப்படியாக பாவத்தின் வலைக்குள் அகப்பட்டான் என்று காணமுடியும்.

தாவீது பத்சேபாளைப் பார்த்தான் (அதுவரை அவன் பாவம் செய்யவில்லை)

அவன் இருதயத்தில் இச்சை கொண்டான் (பாவம் பிரவேசித்து விட்டது)

அவளை தனக்கென்று எடுத்துக் கொண்டான் (விபச்சாரச் செயல்.)

தாவீது உரியாவை கொல்லச் செய்தான் (கொலை பாதகக் குற்றம்)

சங்கீதம் 51-ஐ வாசிக்கும் போது நாம் கண்ணீரை உகுக்காமல் இருக்க முடியாது. இதில் பரம தந்தையின் மன்னிப்புக்காக இறைஞ்சுகின்றான்.

1. என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்.
2. தேவரீர் ஒருவருக்கே விரோதமாய் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்.
3. நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எழும்புகள் களி கூறும்.
4. தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும்.

தாவீது தன் பாவத்தை அறிக்கையிட்ட போது, தேவன் அவனை மன்னித்தார். (2 சாமுவேல் 12:13). எனினும் பாவத்தின் பலன் அவனுடன் தரித்திருந்தது. தேவன் நமக்குப்பிரியமானவனாக இருந்தாலும், அவர் பாவம் என்னும் போது அதை இலகுவாக எண்ணுவதில்லை. அவர் பாவங்களை மன்னித்தபோதிலும், அதன் பாதிப்புக்களை நீக்கிவிடுவேன் என்று உறுதி செய்யவில்லை. அவைகளைத் தாங்கிக் கொள்ளவும், அவற்றில் இருந்து பாடம் படித்துக்கொள்ளவும் செய்கிறார். தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதைப் பார்த்து ''உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் வரப் பண்ணுவேன்'' என்று கூறுகிறார். (வசனம் 11). ''உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்'' என்ற தேவ நியதியை தன வேதனையான அனுபவத்தின் மூலமாகக் கற்றுக்கொண்டான். (எண்ணாகமம் 32:23).

வேசித்தனமாய்ப் பெற்றெடுத்த அந்தக் குழந்தை மரித்தது. தாவீது உபவாசித்து குழந்தைக்காக அழுது புலம்பினான். பலனின்றி அது மரித்துப் போயிற்று.

தாவீதுக்கு வேறொரு மகன் அப்சலோம் இருந்தான். அவன் நீண்ட தலைமுடியும் சௌந்தரியமுள்ளவனுமாயிருந்தான். ஆனால் அவன் கலகம் செய்கிறவனாக இருந்து, தாவீதின் சிங்காசனத்தையே பறிக்குமளவிற்குச் செயல்பட்டான். (2 சாமுவேல் 15:10).

பின்னால் ஒரு சமயம் யுத்தம் வந்தபோது, அப்சலோம் தப்பித்து ஓடுகையில், நீண்ட அவன் தலைமுடி மரக்கிளையில் சிக்கிக்கொண்டது. அவன் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான். தாவீதின் தளபதியான யோவாப் 3 ஈட்டிகளைப் பாய்ச்சி அவனைக் கொன்றுபோட்டான். (2 சாமு 18:15).

மகன் கொல்லப்பட்ட செய்தி, தாவீதுக்கு எட்டின போது அவன் மிகவும் கலங்கி மேல் வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்.

''என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக இறந்தேனாகில் நலமாயிருக்கும். அப்சலோமே என் மகனே என் மகனே என்று சொல்லி அழுதான். (2 சாமு 18:33).

தாவீது கர்த்தருக்கென்று ஓர் ஆலயம் கட்ட விரும்பினான். கர்த்தர் அனுமதிக்கவில்லை. அவன் தன் வாழ்நாளில் இரத்தம் சிந்திப் பல போர்கள் செய்தவன். எனவே அந்தப் பாக்கியம் அவனுக்கு கிடைக்கவில்லை. அவன் மகனுக்கு அது கொடுக்கப் பட்டது.

மாலை நேரத்தில் மாடியில் உலாவியதில் இருந்து தொடர்ந்து பார்ப்போமானால் தாவீது பாவத்தின் பலன்களைச் சந்திக்கிறதைப் பார்க்கிறோம். பலவீனமான நேரத்தில் விழுந்து போனது அவன் வாழ்க்கை முழுதும் சூழ்ந்து அல்லலுறச் செய்தது. இந்த ஆணின் அனுபவத்தில் இருந்து நாம் எப்போதும் ஜாக்கிரதையுள்ளவர் களாக இருக்கக் கற்றுக்கொள்வோம். எதிராளியாகிய சாத்தானின் மயக்க மாயங்களில் இருந்து தப்பித்துக்கொள்வோம். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமென்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். (1 பேதுரு 5:8).

# வேசித்தனமும், விபசாரமும்

–மேக்ஸ் பேட்டர்சன்

''ஆனால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி அவளைத்தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரம் செய்கிறவனாயிருப்பான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் செய்கிறவனும் விபசாரம் செய்கிறவனாயிருப்பான்''. (மத்தேயு 19:9)

எவர் வேசித்தனம் செய்கிறார் எவர் விபசாரம் செய்கிறார் என்பது பற்றி பலவகையான கருத்துக்கள் உண்டு. வேசித்தனம் என்பது திருமணமாகாதவர்கள் பாலுறவு கொள்ளும் பாவம் என்பதும், விபசாரம் என்பது திருமணமானவர்கள் இடையில் பாலுறவு கொள்ளும் பாவம்; பொதுவாக இது எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் பொருள். அகராதி கூட அதே பொருள்படத்தான் கூறுகிறது.

வேசித்தனம் என்று பொருள் தரும் கிரேக்க மொழிச்சொல் பொதுவானதும் பலவற்றையும் உள்ளடக்கியதுமானது. ஆர்ன்டட் என்பவரும் கிங்ரிங் என்பவரும், இதனை விளக்கும்போது ஒழுங்குக்குப் புறம்பான எல்லாவிதமான பாலுறவும் வேசித்தனம் என்று விளக்குகிறார்கள். எனவே இதற்கு விலைமாதருடன் உறவு கொள்ளுதல், காமவிகாரம், அசுத்தம், ஓரினச் சேர்க்கை - எல்லாம் இதில் அடங்கும். விபசாரம் என்பது குறிப்பான அர்த்தம் கொண்டது. நெறியற்றதும் மணமானவர்களிடையே காணப்படும் பாலுர்வு என்ற அர்த்தமாகும்.

எனவே இந்த இரு சொற்களின் பொருளைப் பொதுவான தாகவும், குறிப்பானதாகவும் கொள்ள வேண்டும். இயேசு வேசித்தன முகாந்தரத்தினாலொழியத் தன் மனைவியைத் தள்ளி

விடுகிறவன் விபசாரம் செய்கிறான் என்னும்போது பொதுவாக அர்த்தங்களையெல்லாம் உள்ளடக்கியது. அதாவது மேலும் விளக்கும்போது இன்னும் வேறு பல அர்த்தங்களும் இதில் சேரும். சுபாவப்படியில்லால் விலைமாதர், ஓரினச் சேர்க்கை நெறிபிரண்ட உறவு, விபச்சாரம் இவைகளையெல்லாம் குறிக்கும்.

இயேசு ''விபசாரத்தினால்'' என்று (மத்தேயு 19:9)-ல் கூறியிருப்பாரானால் அதன் அர்த்தம் குறுகிய பொருள் கொண்டதாகியிருக்கும், விவாகரத்து, மறுமணம் இவற்றைக் குறிக்காமல் விடப்பட்டிருக்கும்.

☆☆☆☆☆

---

பாட விளக்கங்கள்

---

ஜீவாதிபதியாகிய ஆண்டவருக்கு விசுவாசமுள்ளவராயிருக்க வேண்டுமாயின் மதியீனமான காரியங்களைச் செய்து ஆத்துமாவை நஷ்டப்படுத்த நேரிடும்.

### தலைப்புப் பற்றிய பாடங்கள்

# ஆகவே - மீண்டும்....

**– டி.பியர்ஸ் பிரௌன்**

''ஆகையால் இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான ஒன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் எனப்படுவான். இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான்''. (மத்தேயு 5:19).

சில நாட்களுக்குமுன் ''ஆகையால்'' என்ற சொல்பற்றி கிரேக்க மொழியில் அதன் பொருள், மற்றும் எதையெல்லாம் அடக்கியுள்ளது என்று ஓர் கட்டுரை எழுதினேன். அதன் பொருள் மிகப் பரவலாகக் காணப்பட்டது. எனவே மேலும் புதிய ஏற்பாட்

டில் இதுபற்றி என்ன கூறுகிறது என்று அறிய முடிவு செய்தேன். ''ஆகையால்'' என்ற பொருள் பற்றிய அர்த்தத்துடன் கூறப்பட்ட காரியங்களை விவரமாக எழுதினால் ஒரு கட்டுரை போதாது ஒரு புத்தகமே எழுத வேண்டும் என்று கண்டேன்.

கிரேக்கச் சொல்லில் இருந்து பார்க்கும்போது சில சிறுமாறுதல் களுடன் காணப்படுகிறது. சில பொருள் உள்ளதாக இருக்கிறது. அந்த வார்த்தை "alla" "ara" "gar" "de" "dio" என்றிப்படி பல சொற் கள் பயன்படுதப்பட்டாலும், ஒரு வார்த்தை ஆகையால் என்று பொருள்படும். "oun" என்ற வார்த்தையை காட்டும் உதார ணங்களை மட்டும் எடுத்து விளக்கலாம். ஆண்டவர் கொடுத்த கடைசிக் கட்டளையில் காணப்படுகிறது. எனவே புதிய ஏற்பாட்டில் இச்சொல் வருடம் 437 இடங்களிலும் இதன் பொருள் பற்றிக் கவனமாகப் படிப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த வார்த்தைக்கு முன்னாலும் பின்னாலும் என்ன வருகிறது என்று அறியமுற்படு வீர்கள். இந்தச் சொல் முன்னால் வரும்போது முக்கியமான சத்தியத்தைப்பற்றிச் சொல்லும். பின்னால் வரும்போது அந்தச் சத்தியத்தின் விளைவு என்ன என்று கூறப்பயன்படுத்தப்படுகிறது.

சில உதாரணங்களை நாம் இனிக்காணலாம். மத்தேயு 5:18-ல் முதலில் ஒரு சத்தியம் கூறப்படுகிறது. அதாவது, ''வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாயப் பிரமாணத்தி லுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒருசிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 5:18). அடுத்துவரும் 19-ம் வசனத்தைக் கவனிக்கும்போது ''ஆகையால்'' இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறியதானதொன்றையாகிலும் மீறி அவ்விதமாய்ப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் மிகவும் சிறியவன் எனப்படுவான். இவைகளைக் கைக்கொண்டு போதிக் கிறவன் எவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான்.

(மத் 5:19). பிதாவின் நியாயப் பிரமாணம் என்பதால் அவர் ''ஆகையால்'' என்ற சொல்லை, கட்டளையை மீறுவதாலோ கைக் கொள்ளுகிறதாலோ ஏற்படும் விளைவை கோடிட்டுக் காட்டு வதற்காக இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார். அந்த முறை தொடர்ந்து சரியாகவே வருகிறது.

தேவ கிருபை பெருகுவதாலும், நியாயப் பிரமாணத்தை எல்லாம் கைக்கொள்வதினால் மட்டும் நாம் நீதிமானாகிவிட முடியாது என்பதாலும், இன்றைக்குப் பொருந்திவரும் தேவ சட்டம் பொருள் செறிவுள்ளதன்று என்று கூறிவிடமுடியாது.

மத்தேயு சுவிசேஷத்தில் ''ஆகையால்'' பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருங்கள் (மத் 5:48) என்று கூறுகிறது. ''ஆகையால்'' என்பது எதைக் காட்டுகிறது? இதற்கு முன்பு நமது சத்துருக்களைச் சிநேகியுங்கள் அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவின் புத்திரர்களாயிருப்பீர்கள் என்று கூறிவிட்டு ஒரு மனுஷன் தன் விரோதிகளை நேசிக்கவும், சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும், துன்பப்படுத்துகிறவர்களுக்கு நன்மை செய்யவும் கற்றுக் கொண்டால் பிதாவின் புத்திரராயும், பூரண சற்குணராயும் இருப்பர் என்று விளக்கப்படுகிறது. தேவனைப் போலிருக்க முயற்சி செய் பவன் அடையும் பலன் என்ன என்று கூறும்போது ''ஆகையால்'' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

அதன் பலனாக ஒருவன் பூரணப்படுவான்: தேவனைப் போலவே இருப்பான் என்ற இந்த பலன்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகைாயல் நாளையைக் குறித்துக் கவலைப்படாதிருங்கள். (மத்தேயு 6:33,34).

சத்தியத்திற்கும் அதைத் தேடுதலினாலே பெறும் நன்மைகளுக்கும் இருக்கும் தொடர்பை அறிந்து கொள்ளலாமே. அப்படி நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். அப்பொழுது உலகக் கவலைகளில் இருந்து விடுவிக்கப்படுவீர்கள்.

''அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால் அறுப்புக்கு எஜமான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்'' என்றார். (மத்தேயு 9:37,38). இந்தப் பகுதியில் நாம் ஜெபிப்பதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறார். சுவிசேஷத்தை நாம் முறையாகத் தரும்போது அதை ஏற்றுக்கொள்ள அநேகர் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் வேலையாட்களோ கொஞ்சமாக இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானோர் ஊழியத்தைப்பற்றிய கருத்து ஆய்வுகளில் பங்கு பெற்றாலும் அவர்கள் எல்லாரும் தேவனின் திராட்சைத் தோட்டத்தில் பணி செய்வதில்லை. அங்கே சென்று கொஞ்சம் திசை திருப்பப்படுகிறார்கள். அவ்வளவே, அறுப்பு மிகுதி ஆட்களோ கொஞ்சம். ஆகவே நாம் அறுப்புக்கு எஜமானனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். ஜெபத்திற்கு அவர் பதில் செய்யும் வகையில் நாம் நம்மை ஊழியம் செய்ய ஒப்புக் கொடுக்காவிட்டால், நமது ஜெபத்தினால் பயன் ஒன்றுமில்லை.

''ஆகையால்'' மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனைப் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன் நானும் அறிக்கை பண்ணுவேன்'' என்று எத்தனை முறை வேதத்தில் இருந்து கூறியிருக்கிறார்கள், அவர் கூறின ''ஆகையால்'' என்பதைக் குறித்து என்றாவது சிந்தித்திருக் கிறோமா? முந்திய வசனத்தை வாசித்தால் ''ஏனென்றால் நீங்கள் அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் விசேஷித் தவர்கள் அல்லவா'' என்று காண்கிறோம். இயேசு உங்களை எவ்வளவாக கனப்படுத்துகிறார். நீங்கள் மனிதர்களுக்கு முன்னால்

சொல்லினாலும், செயலினாலும் அறிக்கை பண்ணினால் அவரும் ஆகவே தம் பிதாவின் முன்னர் அறிக்கை பண்ணுவான்.

''ஆகையால்'' இந்தப்பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனே அவனே பரலோகத்தில் பெரியவனாயிருப் பான். (மத் 18:4). இங்கு ''ஆகையால்'' என்று கூறும்போது மூன்றா வது வசனத்தில் கூறப்பட்ட ''நீங்கள மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ற வசனத் தைக் குறிப்பிடுகிறது. அந்த வசனம் 'மெய்'யாக இருக்கிறது. ஆகையால் நம்மை நாமே தாழ்த்தி கீழ்ப்படிதலும் அன்பு நிறைந்தவர்களுமான குழந்தைகளைப்போல அவரது சீஷர்களாயிருப்பது நலம், ''நீங்கள் மனந்திரும்பி குழந்தைகளைப் போலாகிவிட்டால்'' என்று அவர் கூறுவதைக் கவனியுங்கள். நம்மில் பலர் இந்த அனுபவத்தில் வர வேண்டும். அதைச் செய்வதற்கு ''ஆகையால்'' என்றும் ''இல்லாவிட்டால்'' என்றும், சொல்வதை இணைத்தால் காரியத்தின் தொடக்கம் கிடைத்துவிடும்.

''ஆகையால்'' என்ற வற்புறுத்தும் சொல் என்ன கூறுகிறது எதை விளக்குகிறது என்று நிதரிசனப்படுத்த சில உதாரணங்கள் மேலே கூறப்பட்டன. நீங்களே இதுபற்றி மேலும் பலவற்றைப் படிக்கலாமே! தேவ செய்தி மனதைப் பரவசப்படச் செய்யுமே.

✪★✪★✪★✪

## *அன்பு....!*

***அன்பு பலவித வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவ அன்பே பெரிது!***

# ஒப்புக்கொடுத்தல்

**– சார்லஸ் பிரியர்**

இறைவா நான் உம்மிடம் வர உதவிடும்
கடல் பொங்கினாலும் காற்று வீசியடித்தாலும்
என்னைச் சூழ எல்லையில்லா ஆபத்துக்கள் காணப்பட்டாலும்
புயல்கள் என் ஆத்துமாவை மேற்கொண்டாலும்
சூறாவளிக்கு நடுவே நம்பிக்கையுடன் உம்
சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பேன்.
நீர் வரும் தோற்றம் கண்டு "அமைதி" "இரையாதே"
என்னும் வார்தைகளைக் கேட்பேன்.
அரைகுறை விசுவாசத்தில் அசைடிப்படினும்,
அலைகளினூடே அமிழச் சென்றாலும்,
மரணத்திலிருந்து உயரத்தூக்கி
உம் பக்கம் என்னை உயர்த்திக்கொள்ளுமே!
விசுவாசம் செழிக்கச் செய்திடும் போது
அலைகள் மீது நடந்திடுவேனே
அன்றும் அடியார் நடந்தது போலவே.
உம் கரத்தின் தாங்குதலை உணர்ந்தது போல
வெண்பனிபோல வெளுத்திடும் அன்பும்
பெற்றிடச்செய்யும் கேட்பது நானே உரைப்பது நீரே
நித்திய வீட்டிற்கு நேர் வழிகாட்டும்,
எது வந்தாலும் எது போனாலும் என் குரல் கூறும்
உம்மொழி கேட்டேன். ஆண்டவரே
உடன் வர இதோ ஆயத்தம் என்பேன்.

# மறந்து விட்டோமா நாம்?

**– ஜென் டைலர்**

வாழ்க்கையில் நோக்கம் என்பது முக்கியமானது என்று காண்பிக்க,

1. நாம் பெற வேண்டிய மிகப்பெரிய தேவை - பாவமன்னிப்பு. (மார்க் 8:36,37)
2. பாவம் நம்மைத் தேவனிடமிருந்து பிரித்து ஆக்கினைக் குட்படுத்துகிறது. (ஏசாயா 59:1, 2, ரோமர் 6:23, வெளி : 21:8)
3. ஒவ்வொருவரும் பாவத்திற்கு விமோசனம் கண்டாக வேண்டும். (ரோமர் 3:23)
4. மன்னிப்பைப் பெற்றிருக்கிறாயா? (எபிரெ 11:6; அப்போஸ் 17:30, 8:37; 2:38).
5. நாம் பாவமன்னிபபைப் பெற செலுத்தப்பட்ட கிரயத்தை மறந்து விட்டோமா? (1 கொரி 6:20, 1 பேதுரு 1:19)
6. நமக்காக என்ன செய்யப்பட்டது என்று நினைவு கூர்ந்து விளங்கிக் கொண்டோமானால், அது நமது வாழ்க்கையை மாற்றும் (1 யோவா 4:19)
7. மத்தேயு 1:21, யோவான் 1:29; யோவான் 3:16, லூக் 19:10, லூக் 24:41-44, 1 பேதுரு 2:24, வெளி 1:5, 1 தீமோ 1:15
8. இயேசு உனக்குச் செய்தவற்றை நினைவு கூறுகிறாயா? (யோவான் 14:15; 15:14).
9. கிறிஸ்தவர்கள் உலகத்தாரை விட வேறுபட்டவர் என்பதை மறந்துவிட்டோமா? (1 யோவான் 2:15-17).
10. நிறைய மக்கள் ஞாயிறு ஆராதனையில் பங்கு பெறுகின்றனர்.

    திங்களன்று சாத்தானைப் போல் வாழ்கிறோம்

    (யாக்கோபு 4:4)

11. நாம் நீதிமான்களாக இருக்க வேண்டும் (ரோம 12:1,2, கலாத்தியர் 5:24)

12. நீங்கள் எத்தகைய வாழ்க்கை வாழ்கிறீர்கள்?

13. மோட்சம், நரகம் உண்டு என்று மறந்து விட்டோமா?

(மத் 25:46, யோவான் 14:1-3, அப்போஸ்தலர் 1:11, மத் 23:33)

14. அநேகர் நித்தியம் என்பதை பின்னுக்குத் தள்ளிவிட்டனர். அது அவர்களுக்கு முக்கியமில்லை. அவை இருக்கிறதா என்று நம்புவது கூட இல்லை. (தானியேல் 2:28).

15. மோட்சம் நரகம் என்பதன் பொருள் உனக்குப் புரிகிறதா?

16. இந்த இரண்டில் ஓரிடத்துக்குத்தான் நீங்கள் போகிறீர்கள்.

***நிறைவு :*** உன் சிருஷ்டிகரை இப்பொழுது நினை என்பது முக்கியமான வார்த்தைகள், நீங்கள் நினைவு கூறுகிறீர்களா?

---

## இந்த நாளை இவைகளுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

***அன்பு சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், கண்ணியம், கட்டுபாடு - இந்த நாளை இவைகளுக்கு ஒப்புக் கொடுக் கிறேன். வெற்றியடைந்தால் நன்றி செலுத்துவேன். விழுந்தால் அவரது கிருபையை நாடுவேன். நாளின் முடிவில், தலையை தலையணை மீது வைத்து ஓய்வெடுப்பேன். கர்த்தரையே நான் தெரிந்து கொள்வேன்.***

# உலகத்தின் ஒளி

***(யோவான் 12:46)***

**– நீல் பொலார்டு**

அறிமுகம் : அ. இயேசு அற்புதங்களைச செய்தார். அவர்கள் நம்பவில்லை. (யோ 12:37). இயேசு அவர்களை குருடர்கள் என்றார். (வசனம் 40). ஏன் (வசனம் 43)?

ஆ. கிறிஸ்துவைப் பற்றிய பல தோற்றங்கள்

1. ஜீவன் (யோவான் 11:25)
2. ஜீவ அப்பம் (யோவான் 6 : 48)
3. வழி (யோவான் 14:6)
4. வாயில் (யோவான் 10:1)
5. மேய்ப்பன் (யோவான் 10:11)

இ. முக்கிய வசனம் (இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது...)

1. இயேசு உலக்திற்கு வந்தார்.

அ. இயேசு மாம்சமானார் (யோவான் 1:14)

(1) நம் மத்தியில் வாசம் பண்ண (யோவான் 1:4)

(2) தெய்வ மகிமையைக் காண்பிக்க (யோவான் 1:14)

(3) புதிய வழியை நமக்குக்காட்ட (யோவான் 1:17).

அ. இருள் என்பது கிறிஸ்து யாரென்று அறிந்து கொள்ளாதது. (யோவான் 1:5).

2. எங்கே இருளிருந்ததோ அங்கே இயேசு வந்தார்.

அ. இயேசு மாம்சத்தில் வருமுன்னரே இருந்தவர்

3. இயேசு ஒளியாக வந்தார் - (ஒளியென்பது யோவான் நற்செய்தியில் 24 முறை வருகிறது).

அ. ஒளி எல்லா மனிதர்களுக்கும் (எல்லை) எவராயினும் (யோவான் 12:46)

1. சுவிசேஷப்பணியைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லப்படுகிற. (ரோ 1:16).

ஆ. ஒளி உலகத்திற்காக (பாவம்) "உலகத்திற்கு" (12 :46).

இ. ஒளி மாறுதல் பெறச் செய்ய (தூய்மைப்படுத்த) "இருளில் இராதபடி" (12:46 ரோமர் 12:12).

முடிவு : அ. உலகின் ஒளியாக இயேசு வந்தார் என்று முடிவு செய்கிறோம்.

1. இருள் இருந்த காலம்.

2. ஒளியின் அவசியம்

3. ஒளியில் நடத்தலவசியம் (1 யோ. 1:7). ஒளியில் நடக்க அழைப்புக் கொடுத்தல்.

✦✦✦✦✦

## நான் யார்? கண்டுபிடி

என்னைத் தெரிகிறதா? குறிப்புகளை வாசித்து கவனமாக யோசி. முதல் குறிப்பில் என்னைக் ஊகம் செய்து விட்டால் 100 மதிப்பெண்கள். 5-வது குறிப்பில் தான் என்னைக் கண்டுபிடித்தால் 60 மதிப்பெண்.

நான் யாரென்று தெளிவாகத் தெரிந்து விட்டால் வேதத்தில் அந்த வசனத்தை எடுத்துப்பார். - எது சரியென்று வேதவசனம் கூறட்டும்.

1. 100 வேதாகமத்தில் 3 புத்தகங்களில் என்னைக் காணலாம். (அப்போஸ்தலர், 1 கொரி, தீத்து)

2. 90 நான் ஒரு யூதன், அலெக்ஸாந்திரியாவில் பிறந்தவன் (அப்போஸ்தலர் 18:14)

3. 80 பழைய ஏற்பாட்டில் ஆழ்ந்த அறிவுண்டு, என் நம்பிக்கை குறித்து எடுத்துக்கூற முடியும். (அப்போஸ்தலர் 18:24)

4. 70 எபேசு பட்டணத்தில் சிலகாலம் வசித்தேன். (அப்போஸ்தலர் 18:24).

5. 60 ஒரு கிறிஸ்தவனும் அவன் மனைவியும் கிறிஸ்துவைக் குறித்து நான் போதிக்கக் கேட்டனர் (வசனம் 25)

6. 50 ஆண்டவரைப்பற்றிய அறிவு குறைவு என்று கண்டு தனியே அழைத்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். (வசனம் 25)

7. 40 மனந்திரும்பலின் ஞானஸ்நானம் மட்டும் தெரியும். ஏற்றுக்கொண்டேன். யோவான் ஸ்நானன் கூறியது போல் இரட்சகர் வருகைக்கு காத்திருந்தேன். அவர் வந்து விட்டதை அறியாதிருந்தேன். (வசனம் 26).

8. 30 பின்னர் கிரீஸ் வழியாக பிரயாணமானபோது என்னைத் சபை ஏற்றுக்கொண்டது. கிறிஸ்தவர்களுக்கு அநேக காரியங்கள் குறித்து போதித்து, சிலுவையைக் குறித்து விசுவாசித்தவர்களை பலப்படுத்தினேன் (வசனம் 27).

9. 20 பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை அறிந்திருந்த தால், இயேசுவே கிறிஸ்து என்று திட்டமாய் யூதர்களுக்குப் போதித்து விளக்கிக் காட்டினேன். (வசனம் 28)

10. 10 கொரிந்துப் பட்டிணத்தில் என்னை வெகுவாக துதித்தலால் என் பெயரை வைத்துக் கொள்ள விரும்பினர் . (1 கொரி 3:45).

எனது மதிப்பெண் : (சரியான விடைகள் அட்டையின் உட்புறம் காணலாம்.)

# வேத வினாக்கள்

யார் இயேசுக் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருக்க முடியும்?

புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் அப்போஸ்தலர்களைப் பற்றி வாசிக்கிறோம். மக்கள் ''அப்போஸ்தலர்'', ''சீஷர்கள்'' யாவர் என்பது பற்றிக் குழம்பியிருக்கின்றனர். ''சீஷர்'' என்பவன் 'கற்றுக் கொள்பவன்' அல்லது 'மாணவன்' என்பதாகும். 'அப்போஸ்தலன்' என்பவன் அனுப்பப்பட்டவன். எல்லா விசுவாசிகளும், (அப் போஸ்தலருட்பட) சீஷர்கள் (மாணவர்கள்) : ஆனால் எல்லாச் சீடர்களும் அப்போஸ்தலர்கள் அல்ல.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை முகமுகமாக நேரில் கண்டவர்கள்.

அப்போஸ்தலன் என்பவன், இயேசுக் கிறிஸ்துவினால் தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்ளப்பட்டவனும், தம் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருப்பவனும் ஆவார். ஆதியில் நமது ஆண்டவர் ஊழியத்தைத் துவக்கும்போது பன்னிரண்டு பேர் தெரிந்து கொள்ளப்பட்டனர். மற்றவர்கள் அவர் உயிர்தெழுந்து பரமேறின பின்னர் சேர்க்கப்பட்டவர்கள். இவர்களுக்கு எல்லாம் பொதுவாக காரியம் ஒன்று இருந்தது. இவர்கள் இயேசு கிறிஸ்துவை நேரில் கண்ட சாட்சிகள்.

காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவு, அவர் தமது அப்போஸ்தலர்களுடன் மேல் அறையில் இருந்தபோது இயேசு ''நீங்கள் எனக்கு சாட்சிகள்''. ஏனெனில் ஆதியிலிருந்து என்னுடன் இருந்தவர்கள் என்று கூறினார். (யோவான் 15:27). இவர்கள் மற்றவர் சொல்ல இயேசுவைப் பற்றி அறிந்தவர்களல்லர், தினமும் அவருடன் இருந்தவர்கள், அவருடன் நடந்து சென்றவர்கள், ஒன்றாய் உண்டு உறங்கியவர்கள் ; அவர் சிலுவையிலறையப்பட்ட

போது நேரில் பார்த்தவர்கள். உயிர்த்தெழுந்த பின்னரும் அவரைக் கண்டவர்கள். அவர்கள் நேரில் கண்டதனால் அவர் சாட்சிப்படி இனிவரும் காலங்களிலும் அவரை அறிந்து கொள்வார்கள்.

கிறிஸ்து எவ்வாறு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டார்.

தமது ஊழியத்தின் துவக்க காலதில் இயேசு இந்த அப்போஸ் தலர்களை ஒவ்வொருவராக அழைத்துக்கொண்டார். அவர் மரித்த பின் யூதாசுக்குப் பதிலாக வேறொருவரைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது (அவரைக் காட்டிக் கொடுத் தவன்). அவ்வாறு பதிலியாகத் தெரிந்து கொள்ள வேண்டியவன் இயேசுவுடன் இருந்தவனும் இயேசுவை கண்ணாரக் கண்டவனு மாயிருக்க வேண்டும். ''ஆதலால் யோவான் ஞானஸ்நானங் கொடுத்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்தி லிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக் கும் அவர் நம்மிடத்தில் சஞ்சரித்த நாட்களிலெல்லாம் எங்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து எங்களுடனே கூடச் சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும்'' என்று பேதுரு கூறுகிறதையும் பார்க்கிறோம். (அப்போஸ்தலர் 1:22).

பல வருடங்களுக்குப்பின் ஒரு கடைசி அப்போஸ்தலன் அழைக்கபட்டார். இயேசுவினால் நேரடியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவன் தர்சு பட்டணத்தானாகிய சவுல். பின்னர் அவன் பெயர் பவுல் என்று மாற்றப்படுகிறது. இயேசு சவுலுக்கு நேரடி யாகத் தரிசனம் கொடுத்தார். மேலும் அவர் 'இப்பொழுது நீ எழுந்து காலூன்றி நில் நீ கண்டவைகளையும், நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறிதது, உன்னை ஊழியக் காரனாகவும், சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்'' என்று கூறினார். (அப்போஸ்தலர் 26:16).

பவுல் மட்டுமே கடைசி அப்போஸ்தலனாக இயேசுவினால் தெரிந்து கொள்ளப்படுகிறான். பவுல் தன்னைப் பற்றிக் கூறும் போது ''எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்'' (1 கொரி 15:8). பவுலுடன் அப்போஸ்தலர்களின் பட்டடியல் பூர்த்தியாகிறது. தன்னை அப்போஸ்தலன் என்று தற்காலத்தில் அழைத்துக் கொள்ளுகிற எவனும் ''ஏமாற்றுகிறவனும், பொய்யனுமாகிறான்''. இந்த மெய் அப்போஸ்தலர்களினால் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டவைகளில் வாசித்து நீங்களும் நானும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்.

*******

## அழைக்கப்பட்ட மக்கள்

இந்த நாட்களில் அப்போஸ்தலராக அழைக்கப்பட்டவர் யாருமில்லை ஆனால் அழைக்கப்பட்ட மக்கள் உண்டு.

அவர் நம்மை அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு அவருடைய மகிமையாக்கிக் காண்பிக்கும் பொருட்டாக அழைக்கப்பட்டவர். (1 பேதுரு 2:9).

அவரைப் பின்பற்றுகிறவர்களாக நம்மை அழைத்தார். நமது அழைப்பினிமித்தம் மரிக்க நேர்ந்தாலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். (1 பேதுரு 2:21).

நாம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக அழைக்கப்பட்டவர்கள். நமது வாழ்வு பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். (1 பேதுரு 3:9).

நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருப்பது போலவே நாமும் பரிசுத்தராயிருக்க வேண்டும். (நமது சொல் நடவடிக்கை யாவற்றிலும்) (1 பேதுரு 1:15).

கிருபையின் தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் நித்திய மகிமைக்கென்றழைத்திருக்கிறார். அவருடைய அவர்களை அவர் பலப்படுத்துவார். (1 பேதுரு 5:10).

பேதுரு இதில் திட்டமாகக் கூறுவது என்னவெனில் நாம் கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் (சுவிசேஷத்தின் மூலமாக) நமக்கு என்று ஓர் பணியிருக்கிறது. அந்த அழைப்புக்குப் பாத்திரராக கீழ்ப்படிந்து அவருக்கு எல்லாவற்றிற்கும் விசுவாசமுள்ளவர்களாகவும் அவரது சொந்தக்குமாரர்கள் போலவும் இருக்க அழைக்கப்பட்டோம். (2 தெசலோனி 2:13-17).

B.B.C-ல் ஒலிபரப்பப்பட்டது.

☆☆☆☆☆☆

---

வேத வினாக்கள்

---

# ஓர் பெண் பிரசங்கி என்று அழைக்கப்படலாமா?

**– ராய்ஸ் பிரடரிக்**

தேவனுடைய வசனத்தை சரியான முறையில் போதிப்பதற்கு தேவனின் அந்த வார்த்தைகளை எந்த வகையில் பயன்படுத்தினாரோ, அதே வகையில் போதித்தால் தான் சரியான அர்த்தமுள்ளதாகும். (1 கொரி 2:13, 2 தீமோ 1:13, 2:2, 2:15).

ஒரு பெண்ணை வேதம் ''பிரசங்கி'' என்று அழைப்பதில்லை. ஆனால் ''பிரசங்கி'' என்ற வார்த்தை தேவனுடைய வார்த்தைகளைக் கூறி அறிவிக்கிற ஒரு ஆணைத்தான் குறிப்பிடுகிறது. (1 தீமோ 2:7, 2 பேதுரு 2:5) பெண்கள் வேதத்தில் எங்கும் ''பிரசங்கி'' என்று அழைக்கப்படவில்லை.

பெண்களுக்கும், எல்லாக் கிறிஸ்தவர்களும் தேவனுடைய வசனத்தின் அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(2 பேதுரு 3:18). எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்கள் சொல்லாலும், செயலாலும், கிறிஸ்துவைக் குறித்து பிறருக்குப் போதிக்க வேண்டும். (மாற்கு 16:15 - 16). எபிரெயர் 5:12-14, மத் 5:16). ஆனால் பெண்கள் எந்த அளவுக்கு பிறருக்குப் போதிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வார்த்தை பொது இடங்களில், ஆண்களுக்குப் பெண்கள் போதிக்கத் தடை செய்கிறது. ஆண்கள் தேவனுடைய வார்த்தைகளை ஆண்கள், பெண்கள் நிறைந்த கூட்டத்தில் பிரசங்கிக்கிறதைக் குறித்து வேதம் கூறுகிறது. (மத் 4:17, 10:7, 14:14, அப் 8:12, 17:2-4, 10:12). பெண்கள் போதகராக இருக்கக் கூடாது என்பது, ''ஸ்திரீயாவள் எல்லாவற்றிலும் அடக்கம் உடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும்''. (1 தீமோ 2:11,12). ''சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷர்களிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையில் பேசுகிறது அயோக்கிய மாயிருக்கிமே (1 கொரி 14:34, 35). சபையென்று சொல்லும்போது சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டவர்கள் என்று பொருள். சபை என்பது வெறும் கட்டிடம் என்று அர்த்தம் பெறாது வசனம் 34ல் ''சபையில்'' என்று கூறும் பொழுது கிறிஸ்தவர் கூடிவரும் கூட்டம் என்று பொருள். ஒரு பெண் ஆண்களுக்குப் போதிக்கும் போதகராக இருக்க முடியாது.

''பிரசங்கித்தல்'' என்பது ''கூறி அறிவித்தல்'' எடுத்து ரைத்தல்'' என்று பொருள். கிறிஸ்தவர்கள் எருசலேமில் துன்பப் படுத்தப்பட்டபோது ''சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்'' (அப் 8:4). பெண்கள் மற்ற பெண்களுக்கு உபதேசம் பண்ணவும் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்கவும் வேண்டும். (அப் 8:4). சிதறடிக்கப்பட்டவர்கள் ஆண் பெண் இருபாலரும் இருந்தார்கள். (அப் 8:3, 22:4). முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் பரிசுத்தத்திற்கேற்றவிதமாய் நடக்கிற வளும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்திற்கு அடிமைப் படாதவளுமாயிருக்கவும் தேவ வசனம் தூஷிக்கப்படாத படிக்கும் பாலியஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளை களிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர் களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும் நல்லவர் களும், தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும் அவர்களுக்குப் படிப்பிக்கத் தக்க நற்காரியங்களைப் போதிக் கிறவர்களுமாயிருக்கவும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லு (தீத்து 2:3-5). பெண்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உப தேசிக்க வேண்டும். (2 தீமோத்தேயு 1:5, 3:14,15 வாசிக்கவும்). தங்கள் பிள்ளைகளுக்கும் பிற பெண்களுக்கும் கற்பிக்கிறவர்களே ''பிரசங்கிப்பவர்'' என்று கூறிக்கொள்ளும் போது அவர்கள் அந்தப் பெண் பொதுவாக சபை கூடி வரும்போது ஆண்களுக்குப் போதிக் கவும், இவ்விதமாக தேவ வார்த்தைக்கும் கீழ்ப்படியாதவர் களாயிருக் கிறார்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஒரு பெண் தனியாக ஒருவனிடம் தேவ வார்த்தையை விளக்கிக் கூறலாம். பிரிஸ்சிலாவும் அவள் கணவனும் அப்பொல் லோவுடனும் தனிப்பட்ட முறையில் உரையாடினர் என்று காண்கிறோம். அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கின போது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதையும் கேட்டு அவனைச் சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித் தார்கள். (அப் 18:26). இந்த வசனம் ஆக்கில்லாவும், பிரிஸ்கில் லாவும் கடவுளுடைய வார்த்தையை அப்பொல்லாவுக்கு விளக்கிச்

சொன்னார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. யூதர்கள் கூடி வந்திருந்த பொதுச்சபையில், அவன் பிரசங்கித்தபோது அவனுக்கு விளக்கஞ் சொல்லி அவமானப்படுத்தவில்லை என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். அதற்குப் பதிலாக 'அவனை' தனியாக அழைத்து அவனுடன் தனித்திருக்கையில் உரையாடினார்கள்.

திரளான மக்களை தங்கள் போதனையினாலும், பயபக்தியான வாழ்க்கையினாலும் கர்த்தருக்குள் வழி நடத்தினார்கள் என்று அறிந்து அவர்களுக்காக தேவனை ஸ்தோத் திரிப்போம். அவ்விதமாக வாழ்ந்து தேவ வார்த்தைக்குக் கீழ்ப் படிந்து போதிக்கிற பல பெண்களை நமக்குத் தருவாராக.

---

### இருதயத்திலிருந்து

# ஐரோப்பாவின் இதயமாம் பெல்ஜியம்

**– ராய் டேவிட்சன்**

பெல்ஜியத்தின் மிகப்பழமையான நகரமாகிய டோங்கரென் கி.மு.15-ம் ஆண்டில் ரோம ஆட்சியில், நிர்மாணிக்கப்பட்டது. அதன் இட அமைப்பினாலும் நான்கு சாலைகளின் சந்திப்பாக விருப்பதினாலும், அது ரோம ஆட்சியில் நிர்வாகம், வணிகம், ராணுவம் ஆகிய எல்லாவற்றிற்கும் 5-ம் நூற்றாண்டு வரை முக்கிய நகரமாக இருந்தது.

முதல் நூற்றாண்டு இறுதிக்கு முன் இங்கு கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக வாழ்ந்திருக்க வேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்கள் வீடுகளிலும் வாடகைக்கு எடுத்த கட்டிடங்களிலும் சபை கூடி வந்தனர். பெரிஜிகா என்று ரோமர்களால் அழைக்கப் பட்ட இந்த நகரில் முதல் முதல் கட்டப்பட்ட கட்டிடங்கள் மரத்தால் ஆனவையாக இருந்திருக்க வேண்டும். கான்ஸ்டன்ட்டைன்

கிறிஸ்தவத்தை அரசு மதமாக மாற்றிய பிறகு கற்களினால் கட்டப்பட்ட கட்டிடம் இருந்தது. அதன் சிதலப்பகுதிகளை இன்றும் காண முடிகிறது. டோங்கரென் நகரில் ஆதரவு பெற்ற மதமாக இருந்தது. அத்துடன் சார்பற்ற நிலைகளும் ஏற்பட்டது. ரோம அரசு தன் ஆதிக்கத்தை இழந்தபின் ரோம திருச்சபை அரசியல் செல்வாக்குப்பெற்று விளங்கியது. இப்படி ஐரோப்பா முழுவதும் இருந்தது. அதிகாரப்பூர்வமான ரோம கிறிஸ்தவ மதம், இயேசுக்கிறிஸ்து போதித்த, ஆவிக்குரிய, அரசியலற்ற போதனை களில் இருந்து விலகி விலகி வெகு தொலைவு சென்று விட்டது.

பெல்ஜியம் ஒரு ராணுவ முக்கியத்துவம் பெற்றதாக ஐரோப் பாவின் சாலைகளின் சந்திப்பாக இருந்ததால் இங்கு அநேகம் போர்கள் நடைபெற்றன. ரோம ஆட்சிக்காலத்தில் இருந்து பெல்ஜியம் அண்டையில் இருந்த ஏதாவது ஒரு நாட்டினரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்தது.

இது சாலைகளின் சந்திப்பானதால் வணிக முக்கியத்துவம் உடையதாகவுமிருந்தது. 13-வது நூற்றாண்டில் பிளாண்டர்ஸ் நகரம் மக்கள் பெருக்கம் உள்ளதாகவும் பொருளாதாரச் செழிப்புப் பெற்றதாகவும் இருந்தது. இங்கிருந்து பிளமிஷ் என்ற ஒருவகைத் துணியும் அழகும் தரமும் உள்ள பின்னல் நூல் வேலைகளும், சித்திர வேலைப்பாடுகள் அமைந்த துணிவேலைகளும் ஏற்றுமதி செய்ததால் செல்வம் கொழித்தது. பிரக்ஸ் நகரம் வட ஐரோப்பா வின் கடற்கரைப்பட்டினமாகவும், வணிக மையமாகவும் இருந்தது. பிரக்ஸ், ஜென்ட், ஏன்ட் வெர்ப் ஆகிய நகரங்கள் நிறைய வரி செலுத்திய காரணத்தால் மன்னரிடமிருந்து சில உரிமைகளைப் பெற்றிருந்தன. இந்த உரிமைகளின் அடிப்படையில் தான் இந்த நாட்டுக்கு ஜனநாயகக் கருத்துக்கள் கொண்ட சாஸனங்கள் உருவெடுத்தன.

15-ம் நூற்றாண்டில் அறிவு, கலை ஆகியவற்றிற்கு ஓர் சிறந்த இடமாக விளங்கிற்று. ஐரோப்பாவில் நகரும் அச்சடிக்கும் முறையை லாரன்ஸ் ஜேன்ஸன் கோஸ்டர் 1430ல் கண்டுபிடித்தார். (இந்த முறை கொரியாவில் இதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது.) அதன்பிறகு புஸ்தகங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோ கிக்கப்பட்டது. படிக்கும், பழக்கமும் உயர்வு பெற்றது. மதச்சீர் திருத்தவாதிகளின் நூல்கள் எளிதில் அச்சடிக்கப்பட்டு விநியோகிக் கப்பட்டன.

வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியீடு செய்ய முற்பட்டதால் வில்லியம் டின்டேல் இங்கிலாந்தில் இருந்து ஜெர்மனிக்கு தப்பியோட வேண்டியிருந்தது. அந்த வேலையை முடித்தபின் மீண்டும் பெல்ஜியம் ஏன்ட் வெர்ப்பிற்குத் திரும்பி ஆங்கில வேதாகமத்தை அச்சிட்டு முடித்தார். பின்னர் இது கள்ளத்தனமாக இங்கிலாந்துக்குக் கடத்தப்பட்டது. கத்தோலிக்க மத அதிகாரிகள் அவரை 1535ல் சிறை பிடித்து 1536ல் வில்வூர்டேயில் நெருப்பில் வைத்து கொளுத்திவிட்டனர்.

அதன்பின்னர் வேதாகமம் பிரெஞ்சு டச்சு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை இயேசு கிறிஸ்து நிறுவிய திருச்சபையை விட மிகவும் வேறு பட்டதாக இருந்ததை மக்கள் அறிந்தனர். 16-ம் நூற்றாண்டின் இறுதியில் தாழ்நிலைப் பகுதிகளான (பெல்ஜியம், ஹாலந்து ஆகியவை) ரோமன் கத்தோலிக்க சபை வேதப்புரட்டானது என்று தெளிந்து, வேதம் எப்படிப் போதிக்கிறதோ அத்தகைய கருத்துக்களைக் கொண்ட கிறிஸ்தவத்தைப் போதிக்க ஆரம்பித்தது.

ரோமன் கத்தோலிக்கத் சபையின் அதிகாரத்தை பாதுகாக்கும் வகையில் திருமறையை வாசிப்பதும், அதை விளக்குவதும் சட்டப்படி குற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு வேதத்தை இரகசியமாகப் படித்தவர்கள் பிடிபட்டு தீக்கிரையாக்கப்

பட்டனர். பெண் விசுவாசிகள் உயிருடன் புதைக்கப்பட்டனர். தாங்கள் தவறு செய்ததாக ஒத்துக்கொண்டால் உயிருடன் எரிப்பதற்கு முன் கழுத்து நெறிக்கப்பட்டு பின்னர் எரிக்கப்படும் சலுகை வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டியபோது, ஸ்பெயின் நாட்டின் இரண்டாம் பிலிப்பு மன்னன் ஆள்வா என்ற பிரபுவின் தலைமையில் ஓர் படையை பெல்ஜியத்துக்கு அனுப்பி இந்த மத எதிர்ப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனை தடையின்றி நடைபெறவும், ஆதிக்கம் செய்யவும் ஏற்பாடு செய்தான். இதன் விளைவாக அநேகர் ஹாலந்து நாட்டுக்குத் தப்பி ஓடினர். அறிவியல் மேதைகளும், வணிகர்களும் தங்கள் மூலதனத்துடன் வெளியேறினர். கத்தோலிக்கரல்லாதவர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். பலர் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள கத்தோலிக்க மதத்துக்கு சார்பு கொள்வது போல போலி வேஷமிட்டனர். கத்தோலிக்கரல்லாதவர் இல்லாத நாடாக பெல்ஜியம் ''துப்புரவு'' செய்யப்பட்டது. இவைகளினால் வணிக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும், ஒரு சரிவு ஏற்பட்டது. அடுத்த நூற்றாண்டுகளில் பெல்ஜியத்தில் தொடர்ச்சியாக மாற்ற நாட்டரசர்களின் ஆட்சி நடைபெற்றது. பின்னர் 1830-ல் தான் அதற்குச் சுதந்திரம் கிடைத்தது. முதலாம், இரண்டாம் யுத்த காலங்களிலும் பெல்ஜியம் வெளிநாட்டவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

தற்காலத்தில் பெல்ஜியம் ஜனநாயக நாடாகவும், பூரண மத சுதந்திரம் பெற்ற நாடாகவும் இருக்கிறது. ஐரோப்பிய கூட்டமைப்பில் அது ஒரு உறுப்பினராகவும் ப்ரசல்ஸ் இதன் தலைநகராகவும் இருக்கிறது.

## படோயின் மன்னன் 1

படோயின் 1930-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி பிறந்தார். அவர் பெல்ஜியத்தின் மன்னராக 1951 ஜுலை 17-ம் நாள் முடிசூட்டப்பட்டார். 1960-ல் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த டோனாஃபேபியோலா டி மோராய் அராகன் என்ற பெண்ணை மணந்தார். படோயின் மன்னனும் அவர் மனைவி ஃபேபியோலா

வும் மக்கள் நலத்தில் அதிக நாட்டம் கொண்டவர்கள். மக்கள் உயர்தர பண்புடன் வாழவேண்டும் என்றும் விரும்புகிறவர்கள்.

1990-ம் ஆண்டு பெல்ஜியத்தில் இருந்த ரோமன்கத்தோலிக்க அரசியல் கட்சி ''கருக்கலைப்பு'' சட்டப்படி செல்லும் என்னும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது. மன்னர் படோயின் அரசியல் சாஸனப்படி அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டியதாயிருந் தாலும், அதற்குத் தன் ஒப்புதல் தர மறுத்துவிட்டார். பெல்ஜியத்தின் சட்டத்தினை விட உயர்வான வேறொரு சட்டத்திற்கு அவர் கீழ்ப்படிய தான் கடமைப்பட்டவர் என்று கூறினார். எனவே மன்னர் பதவியைத்துறந்தார். பார்லிமெண்ட் மேற்குறித்த சட்டத்திற்கு ஒப்புதல் தர வேறொருவரை மன்னர் பொறுப்பில் தற்காலிகமாக நியமித்தது. சட்டம் கையெழுத்தான மறு நாளே படோயின் மீண்டும் மன்னர் பதவி ஏற்றார்.

1993-ல் இருதய நோயினால் மரித்தபோதே பெல்ஜிய நாடு முழுவதும் அவர் மரணத்திற்குத் தன் கவலையைத் தெரிவித்தது. அவருக்குத் தம் அன்பைக்காட்ட ஓர் நினைவுச் சின்னத்தையும், சிலையையும் தனியார் நிதிசேர்த்து நிறுவினார்கள். மன்னர் படோயின் வணங்கி நிற்பது போலத் தோற்றத்தில் வில்பிரட் பஸ் என்ற கலைஞர் அமைத்தார். ஏன்ட வர்ப் நகரைச் சேர்ந்த ஜோ கிரிபெய்ன் என்ற கட்டிடக்கலை நிறுவனம் ஓர் அழகிய பூங்காவை அமைத்தது. அதில் 99 ''செர்ரி'' மரங்களும், ஒரு ''வில்லோ'' மரமும் நாட்டப்பட்டது.

## பெல்ஜியத்தில்
## இன்று கிறிஸ்துவின் சபை

டச்சு, பிரெஞ்சு, ஆங்கில மொழி பேசும் கிறிஸ்துவின் சபையினர் பெல்ஜியத்தில் இருக்கிறார்கள்.

டச்சு மொழி பேசுகிறவர்கள் : ஆஸ்டண்டு, ரோசிலேர், ப்ரக்கஸ் ஏன்ட்வெர்ப் ரிஜ்மேனால் ஹேஸல், ரோட்சிலாரில் இருக்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசுகிறவர்கள் : வெர்வியர்ஸ், லீஜ், பிரஸல்ஸ், லா டோக்கரில் இருக்கிறார்கள்.

ஆங்கில மொழி பேசுகிறவர்கள் : ப்ரஸல்ஸ் சாபில் இருக்கிறார்கள்.

## டச்சு மொழி பேசும் சபை
## சில வரலாற்றுக் குறிப்புக்கள்

குறிப்பு : இந்த விவரங்களை வாசிக்கும்பொழுது, திருச்சபை வளர்ச்சி என்ற நூலில் கூறிய காரியங்களும் இதில் சொல்லப்படும் விவரங்களும் எப்படி ஒத்திருக்கிறது என்று காணலாம். இந்த முறைகளினால் உலகில் எந்தப்பகுதியிலும் எந்தக் காலத்திலும் ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்படும் என்பது தெரிகிறது. மனதில் உறுதியும் உண்மையுடனும் உழைத்தால் இது நடைபெறுவது தடைபடாது.

### *ஆஸ்டெண்டு*

1960-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ''யெகோவாவின் சாட்சிகள்'' என்ற சபைப் பிரிவினர் தாங்கள் திருமறைப்படி நடப்பதில்லை என்று உணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் வீடுகளில் கூடி வந்தனர். வேத வழிப்படி நடக்க உறுதி கொண்டனர்.

அவர்களில் ஒருவர் ஒரு சமயம் ஒரு பிரெஞ்சுப் பத்திரிக்கையில் ஒரு விளம்பரத்தைக் கண்டார். அதில் எழுதப்பட்டது. திருமறை கத்தோலிக்கமும் அல்ல, பிராடஸ்டண்டும் அல்ல. இந்த இரண்டு பிரிவுகளும் இல்லாமல் நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க முடியும். சரியான நேரத்தில் கிடைத்த இந்த விளம்பரப்படி நடக்க முடிவு செய்தனர். அவர்கள் பிளெமிஷ் (டச்சு) மொழி பேசுகிறவர்களாதலால் அவர்களின் விலாசங்கள் ஹாலந்தில் உள்ள ரிச்சர்ட்சன் என்பவருக்கு அனுப்பப்பட்டது. அவர் 1960-ல் இந்த மக்களை வந்து சந்திப்பதாகத் தெரிவித்ததால் (இலையுதிர் காலத்தில்). அவர் வந்த பொழுது சுமார் 20 பேர் அவரைச்

சந்திக்கக் காத்திருந்தனர். அவர்கள் அவரிடம் கேட்பதற்காக 15 வினாக்கள் வைத்திருந்தனர். ஒவ்வொரு வினாவுக்கும் அவர் கூறும் விடைகளைப் பொறுமையுடன் ஏதும் பேசாதவாறு கேட்பது என்று முடிவு செய்தனர். அவர்களின் எல்லா உரையாடலும் ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டது. சகோதரர் ரிச்சர்டுஸன் அவர்களிடம் தங்கள் வினாக்களுக்கு அவர் தந்த விளக்கங்களை ஆழப்படித்தபின் மீண்டும் சந்திப்பதாகக் கூறிவிட்டனர்.

அவரிடம் கேட்ட வினாக்கள் எல்லாம் வேதத்தைப்பற்றிய விளக்கத்தினை சோதனை செய்ய எழுப்பப்பட்டவைகளே. எல்லாக் கேள்விகளுக்கும் தங்கள் குழுக்களால் வேதம் வாசித்தபொழுது கண்டறிந்த அதே விளக்கங்களை அவரும் கொடுத்தார் என்று கண்டு அதிசயப்பட்டனர். ஆனாலும் முதல் சந்திப்பின் போது அவரிடம் இதனை எடுத்துச் செல்லவில்லை. இறுதி முடிவுகள் எடுப்பதற்கு முன் மீண்டும் ஒருமுறை வினாக்களின் விளக்கம் கேட்பது என்றும் முடிவு செய்திருந்தனர். மீண்டும் வேதாகம குழுக்கள் தங்கள் வினாக்களைப் பரிசீலித்தபின் 6 வாரங்கழித்து ரிச்சர்டுஸன் அவரை வருமாறு அழைத்தனர்

1961-ல் மொத்தம் 9 பேர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்கள் ஆஸ்டண்டு நகரில் அவ்வப்போது கூடி வந்தனர். படிப்படியாக முன்னர் இருந்த மக்களில் 15 பேர் கிறிஸ்தவரானார்கள்.

## ரோஸ் லேர்

1964-ம் ஆண்டு ஒரு இன்சூரன்ஸ் பிரதிநிதி வேதாகமத்தை முறையாகப் படிப்பது என்று முடிவு செய்தார். அவர் ஆழ்ந் கத்தோலிக்க விசுவாசி. சபையில் நடைபெற்று வந்த சில மாறுதல் களைக் குறித்து வேதாகமம் கூறுவதற்கு முரண்பாடாக போதிக்கப் படுவது குறித்துக் குழம்பிப் போயிருந்தார். வேதாகமத்தைத் தானே கற்றறிவது என முடிவு செய்தார்.

ஹெரால்டு ஆப் ட்ரூத் (Herald of Truth) ன் வானொலியைக் கேட்டபின் அவர் இங்கிலாந்தில் இருந்த பில் ஸ்லேட் என்பவருக்கு எழுதி தனக்கு ஒரு வேத பாடத் தொடர் வேண்டும் என்று கேட்டார். ரால் டேவிஸன் பிளாண்டர்ஸ் நகருக்குப் போய்விடுகிறார் என்று அறிந்த ஸ்லேட் ஜோஸப் டெனிஸின் முகவரியை 1965-ல் கொடுத்தார்.

தான் வந்த குறுகிய காலத்தில் அக்டோபர் 1965-ல் சகோதரர் டேவிஸன் திருடெனிஸுக்கு சில கைப்பிரதிகளை அனுப்பி பின்னர் நேரில் சந்திப்பதாகவும் எழுதியிருக்கிறார். அடுத்த நவம்பர் டிசம்பர் மாதங்களில் சந்திப்புக்கள் நடைபெற்றன. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை தன்னைச் சந்திக்க அழைப்புக் கொடுக்கப் படவில்லை. அஞ்சல் பாடம் தொடர்ந்து நடந்தது. ஆகஸ்டில் சந்திப்பு நடந்தது. டெனிஸ் தான் குறிப்பில் அப்பொழுது எழுதியது: கிறிஸ்துவின் சபைக் கொள்கையுடன் முழு உடன்பாடு உண்டு. வேதாகமம் மட்டுமே எல்லா வினாக்களுக்கும் விடை தரக் கூடும். ஒரே ஒரு கேள்வி போப் (குரு) கடவுளால் நியமிக்கப் பட்டிருக் கிறாரா? ரோமன் கத்தோலிக்கருடன் கலந்து பேசும்போது இது முக்கிய கேள்வியாகும். தனக்குள்ளதாக போப் கூறுகிறதினால் நாங்கள் அவர் வார்த்தைகளைக் கேட்க வேண்டுமே என்ற வினா. வேதத்தில் இருந்து போப் என்பவருக்கு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்கு இல்லை என்று கூறும்பொழுது கத்தோலிக்க சபையின் அடித்தளமே போய் விடுகின்றது. டெனிஸ் தானே கத்தோலிக்க சபை என்ன கூறுகிறது என்றும் வேதம் கூறுவது என்ன என்றும் ஆய்வு செய்ததின், விளைவாக போப் ஆண்டவரால் நியமிக்கப் பட்டவரல்ல என்ற முடிவுக்கு வந்தார்.

இது ஓர் ஆரம்பம் மட்டுமே. தாம் அடுத்து எழுதிய கடிதத்தில் வேதாகமம் மட்டுமே பின்பற்றப்பட வேண்டும் என்று உறுதியாக நம்புகிறேன்; போப் என்றழைக்கப்படுகிறவருக்கு இதில் இடம் இல்லை. பழைய காரியங்களையெல்லாம் இதனால் தூக்கி யெறிந்து

விடுவேன் என்று பொருள் அல்ல. புதிதாகக் கூறப்படும் எதனையும் அப்படியே ஏற்றுக்கொள்ள மாட்டேன். வேதாகமம் ஒவ்வொன்றுக்கும் சான்று கூற வேண்டும் எல்லாமே நதரிசனமாக்கப்பட்டு அந்தக் கற்பாறையின் மேல் கட்டப்பட வேண்டும். தேவன் எனக்கு உதவி செய்வாராக என்றார்.

பின்னர் உண்மையான ஆய்வு துவங்கியது. டேவிசனுடன் கடிதம், நேரில் சந்திப்புக்கள் மூலமாக, ரோமன் கத்தோலிக்க சபையின் நூற்றுக்கணக்கான கொள்கைகளை ஆய்வு செய்தார் திருமதி டெனிஸ் அவர்களும் வேதாகமத்தைக் கற்பதால் அதிக ஈடுபாடு காட்டினார். கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு கூறியபடி அவர்கள் ஞானஸ்நானம் பெறவில்லை என்பதை உணர ஆரம்பித்தனர். 1966-ல் கிறிஸ்தவரானார்கள். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற முதல் ஞாயிறன்று முதல் தங்கள் வீட்டிலேய ஆராதனையை நடத்தத் துவங்கினார்கள்.

பிரக்கஸ் : பாய்டு, நீல் வில்லியம்ஸ் என்பவர்களால் பிரக்கஸ் நகரில் 1975-ல் சபை ஸ்தாபிக்கப்பட்டது. 1979ஆண்டு வரை அவர்கள் அங்கேயே தங்கிப் பணி செய்தனர். இடையிடையே வேறு அலுவல்களையும் கவனித்தனர். ரிச்சர்டு ஆம்சம்ஸ் சபையின் சுவிசேஷப்பணிகளைச் செய்ய உதவி செய்து வருகிறார்.

ஏன்டவெர்ப் : 1970-71 ஆண்டுகளில் ரோஸ்லேர் சபை ஒரு தேவை விளம்பரம் தந்தனர். அது பிளாஸ்டர்ஸில் இருந்து 15 லட்சம் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தது. பல விளம்பரங்களைச் சோதித்தபின் ஜோசப் டெனிஸ் என்பவர் ஓர் விளம்பரம் எழுதினார்.

''எந்த ஒரு சபையையும் சாராமல் கிறிஸ்தவராக இருக்கலாம்'' என்று அந்த விளம்பரம் கூறியது. அப்போது ரோஸ்லேரில் ஜோசப் டெனிஸ் மற்றும் பால் ஹைகிபேரெட் ஆகிய இருவரும் சபை மூப்பர்களாக இருந்தனர். ராஸ் டேவிசன் சுவிசேஷகனாக இருந்தார். சகோதரர் டேவிசன் இரண்டு வாரத்

துக்கு ஒரு நாள் வேதபாட வகுப்புகள் நடத்துவதற்காகச் சென்றார். மேற்கூறிய விளம்பரத்தினால் இது நடைபெற்றது.

1971 அக்டோபரில் ரிச்சர்டு ஆம்சம்ஸ் எழுதின கடிதத்தில் அவரும் இன்னும் பலரும் ஜெஹோவா விட்னசஸ் சபை கிறிஸ்து இயேசுவின் போதனைகளைப் பின்பற்றாததினால் அச்சபையை விட்டு விலகிவிட்டனர் என்று ஒரு கடிதம் எழுதினார்.

சகோதரர் டேவிசன் அவர்கள் இல்லத்தையும் சந்தித்த போது திரு.ஆம்சம்ஸ் தனக்கு ஒரு முக்கியமான கேள்வி இருக்கிறது. "நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் கொடுக்கிறீர்களா? என்று வினவினார். சகோ. டேவிசன் அப்போஸ்தல் 2:28 வசனத்தை எடுத்துக்காட்டி அவர்கள் அவ்விதமாகவே செய்கிறதாகக் கூறினார். அப்படியானால் நானும் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றளவு அவர்களின் வேதாகம வகுப்புகளில் அறிந்து கொண்டபடி ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்காக இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு வேதம் காட்டிய வகையைப் பின்பற்றுகிறவர்களாகக் காத்திருக்கிறோம் என்றும் கூறினார்.

1971-ல் ரிச்சர்டு ஆம்சம்ஸ் அவரது மனைவி கில்லா இருவரும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு தங்கள் இல்லங்களிலேயே கூடி வந்தனர். சகோ.டேவிசன் வாராவாரம் வேதாகம வகுப்புகள் நடத்த ஆரம்பித்தார். அங்குள்ள கிறிஸ்தவ மக்களின் அழைப்பின் பேரில் ஏன்ட்வொர்த் பகுதிக்கு அவரும் அவரது மனைவியும் வந்து தங்கினார்கள். (1972) அங்கு 1976 வரை பிரசங்கித்து வந்தார்கள். ஹேஸல்ட் நகரில் புதிதாக சபை துவங்கப்பட்டது. பல ஆண்டுகளாக சபை சகோ. ஆம்சம்ஸ் இல்லத்தில் கூடி வந்தது.

1978ல் துவங்கி பிளேர்ராபர்ட்ஸ் என்பவர் சகோ.டேவிசன்னுடன் மாணவ சுவிசேஷகனாக ஏன்டவொர்த்தில் பணியாற்றி வந்தார். அவர் லீவன் நகரில் குடியிருந்தாலும் அதற்குப்பின்

முறையாக சபைக்கு முறையாக உதவி செய்ய ஆரம்பித்தார். 1985-ல் அவரும் அவரது மனைவியும் ஏன்ட்வெர்ப் நகருக்கு குடிவந்து முழுநேர ஊழியராகப் பணியாற்றினர். 1991-ல் கனடாவுக்குத் திரும்பினார்கள். தற்பொழுது ஏன்ட்வெர்ப்பில் பணியாற்றும் பால் பிரேஜில் அங்கு 1989 முதல் பணிபுரிந்து வந்தார். அங்குள்ள சபை இதுவரை தாங்கள் வாடகை கொடுத்து நடத்தி வந்த கட்டிடத்தை விலைக்கு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எல்லோரும் எளிதாக வந்து சேர வசதியாக உள்ள 'பிரீவே' என்ற இடத்தில் அது அமைந்திருக்கிறது.

ரிஜ்மெனாம் (பழைய பெயர் : பூர்ட் மீர் பீக்)

1973ல் ஒரு பொறியியல் வல்லுநர் ஒரு அஞ்சல் வழி வேத வகுப்பில் சேர்ந்தார். முதலில் அவர் தான் கத்தோலிக்கராக இருந்தமையால் யெகோவா சாட்சிகளுடன் சேர்ந்து கொண்டு படிக்கத் துவங்கினார். அவருக்கு தான் பின்பற்றிய கத்தோலிக்க விசுவாசத்தை உறுதிப்படுத்துவது அவர் நோக்கம். அதற்கு முதலாவது எப்படியும் வேதத்தை வாசித்தாக வேண்டும். வேதத்தை கற்கக்கற்க ஜெஹோவா சாட்சிகளின் தவறுகளை அறியலானார். அதே சமயத்தில் தான் பின்பற்றிவந்த கத்தோலிக்கத் திருச்சபையின் போதனையும் வேதாகமத்திற்குக் கூறப்பட்டவை களின்படி மாறுபட்டதையும் அறிந்து கொண்டார். தான் இவற்றைத் தவறாகத் தான் புரிந்து கொண்டோம் என்று உடன் கத்தோலிக்க விசுவாசிகளுடனும், குருமார்களுடனும் கலந்து பேச ஆரம்பித்தார். அவரின் ஐயங்களுக்கு அவர்கள் சரியான விளக்கங் கொடுக்க வில்லை. இதற்கிடையில் அவர் வேதாகமத்தின் பல மொழி பெயர்ப்புகளைப் படித்து முடித்துவிட்டார்.

அவரிடம் சகோ. டேவிசனால் ஜெஹோபா சாட்சிகளுக்காக எழுதப்பட்ட கைப்பிரதியொன்றைக்காட்டி அதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்டார். ஜெஹோவா சாட்சிகள் அவரை

அழைத்து இயேசுவின் தெய்வத்துவத்தைக் குறித்து கலந்து பேச அழைத்தனர். வேதாகமத்தின் தெளிவான கருத்துக்களுக்கு எதிராக தங்கள் கொள்கையினை நிலைநிறுத்திப் பேச கிரேக்க மொழி தெரிந்த ஒரு போதகருடன் ஒரு தர்க்கவாதம் செய்ய அழைத்தனர். அந்தத் தர்க்கமும் தங்கள் கொள்கைக்கு நிற்க முடியவில்லை என்பதைக் கண்ணுற்று, சகோ டேவிசனுடன் இருந்த உறவை சடுதியில் துண்டித்து விட்டனர். ஆனால் முதலில் கூறப்பட்ட பொறியியல் வல்லுநர்கள் தொடர்ந்து வேதாகமத்தையும் கற்றுவரலானார்.

அவர் பெயர் ஜே.வானடெசில், சுமார் ஓராண்டுக்குப்பின்னர் தனது கீழ் வீட்டிலேயே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். அங்கு நிறையத் தண்ணீர் இருந்தது. ஏன்ட்வெர்ப்பல் 6 மாத காலம் ஆராதனைகளில் பங்கு பெற்றார். அதற்குள் வேறு ஒருவருக்கு சகோ. டேவிசன் ஞானஸ்நானம் கொடுத்தார். இருவரும் சேர்ந்து பூர்ட்பீக் நகரில் ஆராதனை செய்யத் துவங்கினார்கள்.

பொதுவாக, எல்லாருக்கும் தங்கள் குடும்பத்தில் உள்ளவர் களுக்கு சத்தியத்தைக் கற்பது என்பது கடினமான காரியமே சகோ. வான்டெசில் காரியங்களை எடுத்துச் சொல்லி விளக்கி 83 வயதான தனது தாயாரையும் (அவர் கத்தோலிக்க விசுவாசி) அவரது சகோதரரையும் ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தினார். அவ்வாறே தந்து மனைவி இரண்டு மகன்கள் ஒருமகள் ஆகியவர்களும் ஞானஸ்நானத்துக்கு நடத்தினார். தொடர்ந்து தனது மூன்று சகோதரிகள், மைத்துனர், உறவினர், சகோதரியின் மகள், ஒரு மகன் இவ்வளவு பேர்களையும் ஞானஸ்நானத்துக்குக் கொண்டு வந்தார். மற்றவர்களுக்கும் சத்தியத்தைச் சொல்லி ஞானஸ்நானம் கொடுத் தார். இந்த சபை அவரது மகளின் வீட்டில் ஆராதிக்கப் வருகின்றது.

## ஹேசல்ட்

சகோ. டேவிசன் இந்தப் பகுதிக்கு வந்து 1976ஆம் ஆண்டில் சேர்ந்தார். அங்கு விசுவாசிகள் தங்கள் இல்லங்களிலேயே கூடி வந்தனர். பின்னர் வேறு ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதே இடத்தில் ஆராதித்து வருகிறார்கள்.

கனடாவிலும், யூஎஸ் நாட்டிலும் இருந்து வந்த விசுவாசிகளான மாணவர்களின் துணையுடன், அந்த நகர் முழுதுக்கும் அச்சடித்த தாள்கள் வழங்கப்பட்டன. வீடுவீடாகச் சென்று விடாமல் அவர்கள் கூட்டங்களுக்கு வரும்வரை இதைச் செய்து வந்தனர். இந்த இதழ்களின் மூலம் அறிய வந்த ஒரு கணவன் மனைவியுடன் சகோ. டேவிசன் கலந்து உறையாடி வந்தார். அவர்கள் டோனி கீன்ஸ் என்ற ஒரு மின்னணுப் பணி யாளரை அறிமுகம் செய்துவைத்தனர். இவர் பல காலமாக சத்தியத்தை அறிந்து கொள்ள ஆர்வமாகத் தேடுதலில் இருந்தவர். தாம் அறிந்தபடி பலமுறை ஞானஸ்நானம் எடுத்தாலும் எல்லா இடங்களிலும் சபையை விட்டுச்சென்று விடுவார். ஒரு சபை பிரிவில் சேராமல் கூட கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்பதைக் கேட்டு மகிழ்ந்து தான் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார். டோனி என்ற அவர், தனது அண்டை வீட்டுக்காரர்கள் மார்மன் சபையுடன் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர் என்றறிந்து அவர்களுடன் தானும் சேர்ந்து ஆராதிக்கலாமா என்று கேட்டார். அவர்கள் விரைவில் கிறிஸ்தவரானார்கள். அந்தச் சபையுடன் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றினார். தற்பொழுது சகோ. கீன்ஸ் (ஓய்வு பெற்றள்ளார்) பலருடன் சேர்ந்து பிரசங்கிக்கவும் போதிக்கவும் சுவிசேஷத்தை அறிவிக்கவுமான பணிகளை ஹேசல்ட் பகுதிகளில் செய்து வருகிறார்.

## ரோட்சிலார் (லோவனுக்கு அருகில் உள்ளது)

1978-ம் ஆண்டு உலகப்புகழ்பெற்ற பல்கலைக்கழகம் உள்ள யோவன் நகரில் மாற்கு, பிரேஜல் லேரிகுட், மற்றும் பிளேர்

ராபெர்ட்ஸ் ஆகியோர் சேர்ந்து ஒரு சபையை ஆரம்பித்தனர். 1976ஆம் ஆண்டு பிளமிங் நகரங்களை எல்லாம் பார்த்தறிந்த பின் லோவென் பகுதியைத் தெரிவு செய்தனர். பால பிரேஜில் 1986 முதல் 1989 வரை லோவனில் பணிபுரிந்து பின்னர் ஏன்ட் வர்ப்பில் உள்ள சபையில் ஊழியம் செய்யச் சென்றார். மாற்கு பிரேஜில் மற்றும் லேரி குட் 1993ல் சென்று விட்டனர். 1990-ல் ஏன்டவெர்ப்பில் முதல் ஞானஸ்நானம் எடுத்த ரிச்சர்டு அசாம்ஸ் இந்த நகர் சபையில் முழுநேர ஊழியராகப் பணியாற்றினார். அவர் வல்லமையான மேடைப் பிரசங்கி, வீடுகளைச் சந்தித்து நற்செய்திப்பணி செய்வதிலும் வல்லவர். பிளான்டர்ஸ் நகரின் பல பாகங்களுக்குத் தமது வாகனத்தில் பயணம் செய்து வேத வகுப்புகள் நடத்துகிறார் தொடர்ந்து பிரக்கஸ், ரோஸ்லேர் நகர்களில் நற்செய்திப் பணி செய்ய சபைக்கு உதவி வருகிறார்.

## பிரெஞ்சு மொழி பேசும் சபைகள் - சில வரலாற்றுக் குறிப்புகள்.

- வெர்வியர்ஸ்

வெர்வியர்ஸ் நகருக்கு அருகில் இருக்கும், பெபின்ஸ்டர் என்ற இடத்தில் கொரடோ (டெவ்னரி)விலிருந்து வந்த டென்னிஸ் பயட்டி என்ற இளம் கிறிஸ்தவர், இரண்டாம் உலகப்போரின்போது வந்து தங்கினார். போர் முடிந்த பின்னர் அங்கிருந்த நட்பான ஒரு குடும்பத்துடன் கடிதத் தொடர்பு கொண்டார். அவர்கள் மூலமாக வேறு ஒரு பெண்ணும் சபைக்காரியங்களில் அக்கரை காட்டினார். உடன் டென்னிஸ் பலகாலம் திரு ஏ.சி.பெரி தனது உறவினர், எஸ், எப்.டின்மெடேன் இவர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். அதன்பின் ஞனஸ்நானம் பெற்றார். ஹாலந்து நாட்டில் இருந்து ஜேக்கப் வேன்டர்விஸ் மற்றும் ஜெரிகளியில் ஓடிஸ் கேட்வுட் இருவரும் அங்கு வருவதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பலர் ஞானஸ்நானம் பெற்றனர். சகோ. வேன்டர்ஸ் 1949 வரை

அவர்களுடன் பணிபுரிந்தார். மாதம் தவறாது சுற்றிப்பார்த்து வருவார்.

எஸ்.எப். டிம்மர்மேன் அவரது குடும்பம் ஆகியோர் 1948-ல் பெல்ஜியத்தில் உள்ள பெப்பின்ஸ்டன் நகருக்கு வந்தனர். வேறு ஒரு குழுவுடன் பணியாற்றினார். அந்தக்குழு, லீஜ் நகரில் சென்று பணிபுரிந்தனர்.

1950ஆம் ஆண்டு ஜுலை மாதம் சில நற்செய்தி கூட்டங்கள் வெர்வியஸீல் நடத்தப்பட்டன. அதன் பலனாக, ஒரு சிலர் கூடி வந்து ஆராதித்தனர். 1952ல் சகோ. டிம்மர்மேன் வெர்வியர்ஸ் நகருக்கு வந்து சபையில் பணியாற்றினார். 1955 முதல் பகுதிவரை பெப்பின்ஸ்டர் சபை வெர்வியர்ஸ் சபையுடன் இணைக்கப் பட்டிருந்தது. சபை பல வாடகைக் கட்டிடங்களில் கூடி ஆராதித்து வந்தனர். 1966-ல் ஓர்ட்மன்ஸ் என்ற இடத்தில் ஒரு கட்டிடத்தை வாங்கி ஆராதித்தனர். தொடர்ந்து இன்று வரை அது நடைபெற்று வருகிறது.

டிம்மர் மேன்ஸ் 1961ல் வெல்வியர்ஸ் பகுதியை விட்டுச் சென்றபின் 1970 வரை டான் டெய்லர் அந்தப் பணியைச் செய்தார் அடுத்து ஜீன் - மேரி ஃபிரிராட் பொறுப்பேற்று இன்று வரை நடத்துகிறார். சகோ பிரிராட் அவர்களின் மனமாற்றத்தைக்குறித்து எஸ் எப் டிம்மர்மேன் இவ்வாறு எழுதுகிறார்.

''1953-ல் பிற்பகலில் நான் பணியாற்றிவந்த இடத்தில் ஜீன் பிரிரெட் என்ற இளம் வாலிபர் வந்தார். எங்கள் பணியில் ஆர்வம் காட்டினார். ஆராதனைக்கு வரும்படி அழைப்பு அவருக்கு கொடுக்கப்பட்டது. தொடர்ந்து ஆராதனைக்கு வந்தார் விரைவில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார் (1954). தனது தகப்பனார் தாயாரை ஆராதனைக்கு அழைத்து வந்தார். அவர்களும் ஞானஸ்நானம் பெற்றனர். தனது நண்பர்களை அழைத்து வந்தார். வேறொரு சம்பந்தமில்லாத குடும்பமும் வந்து ஞானஸ்நானம்

பெற்றனர். அவர் உள்ளூர் சபையின் முக்கிய சுவிசேஷகரானார் (1970 முதல்). சுவிசேஷ கூட்டங்கள் நடத்தும்படி அவருக்கு பிரெஞ்சு மொழி பேசும் ஐரோப்பிய மக்களிடமிருந்து நிறைய அழைப்புகள் வரும். மேலும் பிரெஞ்சு ஆப்பிரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளில் பணிபுரிந்து வந்தார்கள்.

சூஸானைப்பற்றி : சிலர் ஜீன்மேரியின் மனைவி அவரைப் பற்றி டான் டெயலர் இவ்வாறு எழுதுகிறார். கத்தோலிக்க சபையில் மிக தீவிரமாகப் பணியாற்றும் நல்ல இளவயதினரான சூசனை நமது கூட்டங்களுக்கு வரும்படி அழைத்தோம் (சோல்வர்ஸ்டார் கூட்டங்கள்) கடைசி நிமிடத்தில் வருவதாக ஒத்துக்கொண்டார். ஆனால் கத்தோலிக்க ஆராதனைக்கும் செல்வதாகவும், முகாமுக்கு வருவதாகவும் ஆனால் வேதவகுப்புகளுக்கு வரமுடியாது என்ற நிபந்தனையின் பேரில் நம் கூட்டங்களுக்கு வரமுடியாது என்ற நிபந்தனையின் பேரில் நம் கூட்டங்களுக்கு வர ஒத்துக்கொண்டார். ஜேக்ஸ் மார்ஸல்ஸ் இந்த வகுப்புகளை நடத்தினார். கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வம் உண்டானது. முகாம் முடிந்த பின் வேதத்தை வாசிக்க ஆரம்பித்தார். 1967ல் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார். அதுமுதல் சூசன் எங்கள் சபையில் ஒரு சக்தியாக விளங்கி வருகிறார். பிரெஞ்சு வேதாகமப்பள்ளியில் அதிகமாகப் பணி செய்கிறார். அவர் ஆப்பிரிக்கா, பெல்ஜியம், பிரான்சு நாடுகளில் இறைப்பணி செய்கிறார்.

1999-ல் ஹேன்டர்ஸில் உள்ள பிரீட் ஹார்டிமேன் பல்கலைக்கழகம் (டெனஸி) நமது வெர்வியர்ஸ்ஸில் உள்ள கட்டிடங்களில் ஐரோப்பா விஸ்தரிப்பு கல்விப்பணிக்கென்று வகுப்பு நடத்தினர்.

## லீஜ்

1948ல் எஸ்எப் டிம்மர்மேன் அவரது குடும்பம் பெல்ஜியத்துக்கு வந்தபோது கிறிஸ்தவர்கள் லீஜ் என்ற இடத்தில் கூடிவந்தனர். ஒரு தனி வீட்டில் சிலகாலம் சந்தித்தபின் 1950 வாடகைக்கு ஒரு பொது இடத்தை அமர்த்தினர். டோனால்டு இயரவுட் 1951-1953ல் லீஜில் பணி செய்தார். ஜேலீ, மார்க்கரெட் ராபர்ஸ் லீஜ் என்ற ஊருக்கு 1954ல் சென்றனர். 1966 வரை அங்கிருந்தனர். 1958ல் அவர்களது பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட தாயாரும். அவர்களுடன் வந்து தங்க வேண்டும் என்று விரும்பினர் (அவர் கணவன் இறந்தபின்) 3 ஆண்டுகளுக்குப்பின் லீஜில் இறந்து போய் அடக்கம் செய்யப்பட்டார். 1967 ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. அங்கு சபை நடைபெற்று வருகிறது. கட்டிடத்தின் பாதி உள்ளூர் சபையினராலும் (கடன் பொறுப்பெடுத்துக்கொண்டனர்) மறுபாதி வேறு இடங்களிலிருந்தும் வந்து சேர்ந்தது.

ஜோஸப் சால்வடார் இத்தாலியிலிருந்து பெல்ஜியத்துக்கு வந்து நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்தார். சுகவீனப்பட்டிருந்த போது லீஜ் சபையின் உறுப்பினராயிருந்த ஒருவர் அவருக்கு ஒரு புதிய ஏற்பாட்டைக் கொடுத்தார். அப்பொழுது அவர் கத்தோலிக்க மார்க்கம் தான் கிறிஸ்து காட்டிய மார்க்கத்தில் மிகச் சரியானது என்று நிரூபிக்கப்போவதாகக் கூறினார். தான் நோயுற்ற காலங்களில் புதிய ஏற்பாடு முழுமையும் கற்றார் முடிவில் தான் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார். அந்த நாள் முதல் அவர் நல்ல ஆர்வமுள்ள வேத மாணவராகவும், சபைத்தலைவராகவும் இருந்து வருகிறார்.

## பிரஸ்ஸல்ஸ்

1953ல் பிரஸ்ஸல்ஸ் திருச்சபை டோனால்டு இயர்வுட் மற்றும் ஹில்டர் சி.டெரி என்பவர்களால் துவக்கப்பட்டது. வில்லியம் லெமன்ஸ் அங்கு 1954 முதல் 1960 வரை பிரஸ்ஸல்ஸ் - அருகில்

ஏன்டர்லெக்ட் என்ற இடத்தில் பணிபுரிந்தார். 1958ல் உலகச் சந்தை பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற போது சிறப்புக் கூட்டங்கள் நடத்தியது. கைப்பிரதிகள் வழங்கப்பட்டன. 1950 கடைசியில் ரூடிட்ரோன் என்ற ஊரில் ஒரு கட்டிடம் வாங்கப்பட்டது. டெரி குடும்பத்தினர் சென்றபின் எஸ்எப். டிம்மர்மேன் வெர்வியர்ஸில் இருந்து பிரஸ்ஸல்ஸ் வந்து பணியைத் தொடர்ந்தார். 1964 வரை அங்கு இருந்தார். அதுமுதல் ரே.எம்.நெல்சன் (62 - 67) ஆல் வால்ல் (1967 - 69), ஜான் மர்ர்பீ (1967 - 72) ரேண்டி கிவ்வன்ஸ் (1979 - 89) ரான் ஹோபல்மேன்ஸ் (1978 - 82) கெனந்வில்சன் (91 - 95) மற்றும் பலர் பணிபுரிந்தனர்.

1972ல் ஜீன் டிபுரூக் என்பவரின் தபால் பெட்டியில் ஒரு துண்டுத்தாள்கள், ஒரு அஞ்சல் வழி வேதாகம வகுப்பு நடத்துவது பற்றி விநியோகிக்கப்பட்டது. அவர் அந்த வகுப்பு எடுத்துப் படித்தபின், ஆராதனைக்கு வர ஆரம்பித்தார் ஞானஸ்நானம் பற்றிப்பேசக்கூடாது என்றும், தானே எந்த வற்புறுத்தலு மின்றி முடிவு செய்வதாகவும் கூறினார். 1973ல் ஞானஸ்நானம் பெற்றார். ஆர்வமிக்க கிறிஸ்தவ தலைவராக இருக்கிறார். அவர் 1981 முதல் 1986 வரை பிரஸ்ஸல்ஸில் ரேடியோ மூலம் பிரசங்கித்து வேத வகுப்புகள் நடத்தினார்.

1988-ல் ரூ டி ட்ரோன்-ல் இருந்த சொத்து விற்கப்பட்டது. வேறு சொத்து 14, ரூ டி லா ராயூட் என்ற இடத்தில் வாங்கப்பட்டது. இங்கு ஒரு சிறிய பிரெஞ்சுக்குழுவும், ஒரு ஆங்கில மொழிபேசும் சபையும் ஆரானை நடத்தி வருகின்றனர்.

லா டாக்கெரியில் ஒரு சிறிய சபை ரூ கேஸ்டர் மான்ட், 18 என்ற இடத்தில் ஆராதனைக்கு கூடி வருகிறார்கள். ஜீன்வான் ஹார்ப் என்பவர் கடந்த 30 ஆண்டுகளாக உள்ளூரில் அதனை முன்னின்று நடத்துகிறார். விரிவான சுவிசேஷப் பணி நாமர்மான்ஸ் பகுதிகளில் செய்யப்பட்டபோதிலும், அங்கு ஒரு சபை உருவாகவில்லை.

அங்கு வாழ்ந்த அநேகக் கிறிஸ்தவர்கள் வேற நகர்களுக்கு குடி பெயர்ந்து சென்று விட்டனர்.

## ஆங்கில மொழி பேசும் சபைகள் - சில வரலாற்றுக் குறிப்புகள்

பிரஸ்ஸல்ஸ் பெல்ஜியத்தின் தலைநகர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைநகரும்கூட, அது பல கலாசார மக்கள் வாழும் ஒரு நகரம் (40% பெல்ஜியம் 60% பெல்ஜியரல்லாத வேறு இன வகையினர்). பிரஸ்ஸல்ஸ்-ல் தங்கள் வேலை காரணமாக வசிக்கும் ஆங்கிலம் பேசும் கிறிஸ்தவர்கள் உள்ளனர். எனவே அவர்கள் மத்தியில் ஆங்கில மொழியில் ஊழியம் செய்ய வேண்டியது. 1980முதல் பிரஸ்ஸல்ஸின் ஆங்கில மொழியில் நடத்தப்படும் தனியான சபை இருந்து வருகிறது. வேறு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அங்கு தங்கியிருந்த நாட்களில் நல்ல இறைப்பணி செய்துள்ளனர்.

1985ல் இருந்து ஏர்னஸ்ட் ஏஷுன் அங்கு ஆங்கிலம் பேசும் சபையில் பிரசங்கித்து வருகிறார். அவரும் ஹாவாவும் பெல்ஜியத்துக்கு வந்தபோது கானா நாட்டைச் சேர்ந்தவரான ஹாவா கிறிஸ்துவின் சபையை நாடினார். முன்பு ஏர்னஸ்ட் ஹாவாவுடன் ஆராதனைகளில் கலந்து கொள்ள மாட்டார். அவர் வேறு ஒரு சபையில் தன்னார்வ பிரசங்கியாக இருந்து வந்தார். ஆனால் பெல்ஜியத்துக்கு வந்தபின் அவருடன் ஆராதனைக்குச் சென்று கர்த்தரின் வழிகளை இன்னும் சரியாகப் புரிந்து கொண்டு. அவர் பணியைத் திறமையாகச் செய்ய பிராங்க பார்க்கர் ஓடல்லீ, ரான்டி கிவ்வன்ஸ் ஆகியோர் சிறப்புப் பயிற்சிகள் கொடுத்தனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்து அஞ்சல் வழியாக தொடர் படிப்பும் படித்தார்.


1986 முதல் ஏர்னஸ்ட் சபைக்காக முழுநேர ஊழியம் செய்து வருகிறார். (அவருக்கு பகுதி பொருளாதாரம் கொடுக்கப்படுகிறது)

ஏர்னஸ்ட் மிக அருமையான செய்தியாளர் அவரும் ஹாவாவும் வேத பாட வகுப்புகளை நன் முறையில் நடத்துகிறார்கள். அவர் பிரஸ்ஸல்ஸில் சுமார் 120 பேரை ஞானஸ்நானத்திற்கு வழி நடத்தியிருக்கிறார். அவர்களில் அநேகர் அங்கு இருந்து வேறு இடங்களுக்குச் சென்று அங்கே இறைப்பணி செய்கின்றனர். ஒரு இஸ்லாமியர் கானா நாட்டில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்; மற்றவர்கள் அமெரிக்கா ஐக்கிய நாடுகள், நைஜீரியா, மலேசியா, கனடா, இங்கிலாந்து, ஹாலந்து நாடுகளுக்குச்சென்று அங்கு பணிபுரிகின்றனர். ஏர்னஸ்ட் பெல்ஜியம், ஹாலந்தில் வாழும் கிறிஸ்தவர்கள் மூலமாக பாதி பொருளாதார உதவி பெற்று வருகிறார். ஹாவா அலுவலகத்தைச் சுத்தம் செய்து கொண்டும் 4 பேருள்ள தன குடும்பத்தைப் பராமரிக்கவுமான பணிகளைச் செய்து வருகிறார்.

1987 - 1991 காலங்களில் ராபர்ட் கிரிக் (மூத்தவர்) ஏர்னஸ்ட் உடன் சேர்ந்து பிரசங்கம் செய்து வருகிறார், அவர் கைப்பிரதி சுவிசேஷப்பணி செய்வது பற்றிய சிறப்பு முகாம் நடத்தினார்.

## ஷேப் ஊழியம்

மான்ஸ் நகரின் அருகாமையில் உள்ள ஷேப் என்ற நகரில் ராணுவ வீரர்கள் உள்ளடக்கியது ஆங்கில மொழியேயாம். ஒரு சபை பல ஆண்டுகளாக நடந்து வருகின்றது.



# நம்பிக்கை

- ராய். வி. பாமர்

பவுல் கொலோசெயருக்கு எழுதும்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். அந்த நம்பிக்கையைக் குறித்து நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள். அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப்பலன் தருகிறது போல உங்களிடத்திலும் வந்து நீங்கள் அதைக் கேட்டு தேவகிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல் அது உங்களுக் குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது (கொலோ 1:56).

மேலும் அவர் 22-ம் வசனத்தில் கூறுகிறது. ''நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினாலுண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல் ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்தில் நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும் (கொலோ 1:22). மேலும் கூறுகிறது ஆதி காலங் களுக்கும், தலைமுறை தலைமுறைக்கும் மறைவாயிருந்து இப் பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு காக்கப்பட்ட இரகசிய மாகிய வேதவசனத்தை பூரணமாகத் தெரியப்படுத்துகிறதற்கு.... இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம் ( கொலோ 1:25-27). இதையே அப்போஸ்தலர் பவுல் ரோமர் 5:1,2ல் கூறுகிறார்.

''இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக் கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து தேவமகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையினாலே

மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:1-2) ''அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவத்தினாலே மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்மிடையே ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:3-5).

## *கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கை*

அவர் மூலமாக விசுவாசத்தின் மூலம் அவருடைய கிருபைக்குள் வழி நடத்தப்படுகிறோம், மேலும் ரோமருக்கு பவுல் மேலும் கூறுகிறார். ''பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத் தினால் உண்டாகும். எல்லாவித சந்தோஷத்தினாலும் உங்களை நிரப்புவாராக'' (ரோமர் 15:13) மேலும், ''அந்த நம்பிக்கையினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல, ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டு வதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில் அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்'' (ரோமர் 8:24-25).

நம்பிக்கையினாலே இரட்சிக்கப்பட்டோம். ''நம்பிக்கை யிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமை யாயிருங்கள் (ரோமர் 12:12). ''பொய்யுரையாத தேவன் ஆதி கால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருக் கிறார்'' (தீத்து 1:3). மேலும் கூறுகிறார் ''ஏனெனில் எல்லா மனுஷர்களுக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி தாம் அவதியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்

பார்த்துக் கொண்டிருக்கும் படி நமக்குப் போதிக்கிறார் " (தீத்து 2:11-14).

தொடர்ந்து 3:5-7ல் அப்போஸ்தலர் கூறுவது "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தம் இரக்கத்தின் படியே மறு ஜென்ம முழுகினாலும் பரிசுத்தாவியி னுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்; தமது கிரியையினால் நாம் நீதிமானாக்கப்பட்டு ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத் தக்கதாக அவர் நமது இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து மூலமாய் அந்தப் பரிசுத்த ஆவியை நம் மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்" (தீத்து 3:5-7).

பேதுரு அப்போஸ்தலன் இதுபற்றிக்கூறும்போது "நம்மு டைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசுக்கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுந்ததிற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கையுண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப் பித்தார். கடைசிக்காலத்தில் வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டு இருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:3-5).

